யுனெஸ்கோ

உலகைக் காட்டும் ஜன்னல்

# கூரியர்

ஜூன் 1968
ஆண்டுச்
சந்தா
ரூ. 10.50.
தனிப்பிரதி
ரூ. 1.00



## மயக்க மருந்துகளில் மோசடி

## பெருகி வரும் பேரபாயம்



Photo © Verena Mandelmann, Lausanne

லகக் கலைக்
வூலங்கள் 25

## அருள் புரியும் அன்னை

ஸ்விட்ஸர்லாந்திலுள்ள 14வது நூற்றுண்டைச் சேர்ந்த ரஜுன்ஸ் சர்ச்சிலுள்ள இந்த சுவர் ஓவியத்தில் விசுவாசிகள் கன்னி மேரியின் உடை மடிப்பில் தஞ்சமடைகின்ற காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. சென்ட் ஜார்ஜுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்த சர்ச் அழகான சுவர் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. வெண்கலக் கருவிக் கால முதலே மக்கள் வசிக்கும் இவ்விடத்தில் மிகப் பழைய சர்ச் இது.

உலகைக் காட்டும் ஜன்னல்

யுனெஸ்கோ **கூரியர்**

ஜூன் 1968

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினால் வெளியிடப்படுகிறது.

**யுனெஸ்கோவினால் பதினோரு பதிப்புகளாக வெளியிடப்படுகிறது**

ஆங்கிலம்
ஃபிரெஞ்சு
ஸ்பானிஷ்
ரஷ்யன்
ஜெர்மன்
அராபிக்
அமெரிக்க ஐக்கிய நாடு
ஜப்பானிஸ்
இத்தாலியன்
ஹிந்தி
தமிழ்

*விற்பனை, வினியோக அலுவலகம்:*
441, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை-10.
*ஆண்டுச் சந்தா ரூ. 10.50*

யுனெஸ்கோ கூரியர், செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. செப்டம்பர் அக்டோபரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) காப்பிரைட் அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு பிரசுரித்துக் கொள்ளலாம். அவ்வாறு பிரசுரித்த இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும் போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெற வேண்டும். காப்பிரைட் அல்லாத போட்டோக்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

*ஆசிரியர் அலுவலகம்:*
யுனெஸ்கோ, பிளேஸ் த ஃபான்டினுய்
பாரிஸ்-7, ஃபிரான்ஸ்.
*பிரதம ஆசிரியர்:*
ஸாண்டி காஃப்ளர்
*உதவிப் பிரதம ஆசிரியர்:*
ரெனி காலோஸ்
*பிரதம ஆசிரியருக்கு உதவியாளர்:*
லூஸியோ அட்டினெல்லி
*நிர்வாக ஆசிரியர்கள்:*
ஆங்கிலப் பதிப்பு: ரொனுல்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு: ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு: அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு: விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு: ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு: அப்தல் மோனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு: ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்யோ)
இதாலியப் பதிப்பு: மரியா ரெமிட்டி (ரோம்)
இந்திப் பதிப்பு: ஏ. சந்திரஹாஸ் (டில்லி)
தமிழ் பதிப்பு: எஸ். கோவிந்தராஜுலு (மதராஸ்)
*ஆராய்ச்சி:* ஒல்கா ரோடல்
*அமைப்பு, சித்திரம்:* ராபர்ட் ஜாகுமின்
எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்பட வேண்டும்.

The UNESCO Courier

June 1968 No. 12

**இதழ் 12.**

1968
மனித உரிமைகளுக்
கான சர்வதேச ஆண்டு

6 - JUL 1968
MADRAS

பக்கம்

4 மயக்க மருந்துகளில் மோசடி — பெருகி வரும் பேரபாயம்

6 போதைப் பொருள்களுக்கு சர்வதேசக் கட்டுப்பாடு
—விளாடிமிர் குஸேவிக்

8 அபினிலிருந்து எல்எஸ்டி வரை மயக்க மருந்துகளின் நீண்ட வரலாறு
—மார்ஸல் கிரேனியர் - டோயக்ஸ்

13 மனதை மாற்றும் மயக்க மருந்துகள் ஒரு விஞ்ஞான ரீதியான மதிப்பீடு
—ரிச்சர்ட் எச். புளும்

18 எல்எஸ்டி — இளைஞர்களுக்கு புதிய அபாயம்
—கார்ல் ஈவாங்

20 நடை முறையில் மாத்திரை (மயக்க மருந்துகள்)
—கிரிகரி அவ்ருட்ஸ்கி

24 சர்வ தேசப் போலிசும் மயக்க மருந்துகளின் ரகசிய உலகமும்
—ஜீன் நெபோட்

30 இனம், இனத்துவேஷம் பற்றிய அறிக்கை

2 உலகக் கலைக் கருவூலங்கள் (25)
அருள்புரியும் அன்னை (ஸ்விட்ஸர்லாந்து)

Photo © Holmes Lebel - Kovalev

No 5 - 1958 MC 68-1-235 A



**அட்டைப் படம்**

மயக்க மருந்துகளைத் தவருகப் பயன்படுத்தும் பிரச்னை அண்மையில் மிகப் பெரிதாகியுள்ளது. பெரும்பாலான நாடுகள் அபினி, கஞ்சா போன்றவற்றை மருந்துகளில் தவிர வேறெதற்கும் பயன்படுத்தக் கூடாது எனத் தடுத்துள்ளன. ஆனால் செயற்கை முறையில் செய்யப்படும் அமைதிப்படுத்தும், கிளர்ச்சியூட்டும், மனதை மாற்றும் மருந்துகளால் இப்போது புதிய பிரச்னைகள் முளைத்துள்ளன. மாயக் காட்சிகளை தோற்றுவிக்கும் மருந்துகளால் ஏற்படும் உணர்வுக் கோளாற்றை படம் உருவகப்படுத்துகிறது.

# மயக்க மருந்துகளில் மோசடி —பெருகி வரும் பேரபாயம்

உலகின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மக்களும் உட்கொண்டால் உடல் நோவைப் போக்கி, இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தும் பொருள் களைக் கண்டுபிடித்துள்ளனர்.

இப்பொருள்களில் மிகவும் முக்கியமானவை அபின், கோக்கா செடியின் இலை, கஞபிஸ் ஆகியவை யாகும். கோக்கா இலையில் கொகெய்ன் சத்து உள்ளது. கஞபிஸ்ஸிலிருந்து மரிஜுவானு, ஹஷிஷ், பங்க் போன்றவை தயாரிக்கப்படு கின்றன. அபினி மருந்துக் குணம் மிக்கது. இதுநாள்வரை மனிதகுலத்துக்கு இது ஒரு வரப் பிரசாதமாக உள்ளது. ஆனால் கோக்கா இலைக்கும், கஞபிஸ்ஸுக்கும் ஒரு காலத்தில் மருத்துவ உபயோகம் இருந்த போதிலும் இன்று வழக் கொழிந்து விட்டன.

ஆயினும் இந்தப் பொருள்கள் யாவுமே அபாயகரமானவை. ஏனெனில் அவை தற் காலிக சாந்தியையும் மனநிறைவையும் அளிக்கக் கூடியவை. ஒருவருக்கு வெகு குறுகிய காலத்தில் இவற்றின் மீது பற்று ஏற்பட்டு பிறகு முற்றிலும் அதற்கு அடிமைப்பட்டு விடும் நிலை ஏற்பட்டு விடும். இவ்வாறு அடிமைப்படுவது சமூகத் துக்கும் அவற்றைப் பயன்படுத்துகிறவர்களுக்கும் தீங்கு விளைவிக்கிறது. சர்வதேசக் கட்டுப்பாட்டில் உள்ள வேறெந்தப் பொருளையும் விட இன்று கஞபிஸ்ஸைத் தவருகப் பயன்படுத்துவது பரவ லாகவுள்ளது.

சமீப ஆண்டுகளில் புதுவகை 'ஊக்கிகள்' தோன்றி வருவதையும் மக்களால் பயன்படுத்தப் படுவதையும் பார்த்து வருகிருேம். போதைப் பொருள்கள் பற்றிய ஐ. நா. கமிஷன் 1968 ஜனவரியில் தயாரித்த அதிகாரபூர்வமான அறிக் கையில் சர்வதேசக் கட்டுப்பாட்டின் கீழ் வராத இந்த பார்பிடுரேட்டுகள், ஆம்பிடாமின்கள், மாயத் தோற்றமேற்படுத்தும் எல். எஸ். டி. போன்ற பொருள்களின் பெருகி வரும் அபாயம் பற்றி குறிப்பிட்டுள்ளது.

மருந்தாகவன்றி மற்றவிதமாக இப்பொருள் களை உட்கொள்வது பலநாடுகளில் ஏற்கனவே தீவிர சமூக, பொது சுகாதாரப் பிரச்னையாகி விட்டது; இதர நாடுகளில் பிரச்னை பெருகத் தொடங்கி வருகிறது என்று அறிக்கை கூறுகிறது. இது மேலும் பெரிதாக வளர்ந்து விடக் கூடுமென்றும் தவருகப் பயன்படுத்துவது அதிக மானல் அதனை சமாளிக்கத் தயாராக இல்லாத நாடுகளில் உண்மையிலேயே பேரபாயமாகி விடும் என்றும் குறிப்பிடுகிறது.

19வது நூற்றுண்டின் இறுதிவரை போதைப் பொருள் பிரச்னை உலக அளவில் ஒன்றுபட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய ஒரு சர்வ தேசியப் பிரச்னையாகக் கருதப்படவில்லை. போதைப் பொருள்கள் வியாபாரமும் சட்ட பூர்வமான ஒன்ருகவே எண்ணப்பட்டது.

இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் போதைப் பொருள் கட்டுப்பாட்டுத் துறையில் பன்முக ஒத்துழைப்பு ஏற்பட்டதற்கு முன்பாக, தூரக் கிழக்கு நாடுகளில் போதைப் பொருள்களை இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்தும் பல உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டன. ஆயினும் பிரச்னை முக்கியமாக உள்நாடு சம்பந்தப் பட்டதாகத் தான் கருதப்பட்டது.

ஆயினும் 19வது நூற்றுண்டின் பிற்பகுதி யில் ஏற்பட்ட அபிவிருத்திகள் பிரச்னைக்கு ஒரு புது வடிவமளித்தன. முதலாவதாக தொழில் நுணுக்க முன்னேற்றத்தின் மூலம் ஆய்வுக் கூடங்கள் அபினி, கோக்கா இலைகளிலிருந்து ஏராளமான உப பொருள்களைத் தயாரிக்கத் தொடங்கின. மேலும் போக்குவரத்தும் சர்வ தேச வர்த்தகமும் விரிவடைந்தது தூரத்தையும் தேசங்களிடையே எல்லைக் கட்டுப்பாடுகளையும் குறுக்கி விட்டது. இதனல் உள்நாட்டுப் பிரச்னை யாக இருந்த ஒன்று உலக சமூகம் முழு வதையும் பாதிக்கும் பிரச்னையாகி விட்டது. சர்க்கார் தலையீடின்றி போதைப் பொருள் வியாபாரம் சகஜமாக நடைபெற விடக் கூடாத நிலையும் ஏற்பட்டது.

ஆரோக்கியத்துக்கும் சமூக நலனுக்கும் பெருங்கேடு விளைவிக்கும் இப்பிரச்னையை சமா ளிக்க பல நாட்டு சர்க்கார்கள் கூட்டு முயற்சி களை மேற்கொள்ள முன் வருவதற்கு அறிவுள்ள மக்களின் ஆதரவு உள்ளது. உலக ரீதியாக போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதற் கான அமைப்பை ஏற்படுத்தியதற்கான காரணம் மனிதாபிமானமே யாகும். பொருளாதாரக் காரணங்களை விட இதுதான் முக்கியமானது. மனித குலத்தின் பொது நலனை உத்தேசித்து அரசுகள் நடவடிக்கை எடுக்கும் தங்கள் உரிமை களைத் தாமே கட்டுப்படுத்திக் கொண்டு பொறுப்பை சர்வதேச அமைப்புகளிடம் விட்டுக் கொடுத்துள்ளன. இந்த அமைப்பு இப்போது ஐக்கியநாடுகள் சங்கத்தின் கீழ் இயங்குகிறது.

1968 ஜனவரியில் போதைப்பொருள் கட்டுப் பாட்டுக்கான ஐ. நா. கமிஷன் கூட்டத்தில் பேசிய ஜெனிவா ஐ. நா. காரியாலய டைரக்டர் ஜெனரல் பியர் ஸ்பினல்லி போதைப் பொருள் களை உபயோகிப்பது தொத்து நோய் போலப் பெருகி விட்டது என்றும் அதிகமான பேர்— குறிப்பாக இளைஞர்கள் இவற்றை உபயோ கிப்பதை எதிர்ப்பது நியாயமல்ல என்று கூற முற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இத்தகைய போக்கைத் தடுக்க உகந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினர்.

‘சந்து’’ குளிகையை—புகைப்பதற்கென தயாரிக்கப்பட்ட அபின்—பற்றவைக்கும் இந்த மனிதன் அதற்கு அடிமையாகி விட்டான். 18 வயதில் இவன் நல்ல விளையாட்டுக்காரனாக இருந்தான். ஒரு நாள் போட்டியில் கலந்து கொள்ள சிறிதளவு அபின் சாப்பிட்டான். அது வழக்கமாக வளர்ந்து விட்டது. இப்போது ஒரு நாளைக்கு 50 கிராம் அபினி புகைக்கிறான். அவன் வருவாய் முழுவதும் இதற்கே செலவாகி விடுகிறது.

WHO photo



# போதைப் பொருள்களுக்கு சர்வதேசக் கட்டுப்பாடு

**—விளாடிமிர் குஸேவிக்**

**போ**தைப்பொருள் கட்டுப்பாடு பிரச்னையில் சர்வதேச ஒத்துழைப்பு போன நூற்றாண்டின் முடிவில் தோன்றியது. அரசியல் வேறுபாடுகளை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று நடந்த முயற்சிகளில் ஒரு பகுதியாகவும் இது உருவாயிற்று.

அரசியல் துறையில் ஒத்துழைப்பு அவ்வளவு சுலபமாக உண்டாகிவிடக் கூடியதல்லவென்றாலும், அதற்கு வேண்டிய உத்வேகம் பெருகியே வந்தது.

பொருளாதார சமூகத்துறைகளில் ஏற்பட்ட ஒத்துழைப்பு மட்டும் மிக உற்சாகமளிப்பதாக இருந்து வந்திருக்கிறது. இவ்வெற்றியிலிருந்து அரசியல் ஒத்துழைப்புக்கு வேண்டிய சூழ்நிலை உண்டாகிறது.

இம்முறையில் பார்த்தால் போதைப் பொருள் கட்டுப்பாடு வெற்றிகரமானதென்றே கூறவேண்டும். அபினியைப் போன்றவற்றை மருந்துகளுக்கு உபயோகிக்கலாம். மற்ற முறைகளில் உபயோகிப்பது ஆபத்து. இதைத் தடுப்பதற்கு 60 ஆண்டுகளுக்கு முன் முதன் முதலில் அதிகார பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டது. உலக மக்களுடைய பொது நலனை உத்தேசித்து, இதில் தேசீய அரசுகள் வர வர தங்களுடைய சொந்த சுதந்திரத்துக்கு எல்லையேற்படுத்திக் கொள்ள முன் வந்திருக்கின்றன.

போதைப்பொருள் கட்டுப்பாடு முக்கியமான பிரச்னை. இதற்கு உலக ஒத்துழைப்பு மிக அவசியம். வர்த்தகம், கலாசாரம், விஞ்ஞானத் துறைகளில் ஒத்துழைக்காவிட்டால் மனிதர்களுக்கு நஷ்டந்தான். ஆனால் உடனடியாக ஆபத்து வந்துவிடாது. போதைப் பொருள் கட்டுப்பாட்டில் ஒத்துழைப்பில்லையேல், சமூகம் மோசமடைகிறது. லட்சக் கணக்கான மக்களுடைய உடலும், உள்ளமும் வலுவிழந்து போகின்றன. இது சென்ற நூற்றாண்டில் சீனாவில் நடந்த அபினிப் போர் விவரங்களிலிருந்து தெரிகிறது. 1930-1940 ஆண்டுகளில் கூட இக்கொடுமை சில நாடுகளில் இருந்தது. இன்றும் சிலநாடுகளில் இருந்து வருகிறது.

போதைப் பொருள்களை இரண்டு விதமாகப் பயன்படுத்தலாம். அவை எல்லாவற்றிற்கும் பொதுவாக உள்ள நல்ல தன்மை என்னவென்றால், அவை வலியைப் போக்குபவை. பல மோசமான நோய்களுடன் தோன்றும் வலியை நீக்க உதவுகின்றன. போதைப் பொருள்களில் முக்கியமானதொன்று அபினி. அதில் மார்பைன், கோடைன் ஆகியவை ஆல்கலைடுகளாக இருக்கின்றன. வலியைப் போக்குவதில் மிக வன்மையானது மார்பைன். உலகில் பெரும்பான்மையான இருமல் மருந்துகளில் சேர்க்கப்படுபவது கோடைன். போதைப் பொருள்களால் இப்படி நன்மை உண்டாவதால், அவை யாருக்குத் தேவையென்று டாக்டர்கள் கருதுகிறார்களோ, அவர்களுக்கு அவை கிடைக்கச் செய்யவேண்டும்.

போதைப் பொருள்களினால் தீமையும் உண்டாகிறது. அவற்றை உட்கொண்டவர்களுக்கு அப்பழக்கத்தைக் கைவிட முடிவதில்லை. முதலில் நோய் காரணமாக அவர்களுக்கு அவற்றினாலான மருந்துகளை அதிக அளவில் கொடுக்கிறார்கள். நோய் தீர்ந்த பிறகுகூட அவர்களால் போதைப் பொருள்களைக் கைவிடமுடிவதில்லை. இப்பழக்கத்தைக் கைவிடுவதில் வெற்றிபெறுபவர்கள் மிகச் சிலரே. இது ஒரு புறமிருக்க, உலகத்தில் போதைப்பொருள் வழக்கத்திற்கு உள்ளானவர்களில் பெரும்பாலோர், மருத்துவ காரணங்களுக்காக அவற்றை உட்கொண்டதாக நினைத்துவிடக்கூடாது. அவற்றால் மகிழ்ச்சியும் உடல்நலனும் உண்டாகும் தோற்றம் ஏற்படுகிறது. கவலைகளை மறப்பதற்குச் சிலர் இவ்வழியைக் கையாளுகிறார்கள். முதல் சில தடவைகளில் உபயோகித்த உடனேயே, இவ்வழக்கம் அவர்களைப் பற்றிக்கொள்ளுகிறது; தவிர்க்க முடிவதில்லை. உட்கொள்ளும் அளவும் வரவர அதிகரிக்கிறது. அதைப்பெறுவதும், உபயோகிப்பதுமே வாழ்க்கை லட்சியமாக விடுகிறது. இவ்வுலகத்திற்கும் அவர்களுக்கும் எவ்வித உறவுமில்லாமல் போய்விடுவதுடன், சமூகத்தில் அவர் சரியாக இயங்கவும் முடிவதில்லை. மார்பைனிலிருந்து ஹிராயின் என்ற பொருள் செய்யப்படுகிறது. அபினிப் பொருள்களில் மிக ஆபத்தானது அது. அதன் துர்ப்பிரயோகத்தைத் தடுப்பது சில நாடுகளில் ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. போதைப் பொருள்கள், இப்படி பெரும் நன்மையும், பெரும் தீமையும் உண்டாக்கும் தன்மையுடையவையாதலால், அவற்றின் விற்பனையும், உபயோகமும் கட்டுப் படுத்தப்படவேண்டும்.

போதைப்பொருள் கட்டுப்பாடு சர்வதேச முறையில் இருக்கவேண்டிய தன் அவசியத்தை, போன நூற்றாண்டில் அபினியும், உலகப் போர்களுக்கு இடைக்காலத்தில் ஹிராயினும், இன்று பல புதிய போதைப் பொருள்களில் ஏற்பட்ட அனுபவமும் விளக்குகின்றன.

இதையொட்டி இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் உலக நாடுகளுக்கிடையில் ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. விஞ்ஞான, மருத்துவ உபயோகங்களுக்கு மட்டுமே அவை விற்கப்படவேண்டுமென்றும், மற்ற உபயோகங்களைத் தடை செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதில் அந்தந்த நாட்டின் பொறுப்பு, அவற்றின் உற்பத்தி, உபயோகிக்கும் அளவு ஆகியவற்றைப் பொறுத்ததாகவே இருக்கும். அபினி, கஞ்சா, கோகா இலை போன்ற மூலப் பொருள்கள் உற்பத்தியாகும் நாடாக இருந்தால், அப்பொருள்களைத் தவறான வழியில் போகாமல் கண்காணித்து வரவேண்டும். அபினியிலிருந்து மார்பைனும் கோகா இலையிலிருந்து கொக்கைன் என்ற பொருளும் கிடைக்கின்றன. பெதிடைன், மெதடன் போன்றவை ரசாயன முறையில் தயாராகின்றன. இவற்றை எல்லாம் அரசாங்கம் பொறுப்பாகக் கவனித்து, தவறுக்கு இடமேற்படாதவாறு உற்பத்தியை நிறுவவேண்டும்.

இயற்கைப் பொருள்களிலிருந்தும், செயற்கைமுறையிலும் போதை வஸ்துக்கள் உற்பத்தியாவதைத் தவிர, மற்றொரு பிரச்னையும் இருக்கிறது. அதாவது, எல்லா நாடுகளும் அவற்றிலிருந்து தயாராகும் மருந்துகளை வாங்குகின்றன. போதைப்பொருள்கள் வாங்குவதும், விற்பதும் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். அவை உள்நாட்டிலேயோ, வெளிநாடுகளிலோ, தவறான தேவைகளுக்குப் போகுமாறு விட்டுவிடக்கூடாது. இவைகளுக்கு வேண்டிய ஒப்பந்தங்கள் உருவாயின.

இக்கட்டுப்பாடுகள் படிப்படியாக ஒன்பது ஒப்பந்தங்கள், சம்பிரதாயங்கள் மூலம் 1912லிருந்து 1953க்குள் உருவாயின. போதைப்பொருள் உற்பத்தி, விற்பனை, அதை வழக்கமாக உட்கொள்ளுவதைத் தடுக்கும் நடவடிக்கை ஆகிய எல்லாப் பிரச்னைகளிலும் புதிது புதிதாக ஏற்பட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சட்ட திட்டங்களும் மாறி வந்தன. பிறகு இந்தச் சட்டங்களை எல்லாம் இணைத்து, ஒரே ஒப்பந்தமாக, 1961ல் ஒரு புதிய திட்டம் உருவாயிற்று. அவசியமில்லாத, பழைய பகுதிகளை நீக்கிவிட்டு, புதிய முறையில் சுலபமாக அமுல் நடத்தும் வண்ணம், இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது,

இப்புதிய ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்து பார்த்தால் உலக போதைப் பொருள் கட்டுப்பாட்டின் எல்லா பகுதிகளும் விளங்கும். மற்றவர்களுக்கு அவ்வுரிமை அளித்திருந்தால், பயிரான அபினி முழுவதையும் அரசே வாங்கி விடவேண்டும். இதற்குத் தேவையான நிறுவனங்களை உண்டாக்கிக் கொள்ளவேண்டும்.

ரசாயன முறையில் போதைப் பொருள் தயாரிப்பது பற்றியும் புது ஒப்பந்தம் குறிப்பிடுகிறது. ஒருவரும்

---

**விளாடிமிர் குஸேவிக்** ஜெனிவாவிலுள்ள ஐ. நா. சமூக பொருளாதார விவகாரப் பிரிவில் மயக்க மருந்துத் துறை இயக்குநர். முன்பு பெல்கிரேடில் யூகோஸ்லாவியா பொது சுகாதாரத் துறை அதிகாரியாக இருந்தவர். பின்னர் ஆக்ஸ்ஃபோர்டில் ஆராய்ச்சி, மருந்துக் கட்டுப்பாடுக் கழக இயக்குநராக இருந்தார்.

## மயக்க மருந்துகளை தருகின்ற தாவரங்கள்

இந்த நான்கு தாவரங்களிலிருந்துதான் முக்கியமான "இயற்கை" மயக்க மருந்துகள் கிடைக்கின்றன. அவை கன்னபிஸ்—இதிலிருந்து கஞ்சா தயாரிக்கப்படுகிறது. பாப்பி செடி—அபினி, மார்ஃபைன், ஹெராய்ன் இதிலிருந்து செய்யப்படுகிறது. கோக்கா புதர்—இதன் இலையிலிருந்து கொகெய்ன் எடுக்கப்படுகிறது. மெக்ஸிகன் பியோட் காக்டஸ் (இதன் போதையூட்டும் தனமை அஸ்டெக்குகளுக்கு தெரிந்திருந்தது) ரசாயன அறிஞர்கள் அண்மையில் இதன் வேரிலிருந்து 'மெஸ்காலின்'னைப் பிரித்தெடுத்தனர். இப்போது செயற்கை முறையில் தயாரிக்கப்பட்டு மனநோய் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.



கன்னபிஸ் (மாரிஜுவானா, கஞ்சா)



ஓபியம் பாப்பி



கோக்கா இலைகள்



பியோட் காக்டஸ்

WHO photos

அவற்றை அனுமதியின்றி தயாரிக்கக் கூடாது. தயாரிக்கும் கட்டிடம், தொழிற்சாலை ஆகியவற்றிற்கு வேறு தனியாக அனுமதி பெறவேண்டும். எவ்வித போதைப்பொருள், எந்த அளவுக்கு உற்பத்தி செய்யவேண்டும் என்பதை, அவ்வப்போது அரசாங்கம் குறிப்பிடும். விற்பனையிலும்கூட, அவற்றை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கு அரசாங்கங்களின் அனுமதி வேண்டும். இவ்வளவுதான் ஏற்றுமதி, இறக்குமதி செய்யலாமென்றும், இவ்வளவு நாட்களுக்குள் இந்த வியாபாரம் முடிந்துவிடவேண்டுமென்றும் அரசு உத்தரவு பிறப்பிக்கும்.

சர்வதேச போதைப்பொருள் கட்டுப்பாடு நிர்வாகக் குழு என்ற நிறுவனம் துவக்கப்பட்டிருக்கிறது. உலக போதைப் பொருள் விளைச்சல், தயாரிப்பு, விற்பனை ஆகியவற்றை இது மேற்பார்வை செய்கிறது. ஐ. நா. பொருளாதார, சமூக கவுன்சில் இக்குழுவைத் தேர்ந்தெடுக்கிறது.

தேசிய அளவில், போதைப் பொருள்கள் மருத்துவ, விஞ்ஞான வேலைகளுக்கே உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்ற புதிய ஒப்பந்தம் கூறுகிறது. அரசாங்க அனுமதி பெற்றவர்களே இதில் மொத்த, சில்லறை வியாபாரம் செய்யலாம். டாக்டர் சீட்டு இருந்தாலொழிய இதை சில்லறையாக விற்கக்கூடாது. இதையும் கையிருப்பிலுள்ள போதைப் பொருள்களையும் அவ்வப்போது அரசாங்கம் மேற்பார்வை செய்யும்.

போதைப்பொருள் உட்கொண்டு பழகியவர்களை, அதிலிருந்து மீட்கவும், அப்பழக்கத்தினால் ஏற்பட்ட தீமைகளைப் போக்கவும் புது ஒப்பந்தம் முயற்சிக்கிறது. போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலம் ஏற்படும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நிர்வாகம், சர்வதேச ஒத்துழைப்பு, சட்டமியற்றுதல், தண்டனை முதலிய எல்லாம் இவ்வொப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இப்பொருள்கள் பற்றி ஒவ்வொரு நாட்டிலுமுள்ள நிலைமையை அந்த நாட்டு அரசாங்கம் ஐ. நா பொதுக் காரியதரிசிக்கு ஒவ்வொரு ஆண்டும், விவரமாக அறிவிக்கவேண்டும். குறிப்பாக இவற்றில் நடக்கும் கள்ளக் கடத்தல் பற்றி தெரிவிக்க வேண்டும் என்று புது ஒப்பந்தம் கூறுகிறது.

இப்படியாக, போதைப்பொருள் விளைச்சல், தயாரிப்பு, விநியோகம் ஆகிய எல்லாத் துறைகளையும் கட்டுப்படுத்தும் கடினமான வேலைக்கு புது ஒப்பந்தம் வழி வகுத்துக்காட்டுகிறது. அப்பொருள்களை உட்கொண்டு பழகியவர்களை அதிலிருந்து மீட்கவும், கள்ளக் கடத்தலைத் தடுக்கவும் அவ்வொப்பந்தம் உதவுகிறது.

புதிய போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்தவேண்டுமென்றால், உலக சுகாதார ஸ்தாபனம் ஒரு பரிசீலனைக் குழுவை நியமிக்கும். எந்த அளவுக்கு அவை கெட்ட வழிகளில் உபயோகிக்கப்படலாம், அவற்றினால் ஏற்படக்கூடிய தீமைகள் என்னென்ன, அத்தீமைகளைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பனவற்றை மேற்கூறிய குழு எடுத்துரைக்கும். குழுவின் சிபாரிசுகளை ஐ. நா போதைப்பொருள் கமிஷன் பரிசீலனை செய்து ஒப்புக் கொள்ளும். ஐ. நா. பொருளாதார, சமூக கவுன்சிலின் ஆதரவில் நிறுவப் பட்டிருப்பது இந்தக் கமிஷன். போதைப் பொருள்பற்றி உலகக் கொள்கைகளை வகுப்பது இதுவே. ஐ. நா. போதைப் பொருள் பிரிவு அலுவலகம் ஜினீவாவில் இருக்கிறது. கமிஷன் சார்பின் பிரச்னைகளைப்பரிசீலனை செய்வது, கமிஷனின் வருடாந்திரக் கூட்டத்தில் எடுக்கும் முடிவுகளை அமுல் நடத்துவது முதலியவை இப்பிரிவின் வேலைகள்.

கடந்த சில ஆண்டுகளில் புது ஆபத்து ஒன்று தோன்றியிருக்கிறது. போதைப் பொருள் போன்ற சில பொருள்கள் தீய வழிகளில் பயன் படுகின்றன. இவற்றை உட்கொண்டவர்களுக்கு அளவற்ற உற்சாகமும், வேகமும், சோர்வும் உண்டாகின்றன. இவற்றில் எல். எஸ். டி. என்பது ஒன்று. இது மனதை வசியப் படுத்தி, பற்பல தோற்றங்களை உண்டாக்குகிறது ஹீராயின் மிக ஆபத்தான போதைப் பொருள் என்றால், இது அதைவிடப் பயங்கர விளைவுகளை உண்டாக்கும்.

இதைப்போன்ற பொருள்கள்பற்றி, மேலே குறிப்பிட்ட புது ஒப்பந்தத்தில் ஒன்றுமே இல்லை. இவை தீய வழிகளுக்கு இப்போது அதிகமாகப் பயன் படுவதால், இவற்றைக் கட்டுப்படுத்துவது பற்றி உலக ஸ்தாபனங்கள் ஆலோசித்து வருகின்றன. இவற்றின் உற்பத்தியும், விநியோகமும் தேசீய அளவில் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்று ஐ. நா. ஸ்தாபனங்களும், உலக சுகாதார ஸ்தாபனமும் சிபாரிசு செய்தன. ஆனால் சர்வதேச அடிப் படையில் நடவடிக்கை எடுத்தாலொழிய நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாதென்று கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளின் அனுபவம் நமக்கு எடுத்துரைக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை புது ஒப்பந்தத்தில் இணைத்து விட்டால் போதுமா என்ற பிரச்னை இன்னும் முடிவாகவில்லை.

போதைப்பொருள் பிரச்னை நாளுக்கு நாள், நாட்டுக்குநாடு, மாறி வருகிறது என்று கடந்த 50 ஆண்டு அனுபவம் நமக்கு எடுத்துரைக்கிறது. நிலைமைக்கு ஏற்றவாறு உலகநாடுகளும் நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் இவ்வித மாறுதல்களை அவை செய்து கொண்டிருக்கின்றன. உலக மட்டத்தில் இப் பிரச்னையைச் சமாளிக்கக் கூடிய ஸ்தாபனம் ஒன்று இருந்து, அது நன்றாகவும் வேலை செய்தால், போதிய தேசீயச் சட்டங்களின் உதவியுடன் அதைக் கட்டுப்படுத்தி விடலாம். முற்கூறிய ஆபத்தான பொருள்களை விஞ்ஞான, மருத்துவ வேலைகளுக்குமட்டும் உபயோகித்தால், புதிய வைத்த முறையின் பலனை உலக மக்கள் மேலும் மேலும் அடையும் வாய்ப்பு ஏற்படும்.

தமிழில்: பி. வி. சுப்பிரமணியம்.



Photo © Holmes Lebel

**நின்று கொல்லும் பாப்பி**

அபின் தரும் பாப்பி செடியில் பெரும் பகுதி ஆசியாவில் பயிராகிறது. இங்கே காண்பது லாவோசிலுள்ள தோட்டம். மருந்துகளுக்காக பல நாடுகளில் சட்ட பூர்வமாக அனுமதி பெற்று பயிரிடப் படுவதால், திருட்டுத்தனமாகப் பயிரிடுவதைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக உள்ளது. உலகின் நியாயமான அபினி தேவை ஆண்டுக்கு 800 டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் 2000 டன் அறுவடையாகிறது. 1200 டன் தவறான உபயோகத்துக்கு உலகம் முழுவதும் கடத்தப்படுகிறது.

(26 - 27 பக்கப் படம் காண்க)

# அபினிலிருந்து எல் எஸ் டி வரை

## மயக்க மருந்துகளின் நீண்ட வரலாறு

—மார்ஸல் கிரேனியர்—டோயக்ஸ்



தூக்கம் தம்மை ஆட்கொள்ளாதிருக்க புத்தர் தம் கண் இமைகளை வெட்டிப் போட்ட அதே இடத்தில் அபினி பாப்பி செடி, வளர்ந்தது என ஒரு கட்டுக்கதை கூறுகிறது. ஆனால், பாப்பிச்செடி, அதிலிருந்து கிடைக்கும் அபின் முதலிய பொருள்களின் மருத்துவக் குணங்கள் அதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே அறியப்பட்டவையாகும்.

---

**மார்ஸல் கிரேனியர்-டோயக்ஸ்** சர்வதேச போதைப் பொருள் கட்டுப்பாடு குழுவின் உப தலைவர். உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினர். வெனிஸுலா மத்திய பல்கலைக் கழகத்தின் மருந்து இயல் பிரிவு தலைவர். வெனிஸுலா தேசிய மருந்து கழகத் தலைவர்.

கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம், நாலாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சுமேரியன் படிவப் பாளங்களும் பாப்பிச் செடியைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. அசிரியர்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள் ஆகியோரும் மிகப் பழங்காலத்திலேயே அபினியின் பயனைக் குறித்து எழுதி வைத்துள்ள சான்றுகளும் கிடைத்துள்ளன. ஹோமர் தம் ''ஒடிசியில்'' குறிப்பிட்டுள்ள ஒரு கதையின்படி மெனிலஸின் அழகிய மனைவியான ஹெலன் ''நெபந்திஸ்'' எனப்படும் வசிய மருந்தை வலியை மட்டுப்படுத்தவும் துன்பத்தை மறக்கச்செய்யவும் டெலிமாககசுக்குக் கொடுத்ததாக அறியப்படுகிறது. கிரேக்க நாட்டில் ''கோரிந்து''க்கு அருகிலுள்ள (பாப்பிச்செடி நகரமான) மெக்கோன் நகரின் பாப்பியைப்பற்றி கி.மு. 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹெசியாடு என்பவர் முதன்முதலில் எழுதியுள்ளார்.

நோய் தீர்ப்பதில் அபினியின் பயனைப் பற்றி மருத்துவ மேதையான ஹிப்பாகிரடிஸ் கூறியதைப் போல கிரேக்க வரலாற்று ஆசிரியரான ஹெரடோடஸ் கூறி இருக்கிறார். அரிஸ்டாடல் முதல் வெர்ஜில், மூத்த பிளினி காலம் வரையிலுள்ள பல கிரேக்க-ரோமானிய வரலாற்று ஆசிரியர்கள் பாப்பிச்செடி, அபினி ஆகியவற்றைப் பற்றித் தம் நூல்களில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அரேபிய நாட்டின் சிறந்த தத்துவ ஞானியும் மருத்துவ மேதையுமான அவிசென்னா என்பவர் பாரசீகத்தில் அபினிப்போதையினால் 1037ஆம் ஆண்டில் இறந்ததாகச் சில வரலாற்று ஆசிரியர்கள் சொல்லுகின்றார்கள். 8ஆம் நூற்றாண்டில் சிந்து மாகா

ணத்தில் அரேபியப் படையெடுப்புக்கும் பிறகுதான் இந்தியாவில் அபினைப் பயன்படுத்தும் பழக்கம் புருத்தப்பட்டதென 1946ஆம் ஆண்டு பாரிசில் வெளியிடப்பட்ட (அபினி, வைகாட்ப் ரெரெஸ் என்னும்) நூலில் இன்ஹோ ஜே. பென்சுசான் என்பவர் குறிப்பிடுகிறார். ஆனால், அதற்கும் பன்னிரெண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே பேரரசர் அலெக்சாண்டரின் படை வீரர்களினால் இந்தியாவில் அபினி தயாரிக்கும் முறை புகுத்தப்பட்டிருக்கக்கூடும் என்று கிரேக்க வல்லுநர்களான பி. ஜி. கிரிடிகோஸ், எஸ். பி. பபாடகி என்போர் (மயக்க மருந்துகளைப்பற்றிய ஐ. நா. அறிக்கையின் 3ஆம் 4 ஆம் இதழ்களில்) அண்மையில் தெரிவித்துள்ளார்கள். அபினி பாப்பி இந்தியாவில் 15ஆம் நூற்றாண்டில் பயிரிடப்பட்டதைப் பற்றிய முதல் குறிப்பை முகலாயச் சக்கரவர்த்தி அக்பர் ஆட்சி காலத்துப் பதிவேடுகளில் காண்கிறோம்.

அபினியை மூலமாகக் கொண்டு முதன்முதலாகத் தயாரிக்கப்பட்ட மருந்துத் தயாரிப்புகளில் ஒன்று 16 ஆம் நூற்றாண்டில் சுவிஸ் நாட்டு டாக்டர் பாரா செல்சி என்பவரால் குறித்துக் கொடுக்கப்பட்ட ''லாடனம் பாரா செல்சி'' என நம்பப்படுகிறது. ஆனால், இம்மருந்தில் அபினி இருந்ததா என்பது சர்ச்சைக்குரியதாகவே இருக்கிறது. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரசித்திபெற்ற ஆங்கிலேய டாக்டரான தாமஸ் சிடென்ஹாம் அபினியிலான ஒரு தனித்தயாரிப்பைக் கண்டுபிடித்தார்; அப்புதிய மருந்திற்குத் (அபினிக்கு) தம் பெயரை வைத்தார். ஆயினும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம்வரை அபினிச் சத்துக் கலந்த மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. அதன்பிறகுதான் முதல் அபினி சத்து கலந்த 'மார்பின்' என்ற மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கண்டுபிடிப்பும் ஜெர்மன் நாட்டு மருந்தாக்க நிபுணர் பிரீட்சிக் செர்டூர்னர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பிரெஞ்சு நாட்டு வேதியியல் வல்லுநர் ''ஆர்மாண்டு செகூயின்'' என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இருவகைக் கருத்துக்கள் நிலவுகின்றன.

நினைவுக்கு எட்டாத நீண்டகாலமாகவே உடல் வலிகளைத் தணிக்க வேறு வழி வகைகள் தெரியாதபோதே அபினியினுடைய மருத்துவச் சிறப்புகள் தெரிந்திருந்தன. பிற்காலத்தில் அதைத் தவறான முறையில் உபயோகித்ததால் அது கடுமையான நஞ்சாயிற்று. அபினியைப் புகைக்கும் பழக்கம் முதன் முதல் எப்போது ஏற்பட்டது என்பதைத் துல்லியமாகக் கணக்கிட்டுக் கூறுதல் எளிதல்ல. ஆனால், 17ஆம் நூற்றாண்டின் இறுதிக்குப் பிறகே இப்பழக்கம் நடைமுறைக்கு வந்ததெனச் சிலர் கருதுகிறார்கள். பார்மோசா, ஜாவா ஆகிய கிழக்கு நாடுகளிலிருந்தும் மேற்கே இந்தியாவிலிருந்தும் இப்பழக்கம் சீனாவில் புகுத்தப்பட்டதாகவே கருதப்படுகிறது. அபினி இறக்குமதியைத் தடை செய்வதற்குச் சீன அரசாங்கம் ஒரு முடிவு எடுத்தது. இதன் விளைவாகப் பகைமை ஏற்பட்டு பிரிட்டனுக்கும் சீனாவுக்கும் முதல் அபினிப்போர் (1839–42) உண்டாயிற்று. அபினியைப் பயன்படுத்தும் கெட்ட பழக்கம் அப்போர் ஏற்பட்ட



Photo © Kazuo Kenmochi, Tokyo



Photo E.M. Androulaki



Photo Georges Daux

## ஆதிகாலத்தில் அபின் தரும் பாப்பி

**பண்டைய உலகில் பாப்பி செடி பரவலாகத் தெரிந்திருந்தது. அலங்காரப் பொருளாகக் கூட அது இருந்தது என்று பி. ஜி. கிரிடிகோஸ், எஸ். பி. பப்படாகி ஆகிய இரு கிரேக்க விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் புலனாகியுள்ளது. சிலைகள், பதக்கங்கள், நாணயங்கள், பாத்திரங்கள் போன்று அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ள பல பொருள்களில் அது இடம் பெற்றுள்ளது. பாப்பி விதை (மேலே) ஒரு மினோவன் தேவதையின் கேசத்தை அலங்கரிக்க உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. (இடது). கி. மு. 13வது நூற்றாண்டுச் சிலை இது. (வலது) கி. மு. 700ஐச் சேர்ந்த வெண்கல உருவம். இதன் அடிப்பாகம் பாப்பி விதை உருவில் உள்ளது.**

போதுதான் தொடங்கியது எனலாம். இப்பழக்கம்தான் விரைவில் பேரச்சம் தருகிற அளவுக்குச் சீன நாட்டில் பெருகியது. அதனுல், அங்கே மந்த நிலைமை உருவாயிற்று. வெறிமயக்க மருந்துகளைப் பழக்கப்படுத்திக் கொள்வோரின் எண்ணிக்கைக் கோடிக் கணக்கில் வளர்ந்தது. 1906ஆம் ஆண்டுவரை அவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து பெருகலாயிற்று. இவ்வாண்டில்தான் பாப்பிச்செடி பயிரிடுவதையும் அபினி உபயோகப்படுத்துவதையும் தடை செய்து ஓர் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. மூன்ருண்டுகளுக்குப் பிறகு அனைத்து நர்ட்டு அபினிப் பொறுப்பாண்மைக்குழு ஒன்று ஷாங்காய் நகரில் கூடிற்று. இக்குழுவில் 13 நாட்டுப் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தார்கள். அபினியின் தீமை பயக்கும் விளைவுகளைக் களைவதற்கு எல்லா நாடுகளும் முதன் முதலாக மேற்கொண்ட தீவிர நடவடிக்கை இதுவேயாகும். அபினியின் தீய விளைவு, ஆசியாவின் பெரும் பகுதியில், அதிலும் வாழ்க்கை வசதிகள் குறைந்துள்ள ஏழை மக்களிடையே பெரும் தொற்று நோயைப்போல் பரவிக்கொண்டிருந்தது. இத்துடன் மேற்கத்திய நாடுகளிலும் பரவத் தொடங்கிற்று.

அபினியைக் குடிக்கலாம்; உண்ணலாம். இருப்பினும் பொதுவாக அது புகைக்கப்படுகிறது. அபினியைப் புகைப்பது ஒரு சிக்கலான செயலேயாகும். அதற்கு ஏராளமான ஏற்பாடுகளும் உபகரணங்களும் தேவைப்படுகின்றன. பொதுவாக, அபினி புகைக்கும் குழாய் மூங்கிலால் செய்யப்பட்டு ஒரு மட்கிண்ணத்தோடு இணைக்கப்படுகிறது. அபினி புகைப்பவன் கீழே படுத்துக் கொள்கிருன்; அபினிப்பெட்டியிலிருந்து அபினிச் சத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ''சண்டு''வை ஓர் ஊசி முனையால் சிறிதளவு எடுக்கிருன்; அதை(சண்டினை) விளக்குச் சுடரில் காட்டிச் சூடேற்றுகிருன்; கட்டைவிரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையே வைத்துத் தேய்த்து உருட்டுகிருன். பிறகு களி மண் கிண்ணத்தில் வைக்கிருன்; இவ்வகையில் புகைப்பதற்குத் தயார் செய்கிருன். அதில் நெருப்பைப் பற்ற வைத்துப் புகையை மெள்ள உள்ளிழுக்கிருன். ஏழைகளுக்கோ தரமான ''சண்டு''வை வாங்கிப் புகைக்க இயலாது. பணக்காரர்கள் ஒதுக்கித் தள்ளிய மிச்ச மீதமான சக்கையையே இவ்வேழைகள் உபயோகிக்கிருர்கள். இச் சக்கையில் போதைச் சத்து மிகுதியாக உண்டு. பரம ஏழைகள் இச் சக்கையைப் புகைப்பதால் உருக்குலைந்து ஓடாகிருர்கள். நீண்ட காலம் அபினியைப் பயன்படுத்துவதனுல் அது புகைப்பவனை உன்மத்த நிலையின் இறுதிக் கட்டத்திற்கு இழுத்துச் செல்லும்; எடையைப் பெரிதும் குறைக்கும்; ஏன், மரணத்திற்கும் இழுத்துச் செல்லும். இடைவிடாமல் எப்போதும் புகைப்பவர்கள் வேலைசெய்யும் சக்தியை இழந்து விடுகிருர்கள். உடல் நிலைமை விரைவில கெடுகிறது. தம் விருப்பத்தை நிறைவேற்றப் புகைப் பிடிக்கும் ஏழைகள் வருமானத்தின் பெரும்பகுதியை வெறி மருந்துப் பொருளுக்குச் செலவிடுகிருர்கள். இதனுல் மற்ற எல்லா வசதிகளையும் இழந்து மிகவும் வறுமையுற்று, வாடி வதங்கும்போது இவ்வெறி மருந்துப் பொருளே அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக எண்ணுகிருர்கள்.

இவ்வாருக ஒரு கேடான வட்டம் முற்றுப்பெறுகிறது. அபினியிலிருந்து தயாரிக்கப்பட்ட மார்பின், கோமன் போன்ற மருந்துகளை ஊசி மூலம் உடலில் செலுத்தி வெறிமயக்கத்தை உண்டாக்கும் முறையானது மிகவும் தீங்கானது.

அபினியிலிருந்து இயற்கையாக வடித்தெடுக்கப்படுகின்ற பொருள்களைவிட பாதிக்கூட்டிணைப்பு முறையினுல் கிடைக்கின்ற அபினிச் சத்தான ''ஹிராயின்'' என்னும் பொருள் மிக அபாயகரமானது. அதை நாசி மூலம் உள்ளுக்கு இழுக்கலாம்; புகைக்கலாம், அல்லது ஊசி வழியேயும் உடலுக்குள் செலுத்தலாம். ''ஸ்பீடுபால்'' என்று அழைக்கப்படுகின்ற ''ஹிராயின் கொக்கேயின்'' குறிப்பிடத்தக்க வெறியூட்டும் கலவையாகும். அது ஒரு காலத்தில் அமெரிக்க நாட்டில் அதிகப் புழக்கத்தில் இருந்தது.

அபினிச் சத்தினைக் கொண்டு மார்பினுக்குப் பதிலாக செய்யப்படுகின்ற வலியகற்றும் மருந்துகள் வெறியூட்டும் பொருள்களுக்கு அடிமையாகும் பழக்கத்தை அதிகப்படுத்துவதுடன் அதை ஒழிப்பதற்கான போராட்டத்திலும் பல சிக்கல்களை உண்டாக்குகின்றன. இந்தப் புதிய மருந்துகள் வழக்கமாய் ஊசிமூலம் உடலில் செலுத்தப்படுகின்றன; ஆனுல், சிலவற்றை வாய் வழியாக உட்கொண்டாலே அவற்றிற்குரிய முழு விளைவும் உண்டாகிறது.

''ஒருவன் தான் விரும்பினுல் தான் நஞ்சு அருந்தும் சுதந்திரம் உடையவன் என்றும் அதைத் தடுப்பதற்குச் சமுதாயத்தால் எடுக்கப்படும் எந்த ஒரு முயற்சியும் தனி மனித சுதந்திரத்தைத் தடை செய்வதாகும் என்றும் சிலர் கருதுவதாகவும் இது உண்மையிலேயே இன்றைய சமுதாயத்தில் நேர்மையற்ற பொதுக்கருத்து என்றும், இந்தக் கொள்கையினுல் கெட்ட பழக்கத்திற்கு அடிமையான ஒருவன் தன்னைத் தானே அழித்துக் கொள்வதுடன் அந்த வழி முறையில் தீங்கு இழைக்கிறவன் ஆகின்ருன்'' என்றும் மயக்க மூட்டும் மருந்துகளைப் பற்றிய ஐக்கிய நாட்டுப் பொறுப்பாண்மைக்குழு தன்னுடைய ஓர் அறிக்கையில் கூறுகிறது.

''ஆண்டேசி''னுடைய ''கோர்டில் லெராவி''லிருந்து வருகின்ற ஒரு பழைய கதையோடு ''கோகா'' இலை தொடர்பு படுத்தப்படுகிறது. காடுகளைத் தீயிட்டு அழிப்பதற்குத் தங்களுடைய குடிமக்களை அனுமதித்த ''யங்கா'' தலைவர்கள்மீது கோபங் கொண்ட இடி, மின்னல், பனி மூன்றின் தெய்வமான ''குனு'' அவர்களைத் தண்டிக்க நினைத்தார். (காடுகளை எரித்தபோது) உண்டான புகை மண்டலம் பொலிவியாவிலுள்ள ''இல்லிமணி'' ''முருதாரா'' ஆகிய வெண்பனி மூடிய இரு மலைகளையும் கறுப்பாக்கியது. இவ்விரு மலைகளே அத்தெய்வத்தின் அரண்மனைகளாகும். அவர்களைத் தம் தலைநகரிலிருந்து நீக்கிவைக்க முடிவு செய்த அத்தெய்வம் ''புனித ஏரி''க் கரைகளின் மேல் தம் அரண்மனைகளை அமைத்துக் கொண்டது (இந்த ''டிடிகாகா ஏரி'' பெருவிற்கும் பொலிவியாவிற்கும் இடையில் இருக்கிறது.) (ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவர்களான) மால்காஸ்களோடு அனைத்துத் தொடர்புகளையும் இழந்த ''யங்கர்கள்', நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டு







## புராதன பெரு நாட்டின் கோகா மெல்பவர்கள்

14ம் நூற்றுண்டின் முடிவில் கோகா இலையை மெல்வது இன்கா மக்களிடையே பரவலாக இருந்தது. மேலே: கோகா இலையுடன் கலப்பதற்கான சுண்ணும்புக் குடுவையை வைத்திருக்கும் ஓர் ஆண் உருவம். நடுவில்: அதே போன்ற ஒரு பெண் உருவம். கீழே: கோகா இலையை மெல்லும் காட்சி. இந்த சுட்ட களி மண் உருவங்கள் பண்டைக்கால பெரு கல்லறைகளில் கிடைத்துள்ளன.

Photos A. Navarro Neira

# ஆய்வுக் கூடத்தில் புனிதக் காளான்கள்

பசியாலும் தாகத்தாலும் அல்லலுற்ருர்கள். அதற்குப் பிறகே அவர்கள், ''கோகா'' இலையைக் கண்டுபிடித்தார்கள். அந்த இலையை மெல்லுவதால் அவர்கள் புதிய வலிவு பெற்றனர். பசி மயக்கம் அவர்களை விட்டு மறைந்தது. அது மட்டுமா? மலை நோயால் அவதியுருமல் ''டையாகுனுகோ'' எனுமிடத்தை அவர்கள் அடைவதற்கு உதவியாகவும் இருந்தது.

''கோகா''வின் பிறப்பிடம் முன்னுள் மேலைய பெருவில் (இன்றைய பொலிவியாவில்) உள்ள ''மச்சுயங்கா'' பிரதேசம் என்பது டாக்டர் மெட்ராஞே (பொலிவியாவிலுள்ள ''கொச்சபம்பா''வைச் சேர்ந்தவர்) செய்த ஆராய்ச்சிகளால் தெரிய வருகிறது. ''ஆரவாகர்கள்'' ''கோகா'' பயன்படுத்துவதைத் தம்மை வென்ற ''சிப்சாஸ்''களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள் என்பது பல ஆசிரியர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு கொள்கை. ''ஆரவாகர்கள்'' ''ஆண்டீசை''க் கடந்து குடிபெயர்ந்து சென்றதற்குப் பிறகு, ''பெரு'' எனவும் ''பொலிவியா'' எனவும் இன்று அழைக்கப்படும் பிரதேசங்களில் ''கோகா'' மெல்லும் பழக்கத்தைப் பரப்பினுர்கள். புலம் பெயர்ந்து செல்லும் வழியில் ''சிப்சாஸ்'' ''அய்மாராஸ்'' ''குயட்சூவாஸ்'' ஆகியோர்கள் ''கோகா'' இலை பயிரிடுவதைப் பரப்பியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதுவே, பிறகு, மத்திய அமெரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள், தென் அமெரிக்காவின் வடபகுதி முதலிய இடங்களுக்குப் பரவி இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது.

இன்கா இனத்தவனுன ''மாயிடா காபாக்'' (1230 கி.பி.) அவனுடைய வழியினர்களில் ஒருவனுன ''ரேக்கா'' (1315இல் இறந்தான்) ஆகியோர் கோகா பயன்படுத்தும் பழக்கத்தைப் பரப்புவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ''யாகுவார்—குவாகாக்'' (1347இல் இறந்தான்) பல இடங்களுக்குச் சென்று வெற்றியடைந்து வந்தகாலை செவ்விந்தியர்கள் கோகாவைத் தெய்வமாகக் கருதி வழிபட்ட பிரதேசங்களைக் கண்டுபிடித்தான். பதினுன்காம் நூற்ருண்டின் இறுதியில் கோகா இலையைப் பயன்படுத்தும் பழக்கம் இன்காக்களின் மத்தியில் அதிக அளவில் பரவியிருந்தது. 1857இல் ''கார்வ்வான் செர்சர்'' பெருவுக்குச் சென்று வந்தபோது கோகா இலைகளைக் கொஞ்சம் கொண்டு வந்தார். அவற்றை ஜெர்மன் வேதியில் நிபுணர் பிரடெரிக் வாலெர் என்பார் நடத்திய ஆராய்ச்சிக் கூடத்திற்குக் கொடுத்தார். ஆல்பர்ட் நைமான் என்பவர் அந்த இலைகளைப் பகுப்பாராய்ச்சி செய்து கோகா இலைகளிலிருந்து ''ஆல்கலாய்டு கோகாயி''னைப் பிரித்தெடுத்தார். இது மருத்துவத் துறையில் உடலில் குறிப்பிட்ட இடத்தில் உணர்வின்மையை ஊட்டப் பயன்படுத்தப்பட்ட முதல் மருந்தாகும்.

கோகா இலை ஆதரவாளர்கள் பலர் இருக்கிருர்கள். ஆனுல், அதை வெறுப்பவர்கள் அதைவிட அதிக அளவில் இருக்கிருர்கள். கோகா இலைகளைப் பயன்படுத்துவதைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் இன்றும் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. லிமாவைச் சேர்ந்த கார்லோஸ் குடீரெஜ் நோரீகா என்பவரும் அவருடைய கொள்கையைப் பின்பற்றுவோரும் கோகா இலைகளை மெல்லுவதால் உண்டாகும் தீய விளைவுகளை விளக்கிக் காட்டியிருக்கிருர்கள். ''கோகாய்சம்'' என்னும் கோகா இலைகளை மெல்லும் பழக்கம் கோகாய்னிசம் என்பதிலிருந்து வேறுபட்டது. கோகா இலைகளிலிருந்து வடித்தெடுக்கப்படும் ''கொய்கெய்னே'' உண்பதே கொகாய்னிசம் எனப்படும். மூச்சு உள்இழுத்தல் மூலம் கோகேய்னே எடுத்துக் கொள்ளலாம்; அல்லது ஊசிமூலம் உடலில் புகுத்திக் கொள்ளலாம். சிலர் தனிக் கோகாயினேயோ அல்லது ஹிராயினேடு கலந்த கோகாயினேயோ ஊசிமூலம் இரத்தக் குழாய்களின் வழியாக உடலில் செலுத்திக் கொள்கின்றனர். இதுவே, முன்னுல் குறிப்பிட்ட ''ஸ்பீடுபால்'' என்பதாகும். ஆனுல், கோகாய்சமே அதிக அளவில் பரவியுள்ளது—ஆண்டீஸ் கார்டில்லெராவிலுள்ள பெருவாரியான மக்களை இது பாதிக்கிறது.

கொக்யூரா அல்லது கோகா இலைகளை மெல்லுபவர் தயாரிக்கப்பட்ட ''க்யுட்டை'' (சிக்கூ) உண்மையிலேயே மெல்லுவதில்லை. ஆனுல் சாற்றினை எடுப்பதற்கு, அவர் உறிஞ்சுகிருர்; வாயினுள் இங்கும் அங்கும் தள்ளிப் பற்களுக்கும் கன்னத்துக்கும் இடையில் வைத்து நெருக்குகிருர். இப்பழக்கத்தால் உருக்குலைந்திருக்கும் அவருடைய கன்னத்தைக் கொண்டே அவர் கோகா மெல்லுவதில் விடாப் பழக்கமுடையவர் என்பதைஎளிதில்அறிந்துகொள்ளலாம்.

மெல்லுவதன் மூலம் கோகா இலைகளிலுள்ள விறுவிறுப்பான சாற்றை உறிஞ்சி எடுக்கவேண்டுமானுல் மிகுந்த காரத்தன்மையுடைய பொருள் ஒன்றை அத்துடன் சேர்க்கவேண்டும். இந்தக் காரம், சுண்ணும்பு, ''குயனுவா''வை (ஒருவகை ஆண்டீயன் தானியம்) எரித்துக் கிடைக்கும் சாம்பல், கிளிஞ்சல்களில் இருந்து கிடைக்கும் சுண்ணம் ஆகியவற்றில் உள்ளது. 1949ஆம் ஆண்டு ஐக்கிய நாட்டுச் சபையால் அமைக்கப்பட்ட விசாரணைப் பொறுப்பாண்மைக்குழு கோகா இலைகளை மெல்லுவதால் உண்டாகும் தீய விளைவுகளைப் பற்றி விளக்கமாக எடுத்துக் காட்டியிருக்கிறது. இந்தக் கட்டுரையின் ஆசிரியரும் அந்த விசாரணைப் பொறுப்பாண்மைக்குழுவில் ஓர் உறுப்பினராக இருந்தார்.

கோகாவில் அடங்கியுள்ள கொகேயின் எனப்படும் சக்திவாய்ந்த பொருள் வழக்கமாக இந்தச் செடியின் இலையை மெல்லுகின்றவனுடைய மதி நுட்பத் திறமையில் பல தீவிர மாறுதல்களுக்குக் காரணமாகிறது. பல ஆராய்ச்சிகள், குறிப்பாக குடீரெஜ் நோரீகா செய்துள்ள ஆராய்ச்சிகள் கல்விக்கு கொகெய்சம் உருவாக்குகின்ற அபாயகரமான இடையூறுகளின்மீது முழுக் கவனத்தையும் திருப்பியுள்ளன. இங்கு ஓர் உதாரணம் காட்டுகிறேன்.

''இந்த இடர்ப்பாடுகள் குடும்பத்திலேயே தொடங்குகின்றன. கோகா மெல்லும் பழக்கமுடைய பெற்ருேர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில் ஆர்வம் காட்டுவதில்லை. மேலும் கோகா மெல்லும் பழக்கத்தை மேற்கொள்ளும்படி குழந்தைகளை வற்புறுத்துகின்றனர். கோகா மெல்லும் பழக்கத்தை உடைய குழந்தைகள் கற்பதில் குறைந்தளவு திறமையையே பெற்றிருக்கிருர்கள். அல்லது கல்வியில் நாட்டமே இல்லாமல் இருக்கின்ருர்கள் என்றும் இதுபோன்ற குழந்தைகள் மிகவும் வெட்கம் உடையவர்களாயும் புறத்தைப் பற்றிச் சிந்திக்கும் சக்தியற்றவர்களாயும் மனவுறுதி குறைந்தவர்களாயும் விளையாட்டில் ஆர்வம் அற்றவர்களாயும் இருக்கிருர்கள்'' என்றும் குஸ்கோ, புனே ஆகியவைகளைச் சேர்ந்த நாட்டுப்புறப் பள்ளிக்கூடங்களிலுள்ள பெரும்பான்மையான ஆசிரியர்கள் கூறுகிருர்கள்.

எழுத்தறிவின்மைக்கும் கோகாயிசத்திற்கும் தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. பல்வேறு பிரதேசங்களில் அதிக சதவீதம் எழுத்தறிவின்மை இருப்பதற்கும் அதிக கோகா இலைகள் பயன்படுத்துவதற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைப் புள்ளி விவர ஆராய்ச்சி காட்டுகிறது.

கோகா இலையில் ஊட்டச்சத்து இருக்கிறது என்று கூறினுலும் எவ்வகையிலும் அதை சரியான உணவுக்கு மாற்று உணவாகக் கருத முடியாது. பசியுணர்வை அழித்து நிலையானதோர் ஊட்டக்குறைவை உண்டாக்கிவிடுகிறது. உயரமான பிரதேசங்களில் வாழப் பழக்கப்படுத்திக் கொள்வதற்கு கோகா தேவை என நிரூபிக்கப்படவில்லை. மேலும் கோகா உயரமான பிரதேசங்களில் வாழ்வோரின் உடலில் வேறு விதமாக வேலை செய்யும் என்ருே வேறுவிதமான விளைவுகளை உண்டாக்கும் என்ருே கருதுவதற்குத் தகுந்தகாரணம் ஒன்றும் இல்லை. தென் அமெரிக்காவில் கோடிக்கணக்கானவர்கள் கொகேய்சம் என்ற நோயினுல் அவதியுறுகின்றனர். இந்தப் பழக்கம் சமுதாயத்திற்கும், தனிமனிதனுக்கும் கேடு விளைவிக்கும் ஒன்ருகும்.

கோகா மெல்லுபவன் செய்யும் வேலையின் அளவு பொதுவாகக் குறைவாகத்தானிருக்கும். ஒருமுக ஈடுபாடும் செயல்திறமையும் கொண்டு செய்யும் வேலைக்குத் தேவையான ஆற்றல் அவனிடம் குறைவே. அவன் எந்தப் பொறுப்பையும் ஏற்கும் திறமையற்றவனுகவே இருக்கிருன்; பணிபுரியும் நேரத்தில் விபத்துகளுக்கு எளிதாக ஆளாகும் நிலையிலிருக்கிருன். இத்துடன், கோகா மெல்லுகிறவனுடைய ஆரோக்கியத்திற்கும் அவனுடைய குழந்தைகளின் உடல்நலத்திற்கும் அந்த இலையினுல் விளையும் இன்னல்களைச் சேர்த்துப் பார்க்கும்போது கோகாவினுல் பொருளாதாரத்துக்கு ஏற்படும் தீய விளைவுகளை எளிதில் உணரலாம். ''கொகாய்சம்'' என்பது எங்கோ, எப்பொழுதோ நிகழக்கூடிய ஒன்று அல்ல. அது சமூக, பொருளாதார, நாகரீக, சுகாதாரக் கேடுகளின் ஒரு கோவையே.

(தொடர்ச்சி 33ம் பக்கம்)



படத்தில் காணும் காளானின் மயக்கம் தரும் தன்மை புராதன மெக்ஸிகோவின் மாயா குருமார்களுக்குத் தெரிந்திருந்தது. மதச் சடங்குகளில் அவர்கள் இதனைப் பயன்படுத்தினர். இக் காளானின் முக்கிய சத்தான ஸைலோஸைபின் இப்போது செயற்கை முறையில் செய்யப்பட்டு மன நோய் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. மருந்துகளிலன்றி வேறு விதமாக உட்கொண்டால் தீங்கிழைக்கக்கூடியது.

Photo Laboratoires Sandoz

**இன்று பெரும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் விஷயங்களில் ஒன்று எல்எஸ்டி, ஆம்பிடாமின்ஸ், மற்றும் சில அமைதிப்படுத்தும் மருந்துகள் உபயோகிப்பதால் ஏற்படும் அபாயங்கள் பற்றியதாகும். பின்வரும் பக்கங்களில் ''யுனெஸ்கோ கூரியர்'' இப் பிரச்னைகளில் சர்வ தேச நிபுணர்களான மூன்று பேருடைய கருத்தை வழங்குகிறது. ஆசிரியர்களுடைய முடிவு அவர்கள் பரந்த அனுபவ முடிவைக் கொண்டு மட்டுமின்றி, வெவ்வேறு நாடுகளில் செய்யப்பட்டுள்ள விஞ்ஞான ஆராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டதாகும். ரிச்சர்ட் எச் புளூம் அமெரிக்காவில் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் மனநோய் மருந்து திட்ட டைரக்டர், கார்ல் ஈவாங் (பக்கம் 18) நார்வே பொது சுகாதார இலாகா டைரக்டர் ஜெனரல். கிரிகரி அவ்ருட்ஸ்கி (பக்கம் 20) மாஸ்கோ மனவியல் மருத்துவத்துறை தலைவர்.**

# மனதை மாற்றும் மயக்க மருந்துகள்

## (எல்எஸ்டி, கஞ்சா, அபின் முதலியவை)

# ஒரு விஞ்ஞான ரீதியான மதிப்பீடு

**ரிச்சர்ட் எச். புளூம்**

**ரிச்சர்ட் எச். புளூம்** கலிபோர்னியா ராஜ்யத்திலுள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்தின் மனிதப் பிரச்னைகள் ஆய்வுக் கழகத்தில் மன இயல் துறை இயக்குநராக இருக்கிறார். அமெரிக்க உணவு, மருந்து நிர்வாகத்துறை, மனநல மருத்துவ தேசியக் கழகம், சட்ட அமுல், நிதி நிர்வாகத்துக்கான ஜனாதிபதி கமிஷன் ஆகியவற்றின் ஆலோசகர். மனநலம், பொது சுகாதாரம் குற்ற இயல் குறித்து நிறைய எழுதியுள்ளார்.

செயற்கை முறையிலும் இயற்கை முறையிலும் கிடைக்கக்கூடிய உளவியக்க மருந்துகள் நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருந்து வந்துள்ளன. இவற்றுள் மது மிகத் தொன்மையானது. கி. மு. 6000ம் ஆண்டிலேயே பழக்கத்திற்கு வந்து விட்டது. வேட்டையாடியும் உணவு சேகரித்தும் வாழ்ந்த மக்கள் ஒன்றிணைந்து ஆசியா மைனர், மத்தியக்கிழக்கு ஆகிய நாடுகளில் குடியேறி விவசாயத்தொழிலில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் மது உற்பத்தியையும் அதனைச் சேமித்து வைப்பது பற்றியும் கற்றறிந்தனர். மத்திய தரைக்கடல் நாடுகளின் கிழக்குப் பகுதியில் கி. மு. 2000த்திலேயே அபின் மருந்து உபயோகத்தில் இருந்ததெனச் சரித்திரம் கூறுகிறது.

வைத்திய சிகிச்சை, மதச்சடங்குகள், இதர சடங்குகள் ஆகியவற்றில் மட்டுமின்றி ஒரு சில சமயங்களில் பொதுவாகவும், தனியாகவும் இத்தகைய பொருள்கள் பரந்த வகையில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. கி. பி. முதல் நூற்றாண்டில் ஆசியா மைனரில் வாழ்ந்து வந்த டையஸ்காரிடஸ் என்னும் கிரேக்க மருத்துவர் மூலிகைகள் பற்றிய ஆராய்ச்சியின் முடிவில் இயற்கையாகக் கிடைக்கக்கூடிய மருந்துப் பொருள்கள் பற்றிய தொகுப்பை அளித்தார்.



## மருந்துக்கு அடிமை

மயக்க மருந்துக்கு அடிமையாகிவிடும் நோயாளிகளுக்கான சிகிச்சைமுறை இரண்டு கட்டங்களைக் கொண்டது. முதலில் மருந்து கிடைக்காமற் செய்வது; பிறகு அதனை எண்ணி ஏங்கும் மனநிலைக்கு மருத்துவம் செய்வது. நீண்டநாள் பழக்கத்துக்கு அடிமையானவர்களைப் படிப்படியாகத்தான் மீட்க வேண்டும். மயக்க மருந்துக்கு அடிமையாகிவிட்ட ஓர் இளம் பெண் அது கிடைக்காதபோது படும் அவஸ்தையைப் படத்தில் காணலாம். மார்பைன் மருந்துக்கு பழக்கப்பட்டு விட்டவர்களை அதிலிருந்து மீட்க 30 வார காலமாகிறது என்பது கண்டறியப்பட்டுள்ளது.



# மன நோய் மருத்துவத்தில் புரட்சி

மத்திய ஆசியாவின் வேத இலக்கியங்களில் மருத்துவக் குறிப்புகள் அனேகம் காணப்படுகின்றன. அதே போன்ற பண்டைய சீன மருத்துவ நூல்களிலிருந்து அக்கால சீன மக்களிடையே வாழ்ந்த மருத்துவ அறிஞர்கள் பற்றியும், பயன்படுத்தப்பட்ட பரம்பரை மருந்துகள் பற்றியும் அறிய முடிகிறது.

இன்றைய மருத்துவம் பெருமளவில் ஆதிகாலத் தொடக்கத்தின் தொடர்ச்சியே யாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒவ்வோராண்டும் மக்களுக்கு வகுத்துக் கொடுக்கப்படுவனவற்றுள் சரிபாதியளவு மருந்துகளில் முக்கியமானதாக அல்லது முக்கியமானவற்றுள் ஒன்ருக இயற்கையிலிருந்து கிடைக்கக்கூடிய மருந்துப் பொருள் இடம்பெறுகிறது எனக் கணிக்கப்படுகிறது.

நமது மூதாதையர்களால் சிந்திக்கக் கூட இயலாத அளவில் மருத்துவத்திலும் பொதுவாக சமுதாயத்திலும் பயன்படும் வகையில் இன்று எவ்வளவோ பொருள்கள் கிடைக்கின்றன. ஆதிகாலத்தில் பயன்படுத்தப்பட்டவற்றைக் காட்டிலும் நவீன மருந்துப் பொருள்கள் பெரும் ஆற்றல் வாய்ந்தவை. பலவகையான மருந்துகள் இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே அவற்ருல் மனிதன் அடையும் பயன்களைக் கொண்டு அவற்றிற்கிடையே பாகுபாடு செய்வது அவசியமாகும்.

தற்போது செய்யப்பட்டுள்ள பாகுபாடுகள் முடிவானவையல்ல. மருந்துகளின் ஆற்றல்களை அறிந்துகொள்ள இவை ஓரளவு உதவி புரியும். உளவியக்க மருந்துகளைச் சீராகப் பிரயோகிப்பதால் எல்லா மனிதர்களிலும் ஒரே மாதிரியான விளைவுகளே தோன்றுவதில்லை. உடல்நிலையையும், சூழ்நிலையையும் பொறுத்து ஒவ்வொரு மனிதனிலும் ஒவ்வொரு நாளிலும் மாறுபட்ட விளைவுகள் ஏற்படக்கூடும். ஏனெனில் இம்மருந்துகளில் பெரும்பாலானவை மனிதர்களை ஒரே சமயத்தில் பலதரப்பட்ட வகையில் பாதிக்கின்றன.

ஒருவனுடைய உளநிலையில் ஏற்படும் மாற்றங்கள், தொடர்ந்து நிகழும் தூக்கமும் விழிப்பும், கவலையையும் வேதனையையும் உணர்தல், சிந்தனையில் ஒழுங்குபடுவது, புலனறிவுகளைப் பாகுபாடு செய்வது, சமுதாயத்தில் இசைந்து கொள்வது, கல்வி பயிலுவது, நினைவுகளை ஏற்பது, இலட்சியங்களை வகுத்து முடிவு காண்பது, உடல் உழைப்புக்கான ஆற்றலை அளிப்பது, ஆகியவற்றை இம்மருந்துகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விஞ்ஞானிகள் முற்றிலும் ஆராய்ந்து அறிந்தபாடில்லை.

இம்மருந்துகள் உளநிலையை இயக்கும் விதம், அதாவது இம்மருந்துகளைப் பற்றிய விவரங்கள், ஆற்றல்கள், அவை உடலைப்பாதிக்கும் விதம், ஆகியவை பற்றிய ஆராய்ச்சிக்கான 'சைக்கோபார்மகாலஜி' இன்னமும் தொடக்க நிலையிலேயே இருந்து வருகிறது. முன்கூறியவற்றை நினைவில் கொண்டு இம்மருந்துகளைப் பின்வரும் முக்கிய பிரிவுகளாகப் பாகுபடுத்தலாம்.

உளஅமைதி, உளர்சீர்நிலை ஆகியவற்றுக்கான மருந்துகள்:—மதுவும் அபின் வகை மருந்துகளும் உள்ளத்திற்கு ஓய்வு அளித்து நோயாளியை உறங்கச்செய்யும் மருந்துகளாக வெகு காலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. எனினும் கவலையையும், பரபரப்பையும் அகற்ற 'டிராங்குலைஸர்' மருந்துகளை முதன் முதல் பயன்படுத்தியது, ஆசியாவாகும். ஆப்பிரிக்காவிலும் கூட இயற்கையில் கண்டறிந்த மூலிகைகள் கவலையையும் பரபரப்பையும் அகற்றும் மருந்துகளாக வெகுகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இரத்தக் கொதிப்பைக் குறைக்க விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட 'ராவோல்பியா' எனும் மருந்து இந்தியாவில் முதன் முதலில் 1931இல் கண்டுபிடிக்கப்பட்டது. இது மேற்கத்திய நாடுகளில் பின்னர் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டது. 1950இல் இம்மருந்து உளக்கோளாறுகளுக்கும் பயனுள்ளது எனக் கண்டுபிடிக்கப்பட்டது. இதிலிருந்து 'ரிசர்பைன்' எனும் மருந்து 1947இல் சுவிட்சர்லாந்து நாட்டில் செயற்கை முறையில் தயாரிக்கப்பட்டது.

இது உளநோய் மருத்துவத்தில் புரட்சிகரத் திருத்தத்தைத் தொடக்கி நவீன உளநோய் மருத்துவ இயலையும் (சைக்கோபார்மகாலஜி) உருவாக்கியது. தொடர்ந்து 'குளோர்ப்ரோமசைன்' என்னும் டிராங்குவிலைசர், மற்றும் அதனுள்ளடங்கிய அநேக மருந்துகள் ஆகியவை 14 ஆண்டுகளுக்குள்ளாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் சிறு வகை டிராங்குவிலைசர்கள் எனக் குறிப்பிடப்படும் மருந்துகளும் உள்ளன. உதாரணமாக 'மெப்ரோபமேட்', 'டைபினைல்மிதேன், 'குளோர்டியாஸெபாக்ஸைட் ஆகியவை, பெருவகை டிராங்குவிலைசர்களுக்கு உதாரணமாக 'க்ளார்ப்ரோமசைன்', 'பிஞேதியஸீன்', 'ரிசர்பைன்' 'பெர்பிஞஸைன்' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்விருவகை மருந்துகளும் மருத்துவத்தில் பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன: இவற்றுள்



சிறுவகை டிரான்குலைசர்கள் சாதாரண நரம்புத்தளர்ச்சி நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. பெருவகை டிரான்குவிலைசர்கள் உளநோய் வைத்தியசாலைகளில் பயன்பட்டுவருகின்றன. நோயைக் குணப்படுத்துவதில் இவை பெரும் வெற்றிபெற்றதோடல்லாமல் புதிய சமுதாய நலப் பாதுகாப்புத் திட்டங்களுடன் இணைந்து நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளன. வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பெறும் நோயாளிகள் டிராங்குவிலைஸரின் உதவியால் சாதாரண மக்களைப்போல் சமுதாயத்தில் வாழ்ந்து வர இயலுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மக்கள் அருந்தும் மருந்துகளில் 15 சதவீதம் சிறுவகை 'டிராங்குவிலைஸர்களே.'

இவை எதிர்பாராத, விரும்பத்தகாத விளைவுகளையும் அளிக்கக்கூடும். எதிர்பாராத இந்த விளைவுகளில் துன்பம் அளிக்கக்கூடியவையும் அபாயகரமானவையும் சாதாரணமாக துணை விளைவுகள் என்று கருதப்படுகின்றன. மேற்பார்வையின்றி இவற்றை உட்கொள்ளுவதால் எழும் பிரச்னைகள் குறித்துப் பின்னர் விவாதிக்கப் போவதால் இப்போது டிராங்குவிலைஸர்களின் விளைவாக எழும் உள விவகாரங்களையும், மற்றும் சிலவகைக் கோளாறுகளையும் அறிந்துகொள்வது நலமாகும். இவற்றுள் ஒன்று உள விவகார ஆதரவைத்தேடுவது. மற்றொன்று உடல் வகை ஆதரவைத் தேடுவது, பிறிதொன்று மருந்து அருந்துவதற்கு உடலைப் பழக்கிக் கொள்வது ஆகும். இக்கோளாறுகள் யாவும் 'மருந்தில் பற்று' என்ற வகையில் சேர்க்கப்பட்டிருந்தன. ஆனால் இப்பொழுது அவை மருந்துக்கு வசப்படுவதால் எழும் பிரச்னைகள் ஒரே வகையைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகின்றன. பெருவகை டிரான்குவிலைசர்களும் சிக்கல்களை எழுப்பக்கூடும். அவற்றுள் நரம்பு மண்டலக் கோளாறுகள் ஒன்றாகும்.

சிறுவகை டிராங்குவிலைசர்கள் உள அமைதி மருந்துகளைப் போன்றவையே. இவை தக்க அளவில் கொடுக்கப்படும்போது முன்னது உள அமைதியையும் பின்னது ஆழ்ந்த நித்திரையையும் அளிக்கக்கூடியவை.

உள அமைதி மருந்துகள் டிரான்குவிலைஸர்களுக்கு வெகுகாலம் முன்பே கண்டுபிடிக்கப்பட்டவை. பொதுவாக நோயாளிகளுக்களிக்கப்படும் 'பர்பிடியூரேட்ஸ்' என்னும் உள அமைதி மருந்து 1913இல் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நித்திரை மாத்திரைகள் ஒரு நபருக்கு ஓர் ஆண்டில் அநேக டஜன்கள் கிடைக்கக்கூடிய அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. வேறு வகையான உளஅமைதி மருந்துகள் புரோமைட், குளோரல் ஹைடிரேட் குளூடெதைமைடு பெல்லடோனா, ஆஸ்பரின் போன்றவையாகும். இவை குறைந்த அளவில் பழக்கத்திலிருப்பவை. உளஅமைதி மருந்துகள் நித்திரையை அளிப்பதற்கும் உள வேகத்தைக் குறைப்பதற்கும் பொதுவாகப் பயன்படுகின்றன. ஆனால் இவைகட்கும் துணை விளைவுகள் உண்டு. குறிப்பாக பர்பிட்ரேட் மருந்துகளின் விளைவாக உடல் வகையிலும் உள வகையிலும் பற்று ஏற்படக்கூடும். இதோடு மருந்தை அதிகப்படி தாங்கக் கூடிய ஆற்றலும் ஏற்படுகிறது. ப்ரோமைடு மருந்துகளை அதிகப்படி உட்கொள்ளுவதால் உடல்நோய் ஏற்படாவிடினும் உளக்கோளாறு ஏற்படக்கூடும். மற்ற உளமாற்று மருந்துகளைப்போல இதுவும் உளப்பற்றிற்குக் காரணமாகும்.

புதிய டிரான்க்விலைஸர் மருந்துகளுக்கு எதிர்மாறாக ஸெடட்டிவ் மருந்துகளை அளிப்பது அபாயகரமாக முடிகிறது. சிறு அளவில் இதை உட்கொள்ளுவதால் மயக்க நிலையும் இறப்பும் முடிவாகின்றன. குறிப்பாக இம்மருந்துகளுடன் மது போன்ற போதைப் பொருள்கள் கலக்கும் பொழுது அபாயம் இன்னும் அதிகரிக்கிறது. டிரான்குவிலைசர்களின் விளைவுகளைக் காட்டிலும் பர்பிட்ரேட் மருந்துகள் அதிக அளவு விஷய நிதானிப்பையும், தசைகளின் ஒத்துழைப்பையும் சீர்குலைக்கின்றன. இதனால் 'இசிவு' வலிப்பும், பிறகு உடல் தளர்ச்சியும் தோன்றி இறப்பில் முடியலாம். இம்முடிவைத் துரிதப்படுத்துவதற்கு அதிகப்படி பர்பிட்ரேட்டுகளைக் கொடுத்துப் பழக்கிவிட்டு, திடீரென நிறுத்துவது காரணமாக உள்ளது.

உள ஆற்றலை துரிதப்படுத்தும் மருந்துகளை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். குறைந்த அளவில் இயக்குபவை. இவை சமூகத்தில் வெகுவாகப் பழக்கத்தில் இருப்பவை. காப்பி, தேயிலை, காட் (கிழக்கு ஆசிய, அரேபிய பானங்கள்) வெற்றிலை-பாக்கு, கோலா, காவா, சாக்கலேட், கோகோ போன்றவை. மிகக் குறைந்த இயக்க ஆற்றல் கொண்டவை. 'காபின்' இருக்கும் பானங்களை மருத்துவர் அனுமதியின்றி வாங்கி அருந்தலாம். அருந்துபவன் தூக்கத்தை எதிர்த்து விழிப்போடு இருக்கலாம். இவற்றுள் 'காட்' என்பதன் விளைவுகள் குறித்து விவாதம் இருந்துவருகிறது. அதன் விளைவுகள் பொருட்படுத்தக்கூடிய அளவில் இல்லை என்பது நமது கருத்து.

இரண்டாம் வகை இயக்கு மருந்து 'நிகோடீன்' ஆகும். உலக மக்களிடையே வெகுவாகப் பழக்கத்திலிருந்து வரும் சுருட்டு, பீடி, மூக்குப்பொடி, சுவைக்கும் புகையிலை ஆகியவற்றுள் இது அடங்கியுள்ளது. வைத்தியத்துறையில் இதனால் ஒரு பயனும் இல்லையாயினும் இதை அதிகமாகப் பயன்படுத்தும்போது உளவகை ஆதரவு தேடும் கோளாறும் காலப்போக்கில் 'நிகோடினை'த் தாங்கும் ஆற்றலும் ஏற்படுகின்றன. புகைபிடிப்பவன் அதிகமாகப் புகை பிடித்துவிட்டுத் திடீரென்று நிறுத்திவிட்டால் கடினமான உடல்துயருக்கு ஆளா

# மயக்க மருந்தை நம்பி வாழும் வாழ்க்கையின் அபாயங்கள்

வான். மேலும் நீண்ட காலம் புகை பிடிப்பதனால் புற்றுநோய் தோன்றலாம் என்பது உறுதியாகி விட்டது. ஆனால் இதில் 'நிகோடீன்' எந்த அளவு பங்கேற்கிறது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மூன்றாம் வகை இயக்கு மருந்துகள் 'ஆம்பிடாமின்' கூட்டுப்பொருட்கள் அடங்கியவை. (இவற்றுள் பிப்ரடிரால், மெதில்பினிடேட் ஆகியவைகளும் உள்ளன) இவை அதிகம் உள, உடல் அயர்வை அகற்றவும், உடல் பருமனைக் குறைக்கவும் பரந்த அளவில் கொடுக்கப்படுகின்றன. 'நெக்ரோலெட்ஸி' எனும் நோயைக் குணப்படுத்தவும் இது பயன்படுகிறது. இந்நோய் உடையவன் தவிர்க்க முடியாத நீண்ட தூக்கத்திற்கு ஆளாவான். இம்மருந்து உஷார் நிலையையும் சுறுசுறுப்பையும் அளிக்கிறது. அதிகம் அருந்துவதால் காரணமற்ற பரபரப்பும் 'நச்சு' வகை உளக்கோளாறும் உண்டாகக்கூடும். இம்மருந்தை நீண்ட காலம் உபயோகிப்பதால் உளப்பற்றும், அதிக மருந்தைத் தாங்கும் சக்தியும் ஏற்படுகின்றன. விஞ்ஞானிகளில் ஒரு சாரார் உடல் பற்றும் ஏற்படும் என்று எண்ணுகின்றனர். ஆனால் இது அபூர்வமே.

ஆண்டிஸ் மலைகளில் பயிராகும் 'கோகா' இலையிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற 'கொகைன்' எனும் மருந்தும் உள இயக்கு மருந்து ஆகும். இவ்விலைகளை அப்படியே அருந்தினால் உணர்ச்சியை முறிக்கிறது. தட்பு, அயர்வு, வேதனை, கெட்ட ருசி, பசி போன்றவையும் முறிக்கப்படுகின்றன.

வைத்தியத்திற்கு அல்லாத வகையிலும் (பெரும்பாலான நாடுகளில் திருட்டுத்தனமாகவே) இது பயன்படுத்தப்படுகிறது. இரத்தத்திலே நேராகப் புகுத்தியும் மூக்குப் பொடியாகவும் இது பயன்படுத்தப் பெற்று வருகிறது. இதை உட்கொண்டு மக்கள் வலுப்பெற்று கிளர்ச்சி அடைகின்றனர். இதனைப் பயன்படுத்துவதன் விளைவாகப் போலித்தோற்றம், போலி அனுபவங்கள், பரபரப்பு போன்றவை தோன்றக்கூடும் சீரணக் கோளாறு, இசிவு வலிப்பு ஆகியவற்றையும் இம்மருந்து தோற்றுவிக்கிறது. 'கொகைன்' பிரயோகத்தால் உளவகைப் பற்றுதல் ஏற்படக்கூடுமாயினும் உடல்வகைப் பற்று ஏற்படுவதாகத் தெரியவில்லை.

ஐந்தாவது வகை இயக்கு மருந்துகள் அயர்வை முறிப்பவை; இவற்றுள் மோனோமைன் ஆக்ஸிடேஸ் என்னும் என்சைமும் நொதிப் பொருட்களை முறிக்கும் மருந்துகளும் 'டிரைசைக்ளிக்' கூட்டுப்பொருள்கள் அடங்கியுள்ளன. (இமிப்ராமின், அமிட்ரிப்டிலின், போன்றவை.) இம்மருந்துகள் துக்க நிலையையும் நீடித்த உள அயர்வையும் குறைக்கக்கூடியவை. ஒரு சில, அதே சமயத்தில் உஷார் நிலையைத் தணித்து உளக்குழப்பத்தை எழுப்பக்கூடியவை. இவை எத்தகைய பற்றுதலையும் உண்டாக்குபவை அல்ல. உளக்கோளாறு வைத்தியத்தில் மட்டுமே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருபவை.

இவ்வகையில் பல்வேறு மருந்துகள் உள்ளன. அவற்றுள் சில மருந்துகள் பல நூற்றாண்டுகளாகப் பழக்கத்திலிருந்து வருபவை.

நாய்க்குடைவகைப் பூஞ்சைக் காளான், பெபோட், எர்காட், கெனபிஸ் போன்றவையும் பலவகைத் தென் அமெரிக்கத் தாவரங்களும் தொன்மையானவை. புதிய கண்டுபிடிப்புகளில் 'எல். எஸ். டி. 25' மிகப் பிரபலமானதாகும்.

இந்த வகுத்தலின்படி எல்லாம் போலித் தோற்றமெழுப்பும் என்று எதிர்பார்க்கக்கூடும். ஆனால் பெரும்பாலும் அவ்வாறு அல்ல. புலனுணர்வில் மாறுபாடு காண்பது, காரணமின்றிக் கண்ணீர் சொரிவது, கவலையை எழுப்புவது, குறைப்பது, எதிர்மறை உளவிகாரங்கள், தன்னைப் பற்றிய மாறுபட்ட தோற்றங்கள், ஒடுங்கிய முறையில் மட்டும் அதிகமான உஷார் நிலை, பாடம் படிக்கும் திறமை குறைவது, மருந்து அதிகப்படி அருந்தும்போது குழப்பமும் உளக்கோளாறுகளும் ஏற்படுவது ஆகியவையும் காணப்படலாம்.

கெனபிஸ் எனப்படும் மார்ஜ்வானா, ஹஷீஷ் ஆகியவை பற்றி வெகுவாகச் சர்ச்சை இருந்து வருகிறது. இம்மருந்துகள் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பழக்கத்திலிருந்த போதிலும் அவற்றின் குண, குற்றங்கள் விஞ்ஞான முறையில் முற்றிலும் ஆராய்ந்தபாடில்லை. மருந்து அருந்தும், அளவில் வேற்றுமை, அருந்தும் விதத்தில் வேற்றுமை, நோயாளியின் போஷாக்கு மாறுபாடுகள் ஆகிய நிலைகளில் அதன் ஆற்றல் முடிவாகவில்லை.

சிறுசிறு அளவில் மருந்து பயன்படுத்தி வரப்படும்போது அமைதி உள்ளவர்களாயிருந்தால் ஏற்படும் விளைவுகள் மிகக்குறைவே. மருந்தை அதிக அளவில், உளநிலை குலைந்தவர்கட்கும் போஷாக்குக் குறைகளுடையவர்கட்கும் கொடுக்கும்போது, கெடுதலான விளைவுகள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. உதாரணமாக, உளக்கோளாறுகள், கருத்துக்குறை, உளவகைச்சாய்வு ஆகியவை.

வரலாற்று வாயிலாகப் பார்க்கும்போது பெரும்பாலான போலித் தோற்றமெழுப்பும் மருந்துகள் நாட்டுப் புற மருந்துகளாக வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. சமயச் சடங்குகளிலும், பலர் ஒன்று சேர்ந்தும், தனித்து உணர்ச்சியை மாறுபடச் செய்யவும் உளநிலைச் சீர்திருத்தங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. தற்போது கெனபிஸ் மருந்து ஆசியாவில் பரம்பரை மருந்தாகப் பயன்பட்டு வருகிறது. ஸையோட்டியையும், சில பூஞ்சண வகைகளையும், மதசம்பந்தமாகவும், வைத்திய சிகிச்சைகளுக்கும் அமெரிக்க இந்தியர் பயன்படுத்தி வருகின்றனர். எல். எஸ். டி. என்னும் மருந்தும், அதைப்போன்ற பிற செயற்கை மருந்துகளும் குழந்தைகளுடைய உளக்கோளாறுகட்கும், மது அருந்தும் நோயாளிகட்கும் உதவி மருந்துகளாகப் பரிசீலனை செய்யப் பெற்று வருகின்றன. தற்போது இம்மருந்துகளின் பரிசோதனைகளில் முக்கியமாகவிருப்பது, அவற்றைப் பற்றிய குண தோஷங்களைச் செயற்கை முறையிலும் உளவகை முறையிலும் ஆராய்வதே.

வரலாற்று ரீதியிலும் மனித இன ஆராய்ச்சி வாயிலாகவும் பார்க்கும்போது, மருந்து அருந்துவதில், ஒரு சில போக்குகளைக் காணமுடியும். முதலாவதாக, நாம் அறிந்த வரையில், பெரும்பாலான மக்கட் கூட்டங்கள் உளவியக்கு மருந்துகளை (மது உட்பட) உபயோகித்து வந்துள்ளனர். மூன்று அல்லது நான்கு கூட்டங்கள் இதற்கு விலக்காக இருக்கக்கூடும். இரண்டாவதாக சீர்ப்பட்ட உளநிலையுடைய ஒருமைப்பட்ட சிறு சமுதாயங்கள் இவற்றை விபரீத விளைவுகள் ஏதுமின்றி பயன்படுத்தியுள்ளனர். இத்தகைய மருந்துகள் சமய ரீதியிலும் வைத்திய வகையிலும் பயன்படுத்தப்பட்டதோடு விழாக்களிலும் இடம் பெற்று வந்துள்ளன. இம்மருந்துகள் கருத்தை நிலைக்கச் செய்யவும், சமயச் சின்னங்களாகவும் பயன்பட்டு வந்துள்ளன.

பொதுவான இத்தகைய உபயோகத்தைத் தவிர, தனிப்பட்டவர்கள் துயரைப்போக்கிக் கொள்ளவும் மற்றவர்களோடு கலந்து மகிழவும் பயன்படுத்தி வருகின்றனர். குழுவினர் ஒன்று சேர்ந்து பயன்படுத்தும்போது பரம்பரைப் பழக்க வழக்கங்களும் பிறருடன் இருப்பதன் விளைவாகவும் இம்மருந்துகளை அருந்துவதில் ஒரு கட்டுப்பாடு காணப்படுகிறது.

சமுதாய அமைப்பு மேலும் சிக்கலடைவதும் விவசாயத் தொழிலை மேற்கொண்டவர்கள் நகர வாழ்க்கையை ஏற்பதும், அல்லது சிறு கூட்டங்கள் பிறகூட்டங்களோடு நேரும் போரின் விளைவாக வெல்லப்பட்டு புதிய கலாசாரத்தை அடைவதும் இம்மருந்துகளின் உபயோகத்தில், அவற்றின் விளைவுகளில், அவற்றின் மதிப்புகளை நிதானிப்பதில் மாறுதலைத் தோற்றுவிக்கின்றன.

கிறிஸ்துவின் பிறப்புக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே, மது அருந்தும் பழக்கம் சீர்கேடான முறையில் முடிவது உணரப்பட்டது. இந்தச் சீர்கேடு ஒழுக்கமுறைக்கு முரணாகக் கருதப்பட்டிருக்கக்கூடும். அல்லது சட்ட விரோதமான செயலாகக் கருதப்பட்டிருக்கக்கூடும். மருந்தினால் ஏற்படும் நடத்தைப் பிசகுகளையும், ஆரோக்கியச் சீர்குலைவைப்பற்றியும் மக்கள் கவலைப்பட நேர்ந்தது.

பின்னர், கிரேக்க, ரோம வைத்தியத் துறையில் அபின், ஹெம்லக் போன்ற மருந்துகளால் ஏற்படும் அபாயங்கள் உணரப்பட்டன. ஆனால் மக்கள் இம்மருந்துகளை அந்தக்காலத்தில் அதிகமாகப் பயன்படுத்தி வந்ததாகத் தெரியவில்லை. மிகச் சிறு அளவில் நோயைக் குணப்படுத்த அல்லது மரணத்தை விளைவிக்க பயன்படுத்தப்பட்டன. (ஸாக்ரடீஸுக்கு மரண தண்டனை கொடுக்க ஹம்லக் மருந்து கொடுக்கப்பட்டது).

அடுத்தபடியாக 'கெனபிஸ்' அபாயகரமான மருந்தாகக் கருதப் பெற்றது. 'ஹஷீஷ்' ஆட்கொல்லி என்று கருதப்

பட்டது. இன்றளவும் இத்தவறான கருத்து நிலைபெற்றுள்ளது. ஆனால் அதற்கு விஞ்ஞான ரீதியில் எவ்வித ஆதாரமும் இல்லை.

காளான்களும் 'எர்கட்' என்னும் தாவர ஒட்டுண்ணியும் ஆல்கலாயிட் அடங்கிய பொருட்கள். இவற்றிலிருந்து 'ஹல்யூஸினேஜன்ஸ்' என்னும் நவீன மருந்து தயாரிக்கப்படுகிறது. இவை நோய்க்குக் காரணமானவை என்ற கருத்து தொடக்கத்தில் நிலவியிருக்கக் கூடும். ஆனால் இந்த மருந்து ஒருவனுடைய உணர்ச்சியை மாற்றக்கூடும் என்ற விஷயம் 19ம் நூற்றாண்டில்தான் பொதுமக்களது கருத்தை எட்டியது. கவலையையும் எழுப்பியது. அந்தச் சமயத்தில் பார்வையாளர்கள் ஸைபீரிய மக்களில் ஒரு கூட்டத்தார் ஒருவகைப் மூச்சி மருந்தை உபயோகித்து அதனால் பெற்ற நடத்தை மாறுபாட்டைக் கண்டு அச்சமுற்றனர்.

மருந்துக்கு அடிமை என்னும் நிலை சமீப காலத்தில்தான் அறிவுக்கு எட்டியது. 18ம் நூற்றாண்டின் பின்பகுதியும் 19ம் நூற்றாண்டின் முன் பகுதியுமே இந்தக் காலமாகும். அப்பொழுது கல்வி பெற்றவர்களும் ஆர்வமுள்ள வைத்தியர்களும் நீண்டகாலம் அபின் அருந்துவதால் வரும் விளைவுகளைக் கண்டறிந்தனர். இதற்குப் பிறகு வேறு பல பழக்கத்துக்கு அடிமைப் படுத்தும் மருந்துகளைப் பற்றியும் அறிய நேர்ந்தது.

உலக சுகாதார ஸ்தாபனம் சமீப காலத்தில்தான் 'மருந்துக்கு அடிமைத் தனம்' என்ற சொல்லே சீரானதல்ல என்று கருதத்தொடங்கியது. விஞ்ஞான முறைக்கு ஒவ்வாது என உணர்ந்து ''ஆதரவிலிருத்தல்'' என்னும் சொல்லைக் கொண்டு மாற்றியது.

பொதுவாகப் பார்க்கும்போது வேதனையை அகற்றுவதும், இன்புறச் செய்வதும், ஒருவரோடொருவர் நட்புக் கொள்வதை மிகைப்படுத்துவதும் உணர்வை அதிகமாக்குவதுமான உளவியக்கு மருந்துகள் எல்லாமே உளவகை ஆதரவைத் தேடுகின்றவையாக ஆகக் கூடும். உடல்வகை ஆதரவைத் தேடுகின்ற மருந்து நிறுத்தப்பெற்றதும் சில நோய்க்குறிகள் எழுப்பப்பெறும். உடல், அளவு தாண்டி மருந்தைத் தாங்கிக்கொள்ளும். பார்பிட்ரேட் மருந்துகள் இவ்வகைக் கோளாறுகளை எழுப்பக்கூடியவை. சில டிரான்குவிலைசர்களும், ஆம்பிடாமின்மருந்துகளும், மது, அபின் போன்ற போதை மருந்துகளும் உடல் ஆதரவைத் தோற்றுவிக்கும் மருந்துகளாவன.

இப்போது புதிய, புதிய மருந்துகள் உற்பத்தி செய்யப்பெற்று வருகின்றன இவை பெரும்பாலும் செயற்கையாக உற்பத்தி செய்யப்பெற்றவை. ஒரு சில மருந்துகள் கிராமியக் கண்டுபிடிப்புகளாக மேற்கத்திய நாடுகளுக்கு வந்தவை. உளவியக்க மருந்துகள் அருந்தும் அளவு அதிகரித்துக்கொண்டே போகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உளவியக்க மருந்துகள் ஒரு ஆண்டிற்கு ஒரு ஆண், ஒரு பெண், ஒரு குழந்தை ஆகியோருக்கு 60 தடவைகள் கிடைக்கும் அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றுள் அபின் மருந்துகள், மதுவகைகள் போன்றவை சேர்க்கப்படவில்லை.

(தொடர்ச்சி 34ம் பக்கம்)



Photo C Moeschlin and Bauer - Laboratoires Sandoz

## பூனையா அல்லது எலியா?

விலங்குகளுக்கு பரீட்சார்த்தமாக எல் எஸ் டி கொடுக்கப்பட்டபோது அவற்றின் போக்கில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது. மேலேயுள்ள பூனை எலியைக் கண்டு சீறுகிறது; ஆனால் உண்மையில் அச்சிறு எலியைக் கண்டு நடுங்கிப் பதுங்கிக்கொண்டிருக்கிறது. கீழேயுள்ள எலி மருந்து உட்சென்றதும் கயிற்றில் ஏறும் திறனை இழந்துவிட்டது.



From ''Le Livre de la Sante'' - Photos Harry Gruyaert, Neuro-psychopharmacological research unit, INSERM

# எல் எஸ் டி

# இளைஞர்களுக்கு புதிய அபாயம்

—கார்ல் ஈவாங்



மனச்சாந்திக்காக பழக்கமாக மருந்தருந்தும் மக்கள், எல். எஸ். டி. மெங்கலீன், சிலோசிபின், மரிஜுவானு ஹஷிஷ் போன்ற மருந்து வகைகள் தங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றன என்றும், தங்களின் ஆத்மீக வாழ்வை வளப்படுத்துகின்றன என்றும் கருத்துடையவர்களாக இருக்கிருர்கள். மேலும் அம்மருந்துகள் தங்களுக்கு ஆத்மஞானம் பெறும் அனுபவத்தைக் கொடுக்கின்றன என்றும், அவைகளால் வெளி உலக தொடர்புகளை மறந்து, தங்களின் சுய இயல்புகளைப் பற்றிய புது நுணுக்கமான தகவல்களைத் தாங்கள் அறிந்து கொள்ள முடிகிறது என்றும் கருதுகின்றனர்.

ஆனுல் உண்மை என்னவெனில், மேற்கூறிய எல்லா மருந்துவகைகளுமே தீங்கானவை. அவைகளை அருந்துவதால் எத்கைய விளைவுகள் ஏற்படுகின்றன? அவை பழக்கத்தை உண்டாக்குபவையா அல்லது உடலுக்கும் உள்ளத்துக்கும் தீங்கிழைப்பவையா? மனநோய்களுக்குக் காரணமானவையா? அல்லது தற்கொலை உணர்வைத் தூண்டுபவையா? என்பன போன்ற வினுக்களை எழுப்பும்போதுதான், நாமும் இத்தகைய மருந்தருந்துபவர்கள் மீதும், மருந்துகளினுல் ஏற்படும் விளைவுகள்மீதும், நம் கவனத்தைச் செலுத்துகிருேம்.

மயக்கம் தரும் மருந்துகளினுல் ஏற்படும் தொல்லைகள் ஆளை நேரடியாக பாதிப்பதுடன், விரிவான பல சமூக சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றன என்பது அநேகருக்கு அதிகமாகத் தெரியாது. ஏனெனில் உள்ளமும் உடலும் ஆகிய இருகூறுகளை மட்டும் கொண்டவனல்ல மனிதன். இந்த உண்மை அவன் நோயுறும் போதுதான் வெளிப்படையாகத் தெரிகிறது. ஏனெனில் அவ்வமயம் அவனது மூன்ருவது கூருகிய, சமூகத்தில் அவனது பங்கு பாதிக்கப்படுகிறது. மனித இனம் தனிமையில் இயங்க முடியாது. ஏனெனில் தனிமை நிலை உள்உயிர் இறப்புக்கும், உடல் சேதத்திற்கும் பொது மந்த நிலைக்கும் சமமானதாகும். ஒவ்வொரு மனிதனும் சூழ்நிலையின் படைப்பாவான். ஆகையால் அவன் தன்னைச் சுற்றியுள்ள உலகிலிருந்து பெறும் கருத்துக்களையும், தூண்டுதல்களையும் நம்பியே வாழ்கிருன். இதனுல்தான், மனிதன் எதிர்மறை செயல்களால் ஆனவன் என்ற ''பேல்லாவ்'' என்ற பெரியாரின் கூற்று முற்றிலும் பொருந்தும்.

மனமயக்கத்தைத் தரும் மருந்துகளின் விளைவுகளை மதிப்பீடு செய்யும் பொழுது, மனிதனின் எல்லா கூறுகளையும், மனதில் கொள்ளவில்லையென்ருல், அந்த மதிப்பீடு முழுமை பெற்றதாக இருக்க முடியாது என உலக நல அமைப்பு தெளிவாக கூறியிருக்கிறது.

உளச்சாந்திக்குரிய மருந்து வகைகள் யாவும் (பழக்கத்தைக் கொடுக்காதவையாக இருந்தாலும்) ஒரு வகையில் ஒத்த பொது இயல்பு உடையனவாகக் காணப்படுகின்றன. அதாவது அவை மனிதத் தொடர்புகளுக்கும், சமூக உறவுக்கும் உள்ள தேவைகளைக் குறைக்கின்றன. சமூகத்தின் உறுப்பினனுன ஒவ்வொரு நபரும் பங்கு பெற வேண்டிய சமூக உறவின் அளவையும், தரத்தையும் இம்மருந்து வகைகள் குறைக்கின்றன. மேலும் அவை, மனிதனின் இதர ஆர்வங்களைக் குறைத்து, அவனை ஒரு தன்னுணர்வு மட்டும் கொண்ட மனிதனுக ஆக்குகின்றன.

இதனுல் அவனுக்கு நாளடைவில்

---

**கார்ல் ஈவாங்** *நார்வே பொது சுகாதாரத் துறை இயக்குநர். பிரெஞ்சு ரேடியோவில் இவர் பேசிய மூன்று பேச்சுக்களை அடிப்படையாகக் கொண்டது இக் கட்டுரை.*



போதையூட்டும் மருந்துகள் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை செய்வதற்காக செக்கோஸ்லாவோகிய டெலிவிஷன் அமைப்பு மருந்து சாப்பிட்ட மயக்கத்தில் மாடி ஜன்னலிலிருந்து தாவிக்குதித்த இளம் பெண்ணின் நடத்தையைக் காட்டியது. (இடது புறமும் கீழேயும் உள்ள படங்கள்) இந்த மருந்துகளை சாப்பிட்டால் அமானுஷ்ய சக்தியைப் பெற்று வானில் பறக்கலாம் என நம்பப்படுகிறது. எல்எஸ்டி உட்கொண்ட பிறகு அழகான அமெரிக்க நடிகர் ஒருவர் தம்மீது பெட்ரோல் ஊற்றித் தீ வைத்துக் கொண்டார். உயிர் போகாவிட்டால் உருவம் சிதைந்து பிழைப்பே போய்விட்டது.

Photos © "Czechoslovak Life," Prague



தனது முந்தைய நண்பர்களிடமும், சமூக வாழ்விலும் இருந்த ஆர்வம் குறைந்து விடுகிறது. அவன் காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கு பெறும் ஆர்வத்தையும் கூட அவன் அறவே இழந்து விடுகிறான். இம்மருந்து வகைகளை உட்கொள்வோருக்குச் சில பொய்த்தோற்றங்களும், தவறான கற்பனைக்கருத்துக்களும் ஏற்படுகின்றனவே தவிர, அவர்கள் கலைத் திறமை மிக்க செயல்களில் ஈடுபடுவதாகவும் தெரியவில்லை.

இத்தகைய உளமயக்க மருந்துகளைப் பழக்கமாகப் பயன்படுத்துபவர்கள், சமூகப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுபடுவதற்காகவும், உலக அரசியலின் இக்கட்டான சூழலிலிருந்து விடுபடுவதற்காகவுந்தான் தாங்கள் இந்த மருந்துகளை உட்கொள்வதாக விவாதிப்பார்கள். மேலும் காலம் கடப்பதற்குள், வாழ்க்கையைப் பயனுடையதாக்கிக் கொள்வதாகவும் கூறுவார்கள். இவைகளெல்லாம் வீணாக உரிமை துறப்புக்கு அடிகோலுவனவே தவிர வேறில்லை.

இதிலுள்ள துன்ப நிகழ்ச்சி என்னவெனில், அன்பும் அரவணைப்பும் கிடைக்கப் பெறாதவர்களோ அல்லது பண்பு இயல்புகளில் கோளாறுகள் கொண்டவர்களோ, அல்லது சமுதாயத்துடன் தழுவி ஒன்றி வாழ

# நடை முறையில் மாத்திரை (மயக்க மருந்துகள்)

—கிரிகரி அவ்ருட்ஸ்கி

அமைதிப்படுத்தும் மருந்துகள் மயக்க மருந்துகளல்ல. ஆயினும் நீடித்தும் தொடர்ந்தும் உபயோகிப்பதால் பெருந் தீங்கிழைக்கிறது. இவற்றைத் தவருகப் பயன்படுத்துபவர்கள் தங்கள் கஷ்டங்களுக்குப் பரிகாரம் காண அவற்றையே நம்பியிருக்கத் தொடங்கி விடுகிருர்கள். அன்ருடப் பிரச்னையை எதிர்நோக்கும் ஆற்றலை இழந்து விடுகிருர்கள். பல நாடுகளில் அமைதிப்படுத்தும் மருந்துகளும் 'ஊக்கி' மாத்திரைகளும் (ஆம்பிடாமின்ஸ்) மருத்துவர் எழுதிக் கொடுத்தால்தான் தரப்படுகின்றன.

இயலாதவர்களோ மட்டும்தான் இத்தகைய உளமயக்கந்தரும் மருந்துகளைக் கையாளுகிருர்கள் என்று சொல்வதற்கில்லை. எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கக் கூடியவர்கள் என்று நாம் நம்பியிருக்கும் இளைஞர்களில் ஒரு பகுதியினரும் இம்மருந்துகளைப் பயன்படுத்துகின்றனர். அதிர்ஷ்டவசமாக இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகிற இளைஞர்களின் எண்ணிக்கை குறைவுதான்.

பொதுநலத்துறை அதிகாரிகளுக்கும் சமூகப் பாதுகாப்பு நிறுவன அதிகாரிகளுக்கும் குற்றத்துறை அதிகாரிகளுக்கும், மற்றும் நாட்டிலுள்ள அனைவருக்கும் மிகுந்த கவலையைக் கொடுப்பது என்னவெனில், எல். எஸ். டி. போன்ற மருந்துவகைகளின் உபயோகம் பற்றி பலநாடுகளில் இன்னும் சட்டம் செய்யப்படவில்லை என்பதும், இத்தகைய மருந்துகள் நோயற்றவர்களாலும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் ஆகும்.

முதல் முதலில் இம்மருந்துகளைப் பற்றிய கவலை தேவையா என்றே தெளிவாகத் தெரியவில்லை. ஆனுல் இம்மருந்தைக் கையாளும் பரிதாபத்துக்குரியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க, அதிகரிக்க அவர்களைப்பற்றிய கூக்குரல்களும் வலுத்தன.

1966ஆம் ஆண்டில், ஐக்கியநாடுகளின் பொருளாதார-சமூக அவையினரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு தனிக்குழு, உடல்நலத்திற்கும், சமூகப் பாதுகாப்பிற்கும் ஆபத்து விளைவிக்கக் கூடிய எல். எஸ். டி. போன்ற மருந்துவகைகளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைப் பற்றி மிகுந்த கவலைப்படுவதாகத் தெரிவித்திருக்கிறது. மேலும் எல். எஸ். டி. போன்ற மருந்துகளின் தயாரிப்பு, ஏற்றுமதி இறக்குமதி ஆகிய துறைகளில் எல்லா அரசுகளும் கண்டிப்பான கட்டு திட்டங்களை அமுலாக்க வேண்டுமென்றும், இம்மருந்தின் வர்த்தகத் துறையைத் தகுதிபெற்ற அதிகாரிகள் வசம் ஒப்புவிக்க வேண்டுமென்றும் இக்குழு அறிவித்திருக்கிறது.

எல். எஸ். டி. மருந்தைக் கண்டிப்பான மருத்துவத்துறை மேல்பார்வையின் கீழ் மருத்துவ ஆராய்ச்சிக்கு மட்டும்தான் பயன்படுத்தவேண்டுமெனவும் இந்தக்குழு பரிந்துரைத்திருக்கின்றது. மற்ற எத்தகைய விதத்திலும் இம்மருந்து பயன்படுத்தப்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் இந்தக் குழு அரசுகளைக் கேட்டுக் கொள்கிறது. ஒரு மருந்துக்காக சாதாரணமாக இத்தகைய நடவடிக்கை இதற்கு முன் எடுக்கப்பட்டதில்லை—ஒரு அகில உலக அதிகாரப்பூர்வமான குழு இவ்வாறு கடிந்துரைப்பதும் இதுவே முதல் முறையாகும்.

மருத்துவ உபயோகத்திற்கு எல். எஸ். டி. பயன்படுத்தப்படும் போது இக்கடும் நடவடிக்கைகள் தேவைப்படுவதில்லை. கடந்த 20 ஆண்டுகளாகவே இம்மருந்து மருத்துவத்திற்காகப் பயன்படுத்தப்படுவது குறைந்துவிட்டது. நரம்புத்தளர்ச்சி போன்ற கோளாறுகளைக் கண்டுபிடிக்கவும், அவற்றிற்கு சிகிச்சை அளிக்கவும் மட்டுமே இம்மருந்துகள் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில், உயிருடன் இருக்கத் தகுதியற்ற நோயாளிகளுக்கும், சிகிச்சையினுல் பயன் அடையாத நோயாளிகளுக்கும் இம்மருந்து பயன்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

ஐக்கிய நாடுகளின் விசேஷ குழுவின் சிபாரிசுக்கிணங்க, ஏறத்தாழ 22 நாடுகள் எல். எஸ். டி. என்ற மருந்தையும், மார்ஜுவானு, ஹஷிஸ், ஹிராயின் போன்ற மருந்துகளைப் போலவே சட்ட விரோதமானவைகளாக்கி விட்டன. ஆகையால், அனுமதியின்றி இம்மருந்துகளைக் கைவசத்தில் வைத்திருப்பதோ, விற்பதோ, விநியோகிப்பதோ அல்லது பயன்படுத்துவதோ, சட்ட விரோதமான செய்கைகளாகும். ஆகவே சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களுமாகும்.

எல். எஸ். டி. மருந்தின் விளைவுகளை நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவைகள் யாவற்றிலும் திடீரெனவும், மருந்தருந்தியபின் வெகு குறுகிய நேரத்திலும் விளைவுகள் ஏற்படலாம்.

முதல்பிரிவில், எல். எஸ். டி. மருந்து அளவு கடந்த சக்தியும் வலிமையும் பெற்றதைப் போன்ற ஒரு உணர்வைத் தூண்டிவிடுகிறது. இந்த நிலையை 'மெகலோமேனியக்' விளைவு என்று கூறுகிறோம். எடுத்துக்காட்டாக, 19 வயது பெண் ஒருத்தி, எல். எஸ். டி. மருந்து உட்கொண்டபின், பறவையைப்போல் தானும் பறக்கமுடியும் என்ற எண்ணத்தைப் பெற்று, சன்னல் வழியாகக் குதித்ததினுல், உயிரிழந்தாள். அதேபோல 21 வயதுடைய இளைஞன் ஒருவன் எல். எஸ். டி. மருந்தின் விளைவாக, சாலையில் செல்லும் எல்லா மோட்டார் போக்குவரத்துக்களையும் தான் கட்டுப்படுத்தமுடியும் என கூறி, சாலையின் நடுவில் சென்று நின்று கையை உயர்த்தி 'நிறுத்துங்கள்' என உரக்கக் கூவினுனும். ஆனுல் விபத்துக்குள்ளாகி உடனே கொல்லப்பட்டானும்.

இரண்டாவது பிரிவிலோ, எல். எஸ். டி. மருந்தின் விளைவு நேர்மாருனதாகும். அது, ஆழ்ந்த சோர்வையும், நம்பிக்கையின்மையையும், கோழைத்தனத்தையும் கொடுக்கின்றது. ஆகையால் தாங்கள் பயனில்லாதவர்களாவும், பாவகரமானவர்களாகவும், தகுதியற்றவர்களாவும் வாழ்ந்து கொண்டிருப்பது போன்ற எண்ணம் மேலோங்குவதால், தற்கொலை முடிவுக்கும் அவர்களைத் தூண்டுகின்றது.

மூன்ருவது பிரிவில், எல். எஸ் டி. மருந்தைப் பயன்படுத்துபவர்கள், தங்களைச் சுற்றியுள்ளோர் தங்களைக் கொல்லத் திட்டமிடுகின்றனர் என்ற அச்ச உணர்வையும், கவலையையும் கொள்கின்றனர். ஆகையால், தற்காப்புக்காக, மற்றவர்களைத் தாக்க முற்பட்டு கொலை செய்யவும் துணிகின்றனர்.

நான்காவது பிரிவில், ஒருபொது குழப்பநிலை ஏற்படுகிறது. இதில் மனநோயுடையோர் போலவும், வெறியர், போலவும், காலத்தைப்பற்றிய அறிவிழந்து ஏமாற்றம், குழப்பம் முரண்பாடான எண்ணங்கள் ஆகியவற்றைக் கொண்டவராகவும் காணப்படுகின்

(தொடர்ச்சி 33ம் பக்கம்)




WHO photo - K. Brodie

இருபதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் இரசாயனம், மருந்து வாகடம் ஆகிய துறைகளில் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. ஆன்டிபையாடிக்ஸ் என்கிற அற்புத மருந்து வகைகள் வந்தபிறகு பல்வேறு நோய்களை குணப்படுத்தவும் நிவாரண்ம் அளிக்கவும் ஏற்ற விரிவான ஔஷதங்கள் கிடைத்துள்ளன.

புது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் காரணமாக இயற்கையை மனிதன் மேலும் பல துறைகளில் வென்றுவிட்டான். ஆனால் மந்திரவாதியின் துணைவன் போல இந்த மகத்தான சக்திகள் நமது கட்டிற்கு அடங்காத நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் தோன்றியுள்ளது. இதற்கான அபாய அறிகுறிகள் பல தென்பட்டுள்ளன.

நவீன மருந்துகளை உபயோகிப்பது எளிது. அவை சிக்கல்களான விளைவுகள் அதிகம் இல்லாதவை. எனவே டாக்டரது கட்டளைப்படி இல்லாமல் நோயாளிகள் அவற்றைத் தாமே வாங்கி சாதாரண வைத்தியத் தேவைகளுக்கும் வரவர அதிகமாக உபயோகித்து வருகிறார்கள். சில சமயம் வருஷக்கணக்கில் கூட உட்கொள்கிறார்கள்.

இத்தகைய வைத்தியத்திற்கு ஆகும் செலவு அதிகம் அல்ல. பெரிய தொழில்முறை ரீதியில் மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. கவர்ச்சிகரமான தோற்றத்துடன் மருந்துக்கடைகளில் எண்ணற்ற மருந்துகள் குவிந்து கிடக்கின்றன. ஏராளமாகச் செலவழித்து விளம்பரம் செய்து ஒரே மருந்தை பல பெயர்களில் விற்பதையும் காண்கிறோம்.


**கிரிகரி அவ்ருட்ஸ்கி** *சோவியத் யூனியனிலுள்ள மனவியல் மருத்துவர்களில் முக்கியமான ஒருவர். மாஸ்கோ மன நோய் மருத்துவக் கழகத்தின் தலைவர். இவர் எழுதியுள்ள சில நூல்கள் ஆங்கிலம், ஜெர்மன் மொழிகளிலும் வந்துள்ளன.*


விளம்பரம், குறைந்தவிலை, வாங்குவதில் உள்ள சுலபம் காரணமாக மருந்துகளைக் கண்மூடித்தனமாக உபயோகிக்கும் வழக்கம் அதிகரித்துள்ளது. எந்நிலையிலும் அவற்றின் தேவையற்ற உபயோகம் அதிகரித்து வருவதைக் காண்கிறோம். இதன் விளைவாக விசித்திரமான ஒரு நிலைமை தோன்றியுள்ளது. மருந்து இல்லாமல் இருக்கமுடியாது என்பதே அந்நிலை.

ஒரு நோயாளிக்கு உள்ளூர வியாதி நெடுநாளாக இருந்துவருகிறது. வலி குறைவதற்காக ஒரு மருந்தை டாக்டர் எழுதித் தருகிறார். அதை நீண்ட காலம் சாப்பிடவேண்டும் என்கிறார். அப்படி உட்கொள்ளும் மருந்தைக் குறைத்தால் நிலைமை சிரமமாகி சீர்கேட்டின் அறிகுறிகள் தென்படுகின்றன. இந்த நோயாளி விஷயத்தில் மருந்து அவசியம். நோயாளிக்கு அதனால் நன்மை ஏற்படுகிறது என்பதைக் காண்கிறோம்.

வேறு ஒருவகை நோயாளியை எடுத்துக்கொள்வோம். மருந்து தன் பணியை செய்துவிட்டது; நோய் பின்னடைந்துவிட்டது. ஆனால் அது திருப்பிக் கொள்ளுமோ என்ற பயத்தில் அதை மீண்டும் சாப்பிடுகிறான். மருந்து இல்லாமல் இருக்கமுடியாது என்ற இந்த நிலை முக்கியமாக உளவியலைப் பற்றிய விவகாரமாகிவிடுகிறது. இதனால் தேக ஆரோக்கியம் கெடும். கவலையால் பீடிக்கப்பட்டவர்களிடம் இந்த மனப்பான்மையைக் காணலாம். சொல்லிக் கேட்க வைக்கலாம். மேற்கொண்டு மருந்து தேவை இல்லை என்று விளக்கிக் கூறலாம். அதைத் தொடர்ந்து சாப்பிடுவது அபாயம் என்று புலப்படுத்தலாம்.

உளவியல் கோளாறுகளுக்கு செய்கின்ற வைத்தியத்தின் பகுதியாக நவீன மருந்துகளைப் பயன்படுத்தும் விஷயத்தில் இம்மாதிரி நடந்தால் அது கடுமையான விஷயமாகக் கருதப்படும். சில மருந்துகள் வலியை ஆற்றுகின்ற தன்மை உடையது. மன அமைதி தரும் மருந்துகள் என்று அவற்றைக் குறிப்பிடுவது வழக்கம்.

மற்றவை ஊக்கம் தரவல்லவை. அவற்றை மனநோய் மருந்துகள் என்று குறிப்பிடலாம். இந்த மருந்துகள் இருப்பதன் காரணமாக மனோ வைத்திய ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லாமலேயே ஆயிரக்கணக்கான மன நோயாளிகள் ஜன்னி, மனப்பிராந்தி, சோர்வு போன்ற கடுமையான சிரம நிலைகளிலிருந்து விடுதலை அடைந்துள்ளனர். இவர்கள் விஷயத்தில் மருந்து இல்லாமல் இருக்கமுடியாது என்ற மன நிலை இருப்பது முற்றிலும் நன்மை பயப்பதாக இருக்கும். நோயாளியின் மனதை அலைக்கழிக்கின்ற மன உளைச்சல்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு இந்த மருந்துகள் துணை புரிகின்றன. நோய் முழு அளவில் குணமடையாத நிலையில் மருந்தைக் குறைத்தால் மீண்டும் கஷ்டம் ஏற்படும்.

மன அமைதிதரும் மருந்துகள் மன நோய்க்கான மருந்துகள் ஆகிய இரு வகைகளையும் உபயோகிப்போர் நல்ல ஆரோக்கியநிலை உள்ளவராக இருக்கக் கூடும். அல்லது சோர்வு, சிடுசிடுப்பு போன்ற கோளாறுகளுக்காக டாக்டர் இதை எழுதிக் கொடுக்கலாம். முடிவு காணாத நிலை, கவலை, அசிரத்தை ஆகியவை விஷயத்திலும் இவற்றை உபயோகிக்குமாறு டாக்டர்கள் எழுதித்தருவதும் உண்டு.

இந்த நோய்கள் விஷயத்தில் அமைதி தரும் மருந்துகளைக்கொண்டு வைத்தியம் செய்வது நல்ல பயன் அளிக்கிறது. நோய்களின் அறிகுறிகள் விரைவில் மறைந்து விடுகின்றன. சென்ற ஆறு அல்லது ஏழு ஆண்டுகளாக 'மேப்ரோபமேட்', 'லிப்ரியம்',



Photo © Holmes-Lebel - Michèle Vignes

சான்பிரான்சிஸ்கோ கோல்டன் கோட் ப்பார்க்கில் ஒரு ஹிப்பி கூட்டம்.

# எதிர்பாராத திருப்பித்தாக்கும் விளைவு

'வாலியம்' 'டிரயக்ஸாஜின்'' போன்ற மருந்துகள் முன் எப்பொழுதும் கண்டிராத அளவில் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. 1963-ம் ஆண்டில் டாக்டர்கள் எழுதிக் கொடுத்ததன் பேரில் மட்டும் 60,775,000 யூனிட் மருந்துகள் அமெரிக்கக் கடைகளில் விற்பனை ஆயின. டாக்டர் சீட்டு இல்லாமல் வாங்கிப்போனது ஏராளம். அது இந்தக் கணக்கில் வரவில்லை.

தாங்கமுடியாத கடுமையான பதட்ட நிலைமையிலிருந்து துரிதமான நிவாரணத்தைப் பயனுள்ள வகையில் அளிக்கின்ற மருந்தின் செல்வாக்கு பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அதுவரை சமாளிக்கவேண்டிய சிரமங்களை எதிர்நோக்கத் தன்னால் முடியும் என்று நோயாளி கருதுகிறான். இந்த மருந்துகள் மாயமாகக் குணப்படுத்துகின்றன என்றதினால்தான் நவீன வாழ்க்கையில் கெடுபிடி காரணமாக அமைதி தரும் மருந்துகளும் அதிக முக்கியத்துவம் பெற்றுவிட்டன. இப்பொழுதெல்லாம் நண்பர்கள் சந்திக்கையில் காலநிலையைப்பற்றியும் மற்ற முக்கிய விஷயங்களைப்பற்றியும் பேசுவதுடன் அவர்கள் உபயோகிக்கும் மன அமைதி மருந்து எந்த ரகத்தைச் சேர்ந்தது என்று கேட்பதும் சகஜமாகிவிட்டது.

வேறு எவ்வாறு இருக்கமுடியும்? இம்மருந்துகள் தீங்கு அற்றவை என்று கருதப்படுகின்றன. வேறு விபரீத விளைவுகள் பற்றிய அச்சமில்லாமல் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்று கருதப்படுகிறது. சில விளம்பரங்களும் டாக்டர்களும் அவ்வாறு கூறுகின்றனர். ஹெலேனியம், லிப்ரியம் ஆகியவை சிலசமயம் மயக்கத்தை விளைவிக்கின்றன. இணைந்த செயல்முறையையும் சற்று சிரமப்படுத்துகிறது. ஆனால் இவை தற்காலிக அறிகுறிகள்தான்.

நவீன வாழ்க்கை விளைவிக்கின்ற சாசுவதமான நிர்ப்பந்த நிலைக்கு நரம்புகள் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும் என்பதில்லை என்று நினைக்கத் தோன்றும். நரம்புகளை சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கவும் கவலைகளைப் போக்கவும் தன்னம்பிக்கையை வளர்க்கவும் வேண்டிய மனோதைரியத்தை வளர்க்க நிர்ப்பந்தம் இல்லாதபடி இந்த மருந்துகளைக்கொண்டு கஷ்ட நிவாரணம் பெறலாம் அல்லவா என்று நினைக்கத் தோன்றுகிறது.

முதலில் மன அமைதி மருந்துகளைப் படுக்கை அறையில் காணலாம். பிறகு அது சட்டைப்பைக்கும் கைப்பைக்கும் வந்துவிடுகிறது. எஜமானனைப்பேட்டி காணும் முன் அல்லது ஒரு கூட்டத்தில் தோன்றுவதற்கு முன்னால் அல்லது ஒரு குடும்பச்சண்டைக்குப் பிறகு ஒரு மாத்திரையை சுலபமாகப் போட்டுக் கொள்ளலாம் அல்லவா?

சிகரெட் புகைப்பதைவிட மாத்திரை விழுங்குவது நல்லது என்று கருதப்படுகிறது. அது உண்மைதான். மாத்திரையினால் நுரையீரல்களுக்கு தீங்கு நேரிடுவதில்லை. ஆனால் டாக்டர் சொன்னது ஒருநாளைக்கு இரண்டு அல்லது மூன்று மாத்திரைக்குப் பதில் நான்கு அல்லது ஐந்து மாத்திரை என்ற அளவுக்கு உயர்ந்துவிடுகிறது. மருந்து முன்போல வேலை செய்வதில்லை. முன்னர் தந்த பயன் கிடைப்பதற்கு அதிக அளவு மருந்து தேவைப்படுகிறது. அவ்வாறு பழக்கம் ஏற்பட்டுவிடுகிறது.

இத்தருணத்தில்தான் தயக்கம் ஏற்படுகிறது. மனச்சாட்சி உறுத்துகிறது. உண்மையில் இம்மாத்திரைகள் நல்லதுதானா என்ற கேள்வி எழுகிறது. நோயை அகற்ற என்று முதலில் தயாரித்த மருந்துகள் நோயாளியை எதிர்த்துத் தாக்குகிறது என்பதைக் காண்கிறோம்.

''ஆம்பிடெமீன்'' என்ற மருந்து வகைகள் விஷயத்தில் இவ்வாறுதான் நடந்துள்ளது. 1950 முதல் 1960 வரை பிற அமைதி தரும் மருந்துகளைப் போலவே இவை உபயோகத்தில் இருந்தன. இவை உளவியல் மருந்துவகையைச் சேர்ந்தவை. ஆனால் தெம்பூட்டும் தன்மை உடையவை. மனத்திற்கும் தேகத்திற்கும் ஆம்பிடெமின் மாத்திரைகள் ஊக்கமளித்து உற்சாகப்படுத்தும் தன்மையுடையது. அதனால் உணவு உட்கொள்வது குறைகிறது. எனவே தேகம் மெலிகிறது. விரிவாக விளம்பர இயக்கங்களை நடத்தியதன் காரணமாக அவை விசேஷ செல்வாக்குபெற்றன. டாக்டர்கள் சீட்டு இல்லாமலேயே தரப்பட்டன.

1954ம் ஆண்டில் ஜப்பானில் 2,00,000 பேர் ஆம்பிடெமின் உபயோகித்தனர். இறுதியாக சர்க்கார் குறுக்கிட்டு கடுமையான வைத்தியக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியது.

ஆம்பிடெமின் மாத்திரைகளின் உபயோகம் உடல், உள அமைதியின்மையில் கொண்டுபோய்விடலாம். நிறைக் குறையும், தூக்கமின்மையும் வந்துவிடலாம். நரம்புக் கோளாறுகள் ஏற்பட்டு மனநிலையைப் பாதிக்கக் கூடும். தொடர்ந்து மாத்திரைகளை உட்கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அதிகரிக்கும். கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைச் செய்த போதிலும் இம்மாத்திரைகள் அபாயகரமானவை. இளைஞரைப் பாதிக்கும். இன்னும் இந்த துஷ்டப் பிரயோகம் நீடிப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது.

ஆம்பிடெமின் உபயோகத்தைக் குறைத்து ஒரு கட்டுதிட்டத்தில் வைத்திருக்கவேண்டும் என்று டாக்டர்களும் விஞ்ஞானிகளும் வைத்திய சஞ்சிகையில் கூறியுள்ளனர். பல சிறந்த நல்ல குணங்கள் படைத்த ஆம்பிடெமின் போன்ற மருந்தானது போதை தரும் சாதனம் அல்ல. எனினும் அவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது அதன் வரலாற்றிலிருந்து தெரிகிறது.

ஆம்பிடெமின் லாகிரி வகைகளைப் போன்றது அல்ல. தெம்பூட்டும் வகையைச் சேர்ந்தது. அதன் ரசாயன அமைப்பும் வைத்திய குணங்களும் மாறுபட்டவை. இரவில் விமானங்களைச் செலுத்தும் விமான ஓட்டிகள் தெம்பாக இருக்கவும் அவர்களது தூக்க நிலையை அகற்றவும் ஆம்பிடமின்னை உபயோகிகலாம் என்று முதலில் மருந்துத் தயாரிப்பாளர் கூறினர். இதில் எவ்வளவு அபாயம் உள்ளது என்பதை அவர்கள் முதலில் கண்டு கொள்ளவில்லை. விரிவான பரிசோதனைகளை முழு அளவில் நடத்திப் பார்த்தபிறகுதான் அதன் அபாயத் தன்மை புலப்பட்டது. அவற்றின் விரும்பத் தகாத விளைவுகளை அடியோடு அகற்றுவதற்கான வழிமுறைகளை இன்னும் கண்டுபிடித்தாகவில்லை. ஆம்பிடெமின் மதிப்பைப் பற்றி சந்தேகங்களை எழுப்பியுள்ள அந்த தீயவிளைவுகள் யாவை?

ஆம்பிடெமின் மருந்து வகைகள் முக்கியமாக நரம்புகளைப் பாதிக்கின்றவை. உற்சாகமளித்து தேகம் நல்ல நிலைமையில் இருக்கிறது என்ற ஒரு உணர்வை ஊட்டிக் கொள்ளும் தன்மை ஆம்பிடெமின்சுக்கு உண்டு. ஆகையால்தான் தெம்பூட்டும் மருந்து வகையில் அவை பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. தொடர்ந்து நீண்டகாலம் கொடுத்தாக வேண்டிய மருந்து இது. எனவே போகப்போக மருந்து இல்லாமல் இருக்கமுடியாது என்ற நிலைமை வெவ்வேறு அளவில் நோயாளிக்கு ஏற்பட்டு விடுகிறது.

அதிகபட்ச அளவு தெம்பை அடையவேண்டும் என்ற வேகத்தில் இந்த மருந்தைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர். இந்த மருந்து இல்லாமல் இருக்கமுடியாது என்ற உடல் நிலை சிருஷ்டிக்கப்படவில்லை. எனினும் தெம்பூட்டுகிற இம்மருந்தை திடீரென வாபஸ் பெற்றால் நெடுநாளைய அலுப்பு மீண்டும் புலப்பட ஆரம்பித்து விடுகிறது. தூக்கம் அதிகமாகத் தேவைப்படுவதால் மிகையான உபயோகத்தில் நாட்டம் ஏற்படுகிறது.

எனவே மருந்தை வாபஸ் பெறுகின்ற காலத்தில் உடல் சோர்வு, மனச்சோர்வு ஆகியவை ஏற்படுகிறது. எனவே மருந்து அதிகமாக உபயோகிக்கும் எண்ணம் ஏற்படுகிறது. இல்லாமல் முடியாது என்ற நிலைமையைத் தோற்றுவிக்கும் மருந்து வகைகளில் மார்பீன், பார்பிடுரேட் மருந்துகளும் மதுவகைகளும் பிற மருந்துகளில் அடங்கும். அவற்றின் விளைவுகளுடன் ஆம்பிடெமின் விளைவுகளை ஒப்பிட முடியாது. ஆம்பிடெமின் மருந்துகளை வாபஸ் பெறுவதால் உயிருக்கு ஆபத்து இல்லை. உடலை விட உள்ளத்துக்குத் தான் வைத்தியம் தேவை.

நரம்புகளுக்குத் தெம்பூட்டுகின்ற பல மருந்துகளிடம் இல்லாத ஒரு குணம் ஆம்பிடமினிடம் உண்டு. அது தான் ஜரித்துக் கொள்ளக்கூடிய தன்மை என்பதைப்பற்றியது. போகப் போக முதலில் உபயோகித்த அளவில் மருந்து கொடுத்தால் பயன் கிடைப்பதில்லை. அதற்கு அதிகமான அளவில் மருந்து தேவைப்படுகிறது. இம்மருந்தின் அளவை அதிகரித்துக் கொண்டே போனால் அது மரணத்தில் கொண்டு போய்விடும்.

மனஅமைதி மருந்துகள் என்ற டிரான்குவிலைஸர்கள் எந்த ஆம்பிடமினையும் மற்ற போதை மருந்துகளையும் போன்றது அல்ல. போதை மருந்துக்கு உள்ள தன்மைகள் சில அமைதி மருந்துகளிடம் காணப்படலாம். ஆனால் போதை மருந்துகளைப் போல அவை இல்லாமலிருக்க முடியாது என்பது இல்லை. போகப் போக அதிகமாக உபயோகிக்க வேண்டும் என்பது அல்ல. ஆனால் சில டிரான்குவிலைஸர்கள் இல்லாது முடியாது என்ற மனநிலையை விளைவிக்கக் கூடியவை என்பதை மறுக்க முடியாது.

எனவே டிரான்குவிலைஸர்கள் அபின், கொக்கையின், மார்பின் போன்ற லாகிரி வஸ்துக்களுக்கும் ஆம்பிடமினுக்கும் முற்றிலும் மாறுபட்ட கருத்து உள்ளது. அவை உள்ளம் நரம்பு சம்பந்தமான கோளாறுகளுக்கான வைத்தியத்தில் நியாயமான, பயனுள்ள வகையில் உபயோகிக்கக்கூடியவை. இவற்றிற்கு மட்டுமல்லாமல் இதயப் பகுதியில் தோன்றும் வலிகளைப் போக்கவும் இரத்த அழுத்தத்திற்கும் பயன்படுகின்றன. மெப்ரேபமேட் லிப்ரியம், ட்ரையாக்ஸஜின் ஆகிய அமைதி மருந்துகள், இந்த வியாதிகளுக்கு சிகிச்சை அளிப்பதில். பயனுள்ளவையாக இருக்கின்றன.

எல்லா மருந்துகளைப் போலவே டிரான்குவிலைஸர்களையும் மற்ற அமைதி மருந்துகளையும் மிதமாக டாக்டரின் கட்டளைப்படிதான் உபயோகிக்க வேண்டும்.

டிரான்குவிலைஸர்களை உபயோகிப்பதால் தோன்றக்கூடிய பந்தோபஸ்து உணர்வு மனதின் பணிகள் பலவற்றை அசாத்தியமாக்கி விடக் கூடும். திடசித்தத்தையும், யோக்யதையையும் பாதிக்கக்கூடும். அன்றாட சிரமநிலைகளை எதிர் நோக்கி சமாளிப்பதற்கு துணை செய்யக்கூடிய தன்மைகளைப் பாதிக்கலாம்.

ஒரு குறிப்பிட்ட தருணத்தில் உடற்கூறிலுள்ள கேட்டைச் சமாளிப்பதற்காக மட்டுமே டிரான்குவிலைஸர்களை உண்மையில் உபயோகிக்க வேண்டும். தனி நபரின் முயற்சிக்கு துணைபுரிவது தான் அவற்றின் நோக்கம். அந்த முயற்சியே தேவையில்லாதபடி செய்து விடவேண்டும் என்று கருதலாகாது. எலும்பு முறிவு ஏற்பட்டால் ஊன்று கோல்கள் சரியாக எலும்புகள் படிவதற்குத் துணை புரிகின்றன. பளுவை ஓரளவு தாங்கி உடலுறுப்புகளை அசையாமல் வைத்திருக்க அவை உதவுகின்றன. ஊன்று கோல்களை எப்பொழுதுமே உபயோகிக்க முற்பட்டால் செயலற்ற நிலையில் வைக்கப் படும் தசைகள் மரத்துப் போகின்றன. குணமடைவது தாமதப்படுகிறது. இதுவே டிரான்குவிலைஸர் விஷயத்திலும் பொருந்தும்.

தொடர்ந்து டிரான்குவிலைஸர்களை உபயோகித்தால் அவற்றைப் பயன்படுத்தாமல் முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிடும். மக்களுக்கு மருந்தில் நம்பிக்கை பிறந்து விடுகிறது மிதமான அளவில் அவற்றை உபயோகிப்பவன் தன் இஷ்டப்படி எப்பொழுது வேண்டுமானாலும் அதை நிறுத்தி விடலாம். ஆனால் சில சமயம் இதுகூட அவ்வளவு சுலபமாக இருப்பதில்லை.

பலமாதம் அதிக அளவில் டிரான் குவிலைஸர்களை உபயோகித்த ஒருவன் அதை திடீரென நிறுத்திவிடுகிறான். அதன் விளைவுகள் விரும்பத்தகாதனவாக ஆகின்றன. வலிப்பு ஏற்படுகின்றது. ஆனால் மிதமாக உபயோகித்தால் பெரிய சிரமம் எதுவும் விளையாமல் டிராங்குவிலைசர்களை நிறுத்தமுடியும். போதை வஸ்துக்களை உபயோகிக்காமல் இருக்க முடியாது என்ற உடல் நிலையையும் ஆம்பிடமின் விளைவிக்கின்ற உளவியல் தன்மையையும் போல இல்லாமல் வாபஸ் பெற இயலும்.

மேலே குறிப்பிட்ட இந்தக் காரணங்களைக் கொண்டு நாம் கூறுவதாவது— டிரான்குவிலைஸர்களை தாராளமாக விற்பனை செய்யக்கூடாது. டாக்டர்களின் சீட்டுக்களின் பெயரிலேயே கொடுக்கவேண்டும். தவிர நோயாளியின் உடல்நிலையையும் நரம்பு நிலை, மனோபாவம் முதலியவற்றையும் நோயின் கடுமையையும் கவனித்துத் தான் டாக்டர்களும் மருந்து எழுதிக் கொடுக்கவேண்டும்.

பல நாடுகளில் டிரான்குவிலைஸர்களை வர்த்தக ரீதியில் விளம்பரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பொருட்களைப்பற்றிய தகவல்கள் டாக்டர்களுக்கு மட்டுமே அவற்றின் சஞ்சிகை மூலம் விளக்கப்படுகின்றன. இந்த தேசங்களிலெல்லாம் டாக்டர்களின் சீட்டு இல்லாமல் டிரான்குவிலைஸர்கள் விற்கப் படுவதில்லை.

மருந்து வகை இரசாயனம், மருந்தியல், உளவியல் வைத்தியம் ஆகிய துறைகளில் வெகு சீக்கிரத்தில் பெரிய சாதனைகள் நிகழக்கூடும். அப்பொழுது பயன் அதிகம் பெறுவதையும், தீய விளைவுகள் இல்லாதவையுமான டிரான்குவிலைஸர்கள் மக்களுக்குக் கிடைக்கக் கூடும். இன்று போலவே இனியும் டிரான்குவிலைஸர்களின் பணி ஒழுங்கான கட்டுதிட்டத்தில் அபிவிருத்தி அடையும் என்று நம்புவோமாக, இவை நரம்பு, உளவியல் கோளாறுகளில் சமாளிக்கும் அதிக பயனுள்ள அற்புதமான சாதனைகளில் டாக்டர்கள் பயன்படுத்துவர் என்று நம்புவோமாக

தமிழில்: ஏ. ஜி. வெங்கடாச்சாரி.

# சர்வதேசப் போலிசும் மயக்க மருந்துகளின் ரகசிய உலகமும்

—ஜீன் நெபோட்



**போ**தைப் பொருள்களை முறைகெட்டு உபயோகிப்பது என்ற வழக்கம் சரித்திரம் தோன்றிய நாள் முதலே இருந்து வந்திருக்கிறது. அன்றும், இன்றும் அதனால் ஏற்பட்டுள்ள தீமைகள் இவ்வளவல்ல.

இப்பிரச்னையைத் தீர்க்க, கடந்த 50 ஆண்டுகளாக உலக நாடுகள் ஒத்துழைத்து வருகின்றன. இதற்காகப் பல ஒப்பந்தங்களும், சட்ட திட்டங்களும் உருவாகி, அமுல் நடத்தப்படுகின்றன. இவை உள்நாட்டிலும், உலக நாடுகளுக்கிடையிலும் போதைப் பொருள் வியாபாரம் பற்றியவை. பொதுவாக மற்ற பொருள்களுக்கு செய்வதைப்போன்ற கட்டுப்பாடு இதற்கும் செய்யலாமென்று சிலர் கருதுகின்றனர்.

தேசீய, சர்வதேசக் கட்டுப்பாடுகள் காரணமாக இப்போது போதைப் பொருள்கள் கள்ள மார்க்கெட்டில் விற்பனையாகின்றன. கள்ளக்கடத்தல் அதிகரித்துவிட்டது. போலீசுக்கு இது பெரும் வேதனையாகிவிட்டது.

போதைப்பொருள் உபயோகிப்பதன் காரணம் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறாக இருக்கிறது. நியூயார்க்கில் ஹீராயின், ஆப்பிரிக்காவில் ஹஷீஷ் ஆண்டீஸில் கோகா இலை, ஹாங்காங்கில் அபினி இப்படி வெவ்வேறு போதைப் பொருள் பழகியிருப்பவர்கள் ஒரே காரணத்துக்காக, அவற்றை உட்கொள்ளுவதில்லை. ஆனால் போதைப் பொருளை ஒருவர் எதற்காக உபயோகிக்கத் தொடங்குகிறார் என்ற ஆராய்ச்சியில் நான் இப்போது இறங்கப் போவதில்லை. தற்போதுள்ள நிலையையும், அதைச் சமாளிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளையுமே விவரிக்க விரும்புகிறேன்.

இப்போது அப்பொருள்களை எந்த அளவுக்கு முறை தவறி உபயோகிக்கிறார்கள் என்று விவரிப்பது சுலபமல்ல. உலகத்தில் போதைப் பொருள் பழக்கத்தில் மூழ்கிக் கிடப்பவர்களின் எண்ணிக்கை சரியாகத் தெரியாது. புள்ளி விவரங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. போதைப்பொருள் உட்கொள்வது ஒளிமறைவு வேலை. அதை யாரும் அதிகாரிகளிடம் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். மேலும் இவ்வழக்கமுள்ளவர்களைக் கண்டுபிடித்துப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய நிர்வாக ஏற்பாடுகள் பல நாடுகளில் இல்லை.

உலகத்தில் இவர்களுடைய எண்ணிக்கை இடத்தைப் பொறுத்தும், உபயோகிக்கும் பொருளைப் பொறுத்தும் மாறுகிறது. அமெரிக்காவிலும், கனடாவிலும் சேர்த்து சுமார் 60 ஆயிரம் பேர் ஹீராயின் உட்கொள்ளுகிறார்கள். (அமெரிக்காவில் 55 ஆயிரம், கனடாவில் 2200 பேர் என்று அதிகாரபூர்வமாகக் குறிப்பிடப்படுகிறது). இவ்விரு நாடுகளிலும் மரிஜுவானா சிகரெட்டுகளாக கஞ்சா உபயோகிக்கப்பட்டு வருகிறது. இது அமெரிக்காவில் அதிகமாயிருக்கிறது.

தென் அமெரிக்காவில் கோகா இலை பெரும் அளவில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆண்டீஸ் பகுதியிலுள்ள 40 லட்சம் இந்தியர்கள் இதை உபயோகிக்கிறார்கள். கொக்கைன் உற்பத்தி செய்யவும் இது பயன்படுகிறது.

ஆப்பிரிக்காவில் வெகுவாக உட்கொள்ளப்படுவது கஞ்சா. பதினாயிரக்கணக்கான மக்கள்—முக்கியமாக கிராமப் பகுதிகளிலுள்ளவர்கள்—இதை புகையாக உட்கொள்ளுகிறார்கள்.

ஐரோப்பாவில் போதைப் பொருள் உபயோகிப்பவர் குறைவு. கஞ்சா

---

**ஜீன் நெபோட்** *சர்வதேசக் குற்ற இயல் போலிஸ் அமைப்பின் காரியதரிசி ஜெனரலாவார்.*



மருந்துகளைக் கடத்தி வந்த இந்தப் பெண்ணைக் கைது செய்வதற்கு முன்பு பல நாடுகளில் புலன் விசாரிக்க வேண்டியிருந்தது (இடது) இங்கு காட்டப்பட்டுள்ள 400 பொட்டலம் மருந்துகளுடன் அவள் பிடிபட்டாள். மயக்க மருந்துக் கடத்தல் சர்வதேச ரீதியில் திட்டமிட்டு நடைபெற்று வருகிறது. இவர்களைப் பிடிக்க எவ்வளவோ தந்திரங்களை போலீசார் கையாள வேண்டியுள்ளது. வலது: ஜப்பானிய துப்பறியும் அதிகாரி துறைமுகத்தில் தாம் சந்தேகப்படும் நபர்களை மறைந்திருந்து படம் எடுக்கிறார். இந்தக் கள்ளக் கடத்தலை ஒழிக்கப் பல்வேறு நாடுகளும் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதே சர்வதேசப் போலீஸ் ஸ்தாபனம்.



Photos © Kazuo Keumochi, Tokyo

பழக்கம் இளைஞர்களிடையில் இருந்து வருகிறதென்று கூறப்படுகிறது. மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன் ஆகிய நாடுகளில் ஹீராயின் பழக்கத்துக்கு உள்ளானவர்கள் பலர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கு முதலில் வைத்திய காரணங்களுக்காகக் கொடுத்து, பிறகு அதிலிருந்து பழக்கமாகிவிட்டதென்று தோன்றுகிறது.

மத்தியகிழக்கிலும் அதையடுத்துள்ள பகுதியிலும் நிலைமை தெளிவாக இல்லை. சிலநாடுகளில் இவ்வழக்கம் மிகக்குறைவாகவும், சில நாடுகளில் மிக அதிகமாகவும் இருக்கின்றன. அரபுக் குடியரசில் ஹஷீஷ் புகை பிடிப்பவர்கள் அதிகம். அபினிப்புகை குடிப்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்ததல்ல. அபினி உற்பத்தியை நிறுத்திவிட்டதால் ஈரான் பல கஷ்டங்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. 1955ல் அங்கு போதைப்பொருள் விளைச்சல், உபயோகம், வர்த்தகம் ஆகியவற்றை சட்ட விரோதமாக்கிவிட்டனர். மருத்துவத் தேவைகளுக்கு ஹீராயின் தயாரித்து உபயோகித்துக் கொள்ளுகின்றனர்.

தொலைகிழக்கிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் சுமார் மூன்று அல்லது மூன்றரை லட்சம் பேர் கஞ்சா உபயோகிப்பதாக மதிப்பிடப்படுகிறது. அமெரிக்காவைப் போலவே, தொலைகிழக்கிலும் போதைப்பொருள் பிரச்னை சற்று கடுமையானதுதான். பர்மா, தாய்லாந்து, லாவோஸ் நாடுகளில் கிராமப்பகுதிகளில் அபினி பயிரிடப்பட்டு உபயோகிக்கப்படுவதாக அங்கங்கேயுள்ள அரசாங்கங்களே கூறுகின்றன. சிங்கப்பூரில் அதை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்துக்குக் குறையாது. மலேசியாவில் இது இன்னும் அதிகம்.

அப்பகுதியிலேயே மோசமான இடம் ஹாங்காங். அங்கு ஹீராயின் உட்கொள்பவர்கள் சுமார் லட்சம் பேர் இருக்கலாம். ஆண்டுதோறும் சுமார் 17 கோடி ஹாங்காங் டாலர்கள் போதைப் பொருள் கள்ள மார்க்கெட்டில் வாரி இறைக்கப்படுகிறதென்று 1959ல் வெளியான அரசாங்க அறிக்கையே கூறிற்று.

ஜப்பானில் ஹீராயின் வழக்கமாக உட்கொள்ளுபவர்கள் 3 ஆயிரம் பேர். சீனாவில் உள்ள நிலவரம் பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை.

போதைப்பொருள் பற்றிய தேசீய, சர்வதேசச் சட்ட திட்டங்களை கண்டிப்பாக அமுல் நடத்தினால் பிறகு கள்ளத்தனமாக உபயோகிப்பவர்களுக்கு அவை கிடைக்க வழியிருக்காது. இவ்வழக்கமும் நின்றுவிடும்.

அவற்றைப் பயிர் செய்வதிலும், தயாரிப்பதிலும் கடுமையான சட்ட திட்டங்களைப் பின்பற்ற வேண்டுமென்று சர்வதேச ஒப்பந்தங்கள் இருக்கின்றன. அபினிச் செடியிலிருந்து அபினி, மார்பைன், ஹீராயின் ஆகியவை தயாராகின்றன. எனவே, முதலில் அபினி விளைச்சல் நாடுகளின் எண்ணிக்கையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். பல்கேரியா, கிரீஸ், இந்தியா, ஈரான், துருக்கி, ரஷ்யா, யுகோஸ்லாவியா ஆகிய ஏழு நாடுகளுக்கு அபினி விளைச்சல் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் கிரீஸும் ஈரானும் இப்போது உற்பத்தியை நிறுத்திவிட்டன.

ஒரு கிராம் அபினிகூட முறைகெட்ட வேலைகளுக்குப் போகாதவாறு கட்டுப்பாடு, ஏற்றுமதி, இறக்குமதி லைசென்சு திட்டம் உருவாக்கப்பட்டன. மருத்துவ, விஞ்ஞான வேலைகளுக்கு மட்டும் கிடைக்கும் வகையில் சட்டதிட்டங்

# சட்ட விரோத மருந்துகளின் வியாபாரப் பாதை




1967ல் 'இன்டர்போல்' தயாரித்த இப்படத்தில் மயக்க மருந்துகள் கடத்திச் செல்லப்படும் பாதையை காணலாம். உற்பத்தியாகும் இடம், மருந்தாக மாற்றப்படும் இடம், எடுத்துச் செல்லப்படும் வழி ஆகியவற்றை இது காட்டுகிறது. பாப்பி, கோகா, கஞ்சா செடிகள் பயிராகும் இடங்களிலிருந்து துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. கடத்தல்காரர்கள் நாடுகளின் எல்லைகளைத் தாண்டிச் செல்ல எல்லா தந்திரங்களையும் கையாளுகின்றனர். இது மிகவும் பரவலான அமைப்பு. கடத்தல்காரர்களுக்கென ரசாயனிகளும், பாங்கர்களும், மொத்த வியாபாரிகளும் சில்லறை விற்பனையாளர்களும் உலகெங்கும் உள்ளனர். இந்த நீசச் செயலைத் தடுக்க இண்டர்போல் அரும் பாடுபட்டு வருகிறது.

கள் அமைந்துள்ளன. ஆனால் அவை காகித அளவிலேயே இருக்கின்றன.

அபினி சாகுபடி செய்ய அனுமதியளிக்கப்பட்டவர்கள், மொத்த விளைச்சல் இவ்வளவென்று சரியாகச் சொல்லுவதில்லை. அனுமதிக்கப்பட்டதைவிட அதிக நிலப்பரப்பில் சாகுபடி செய்கிறார்கள். இவ்வாறு அதிகமாகக் கிடைத்த அபினி கள்ள மார்க்கெட்டுக்கு வருகிறது. பங்கீடு முறை அமுலிலிருக்கும் இடங்களில் என்ன நடக்கிறதென்று அறிந்தவர்களுக்கு இது விளங்கும். அரசாங்க அதிகாரம் சரிவர எட்டாத பெரும் நிலப்பகுதிகள் இருக்கின்றன. இங்கெல்லாம் அபினி சாகுபடி கள்ளத்தனமாக நடக்கிறது.

முடிவாகக் கூறுமிடத்து, அபினி நிலைமை இப்படி இருக்கிறது. அண்டை கிழக்கிலிருந்து தென்கிழக்கு ஆசியாவரை, பிறைச்சந்திரன் உருவில், ஒரு விரிசில் விழுந்திருக்கிறது; இங்கு அபினி உற்பத்தி கள்ளத்தனமாக நடக்கிறது. எண்ணிக்கையாகக் கூற வேண்டுமானால், உலகத்தில் 1200 டன் அபினி கள்ள உற்பத்தியாகிறது. அனுமதி பெற்று 800 டன் உற்பத்தியாகிறது. நிரந்தர அபினிக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள இப்புள்ளி விவரங்கள் இப்போது மற்ற வழிகளிலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

மேலே குறிப்பிட்ட பெரும் பகுதியிலிருந்தே உலக வர்த்தக பாதைகள் தொடங்குகின்றன. இங்கிருந்து மத்தியதரைக்கடல், ஐரோப்பா மூலம், அவற்றில் சில அமெரிக்காவை அடைகின்றன. வேறுசில தென்கிழக்கு ஆசியா, சிங்கப்பூர் வழியாக ஹாங்காங், ஜப்பான் சில சமயங்களில், அமெரிக்க, கனடாநாடுகளின் மேற்குக் கரை ஆகிய இடங்களை அடைகின்றன. எல்லா வழிகளையும் குறிப்பிட்டுக் கூற இங்கு போதிய இடமில்லை.

எவ்வளவு கஞ்சா கள்ள உற்பத்தியாகிறது என்று மதிப்பிட முடியவில்லை. சீதோஷ்ணநிலை அதற்கு ஏற்றவாறு இருந்தால் அது காடு மாதிரி விளையும், உலக அளவில் இதுவும் கடத்தப்படுகிறது.

கொக்கைன் பிரச்னை சற்றுத் தெளிவாக இருக்கிறது. இதன் கட்டுப்பாடு நிலையும் மோசம்தான். கொக்கைன் கடத்தல் பெரும்பாலும் தென் அமெரிக்காவிலிருந்தே குறிப்பாக, பொலிவியா, பெரு நாடுகளிலிருந்தே தொடங்குகிறது.

ஒரு நாட்டில் நடக்கும் போதைப் பொருள் கடத்தலுக்கும், அங்கு அவற்றை உட்கொள்வோரின் எண்ணிக்கைக்கும் சம்பந்தமில்லாமலிருக்கிறது. உதாரணமாக பிரான்சில், ஹீராயின், மார்பைன் ஏராளமாகக் கைப்பற்றப்படுகிறது. (1967ல் 186 கிலோ பிடிபட்டது) ஆனால் போதைப் பொருள் உட்கொள்பவர் அங்கு குறைவு. அங்கு சில சோதனைக் கூடங்கள் வேறுபல நோக்கங்களுடன் இயங்குகின்றன் என்று தெரிகிறது. பிரச்னையை இது மேலும் சிக்கலாக்குகிறது.

குற்ற ஆராய்ச்சிக்காரர்கள் மற்ற குற்றங்கள் இதைப்போல் இல்லையென்று கூறுவார்கள். இக்குற்றத்தினால் வேறு. ஒருவர் பாதிக்கப்படுவதில்லை. போலீசில் சென்று முறையிடுவோர் இல்லை. தன்னிடம் போதைப் பொருள் எவ்வளவு இருக்கிறது,




**கள்ளத்தனமான ஆய்வுக் கூடங்கள்**
இங்கு அபினிலிருந்து மார்பைனும் ஹெராயினும் கோகா இலையிலிருந்து கொகெய்னும் எடுக்கப்படுகின்றன.

**சட்டவிரோதப் பயிரிடுதல்**
அபின் பாப்பி. அனுமதிக்கப்பட்ட சாகுபடியும் காட்டப்பட்டுள்ளது (யூகோ, பல்கேரியா, துருக்கி, சோவியத் யூனியன், இந்தியாவில்).

கோகா. சட்டபூர்வமாகப் பயிரிடுவதும் (வெகு குறைவு) சட்டவிரோதப் பயிரும் (ஏராளம்) இங்கு தனித் தனியே காட்டப்படவில்லை.

கன்னபிஸ் இந்தியாலும் அமெரிக்காவிலு புதராகவும் மண்டி கிடக்கிறது.

எப்படி வந்தது என்று வெளியிட மாட்டார்கள். கடத்துபவர், வியாபாரி, உபயோகிப்பவர் ஆகிய மூவரும் இதில் கூட்டாளிகள்.

'விஞ்ஞான' முறையில் போலீஸ் விசாரணைக்கு இதில் இடமில்லை.. குற்றம் நடந்த இடத்தில் துப்புக் கண்டு பிடித்து, நுணுக்கமாக அலசி ஆராய்வதற்கும் ஒன்றுமில்லை. குற்றவாளியைக் குறிப்பிடுவதற்கு கைரேகை எதுவும் இங்கு கிடைக்காது.

கள்ளக்கடத்தல் விவரங்களை நன்கறிந்த பழைய புள்ளிகளே இவ்வர்த்தகத்தைத் தொடர்ந்து நடத்துகிறார்கள். 'கத்துக்குட்டி'களுக்கு இதில் இடமில்லை. அமெரிக்காவில் போதைப் பொருள் குற்றங்களுக்குக் கைதானவர்களில் 63% பழைய பேர்வழிகளே என்று அமெரிக்க போதைப்பொருள் கமிஷனர் சில ஆண்டுகளுக்கு முன் கூறினார்.

திறமையான ஏற்பாடுகளுடன் நடக்கும் குற்றம் போதைப்பொருள் கடத்தல். இந்தியாவிலோ, பர்மாவிலோ வயலில் ஒரு கிலோ அபினி பயிரிடுவது, அதை நூறு கிராம் மார்பைனாக்குவது அதை நூறு கிராம் ஹீராயின் ஆக்குவது, அமெரிக்கா, கனடா, ஹாங்காங் முதலிய இடங்களுக்குச் சென்று விற்பது — இவ்வளவையும் ஒருவரே செய்ய முடியாது அல்லவா?

உண்மையில் மிகப்பெரிய முறையில் கள்ளக் கடத்தல் நடக்கிறது. முதலில் இதில் ஏராளமாகப் பணம் போட்டு, பொருள்வாங்க வேண்டும். மூலப் பொருள்களை உட்கொள்ளும் பண்டங்களாகச் செய்யத் தெரிந்தவர்களை அமர்த்தவேண்டும். ஆயிரம் மைல்களுக்கு இடையில் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யவேண்டும். இப்பொருள்களை உபயோகிக்கும் கூட்டங்களில் அறிமுகப்படுத்திப் பிறகு இவற்றை விற்க வேண்டும்.

இப்படியாக மூலப்பொருள் உற்பத்தியாளர், போதைப்பொருளாக மாற்றுவோர், மொத்த, சில்லறை வர்த்தகர், பணம் கொடுப்போர், கடத்துவோர் ஆகிய எல்லோரும் தொழிலை நடத்துகின்றனர்.

போதைப்பொருள்களிலும் தரங்கள் உண்டு. 999 என்று குறியிட்ட மார்பைன், 'சொர்க்கத்திற்கு சாவிகள்' என்ற பெயரில், சிறு பைகளில் வரும் கஞ்சா ஆகியவை மிகவும் பிரபலமானவை. 'இது அசல் பொருள். போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்' என்பதைப் போன்ற விளம்பரங்களை இங்கும் காண்பது அரிதல்ல.

இப்பொருள்கள் மிகவும் தந்திரமாகவும், தைரியமாகவும், பற்பல விதங்களில் கடத்தப்படுகின்றன. பண்டங்களைக் குளிர்ச்சியாக்கும் பெட்டிகளிலும் (ஹாங்காங்), மின்சார அலைக்கருவியினுள்ளும் (அமெரிக்கா) ஹீராயின் இருக்கிறது. மார்செயில்சில் தோல் மூட்டைகளுக்கு நடுவில் மார்பைன் கிடைத்தது. துருக்கியிலிருந்து வந்த வண்டியொன்று சில மாதங்களுக்கு முன் முலாம் பழங்களை ஏற்றிச் சென்றது. ஜினிவா அருகில் அதைச் சோதனையிட்டபோது 500 கிலோ மார்பைன் கிடைத்தது. மிக ஜாக்கிரதையாக இதை வண்டியில் ஒளித்து வைத்திருந்தனர்.

தென் கிழக்கு ஆசியாவில் சில வயல்களில் அபினி சேர்த்து வைக்கப்படுகிறது. அங்கு சிறு விமானங்களில் வந்து சிலர் அதை எடுத்துப் போகின்றனர். இது சிறு பிளாஸ்டிக் மூட்டைகளாகக் கட்டப்படுகிறது. அபினி கடத்துபவர்கள் இம்மூட்டை

# இன்டர்போல் அமைப்பில் 102 நாடுகள்

களுடன் கடலில் குதித்து கரை சேருகிறார்கள்.

சுற்றுப் பிரயாணம் செய்யப்போவதாகக்கூறி, அமெரிக்காவுக்கு வரும் சிலருடைய பெட்டிகளை சோதனை செய்தால், உள்ளே, ரகசிய அறைகளில் போதைப் பொருள்கள் இருக்கின்றன. இவர்கள் அவற்றை உட்கொள்வதில்லை. கடத்தல்காரர்களின் கைப்பாவைகளே இந்த சுற்றுப்பிரயாணிகள், இப்படி புதுப்புது வழிகளை கடத்தல்காரர்கள் கண்டுபிடித்து வருகிறார்கள்; போலீஸின் கண்களில் மண்ணைத் தூவி விடுகிறார்கள்.

உலகத்தில் நடக்கும் கடத்தல்களுக்கெல்லாம் ஒரு கூட்டத்தினரே காரணமென்று நினைக்கக்கூடாது. அங்கங்கே இயங்கும் சிறு கூட்டத்தினர், ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டு உலகத்தையே வளைத்துவிடுகின்றனர். ஒரு கூட்டம் ஒரு பகுதியிலேயே இயங்குகிறது. இது அடுத்துள்ள பகுதியுடன் தொடர்புகொள்ளுகிறது. இவர்களுக்குள் சில சமயங்களில் போட்டி ஏற்படுவதும் உண்டு.

போதைப்பொருள்களின் கள்ளக் கடத்தலைத் தடுப்பது போலீஸுக்கு மிகவும் கஷ்டமாகவே இருக்கிறது. மிகச் சிக்கலான கடத்தல்களை, பொறுமையாகவும் நீண்ட நாள் கஷ்டப்பட்டும் கண்டுபிடிக்கவேண்டும். சந்தேகத்திற்கு உள்ளானவர்களை இடைவிடாது கண்காணிப்பது முதலாவது வேலை. அங்கங்கே கிடைக்கும் செய்திகளைப் பொருத்திப்பார்த்தால், திடீரென்று ஒரு கூட்டத்தினரின் கடத்தல் திட்டமே வெளியாகலாம். அவர்களைக் கண்காணிக்கும்போது கொஞ்சம்கூட சந்தேகம் உண்டாகாதவாறு நடந்துகொள்ள வேண்டும். தொலைபட விசையுடன் கூடிய காமிரா கூட போதாது. கடத்தல்காரர்கள் அவ்வளவு தந்திரசாலிகளாக இருக்கிறார்கள்.

நாட்டிலுள்ள போலீஸார் எல்லோரும் சேர்ந்து ஒரு மத்திய ஸ்தாபன அடிப்படையில் இயங்கினால்தான் இப்பிரச்னைக்கு ஒரு முடிவு காணமுடியும். இதையே ஐ. நா., சர்வதேச குற்றத்தடுப்புப் போலீஸ் நிறுவனம் (இதற்கு இன்டர்போல் என்று பெயர்) ஆகிய இரண்டும் நெடுநாட்களாகக் கூறிவந்திருக்கின்றன. நாட்டில் பெரும் பகுதிகளில் இயங்கும் விசேஷ அதிகாரம் கொண்டவர்கள் இதில் தீவிரமாக வேலை செய்ய வேண்டும். இவர்களுடைய வேலையை இணைப்பதற்கு மத்திய அலுவலகம் ஒன்று அவசியம்.

இப்படி தேசீய முறையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை இணைப்பதற்கு சர்வதேசீய நிறுவனமொன்று வேண்டும். இன்டர்போல் நிறுவியதன் நோக்கமே இதுதான்.

இன்டர்போல் என்பது, துப்பறிபவர்களை உலகெங்கும் அனுப்பி, குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக உண்டான ஸ்தாபனம் அல்ல. அதன் தலைமைக் காரியாலயம் பிரான்சில், பாரிசுக்கு அருகில் செயின்ட் கிளவுட் என்ற இடத்திலிருக்கிறது. குற்றத்தடுப்பு முயற்சியில், பல்வேறு நாட்டு போலீஸ் படைகளின் வேலைகளை ஒன்றாக இணைப்பதே அதன் கடமை. போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதும் அதனுடைய பொறுப்பு என்பதைத் தனியாகக் குறிப்பிடவேண்டியதில்லை.

சர்வதேச ஒத்துழைப்பின் அவசியத்தை முதன் முதலில் பல்வேறு நாட்டு போலீஸ் பிரிவினரே உணர்ந்தனர். அவர்களுடைய பொறுப்பு நாட்டின் எல்லைகளையும் மீறியது. எனவே ஒவ்வொரு நாட்டிலும் சர்வதேச போலீஸ் இணைப்பு ஸ்தாபனம் ஏற்படவேண்டும். உலக மட்டத்தில் ஏற்படும் பிரச்னைகளை கவனிப்பதற்கு இது அங்கு அடிப்படையாக இருக்கும்.

இன்று 102 நாடுகளில் ''இண்டர்போல்—தேசீய மத்திய அலுவலகம்'' இருக்கிறது. இவை ஒன்றுக்கொன்று செய்திகளை அனுப்பிக்கொள்ளுகின்றன. ஒத்துழைப்பு ஏற்பாடுகள் செய்கின்றன.

இவ்வலுவலகங்களின் வேலைகளை இணைக்கவும், போலீஸ் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளவும் பொதுக்காரியதரிசி அலுவலகமொன்றும் நிறுவப்பட்டது.

இன்டர்போல் மத்திய அலுவலகம், தேசீய அலுவலகங்கள் ஆகியவை மூலம் இப்போது குற்றவாளிகளைப் பிடிக்கும் வேலை சுறுசுறுப்பாக நடக்கிறது. சந்தேகத்திற்கு உள்ளானவர்களைக் கண்காணித்தல், விவரங்கள் பரிமாற்றம், இன்னும் உலக நடவடிக்கைக்குத் தேவையான எல்லா உதவிகளும் கிடைக்கின்றன.

இன்டர்போலுக்குத் தனியாக ஒரு ரேடியோ ஒலிபரப்பி இருக்கிறது. அதில் 40 நாடுகள் பங்கு கொள்ளுகின்றன. போன வருஷம் போதைப் பொருள் கடத்தல் பற்றி லட்சத்து இருபதினாயிரம் செய்திகள் ஒலிபரப்பப்பட்டன.

(தொடர்ச்சி 32ம் பக்கம்)



### கஞ்சா கடத்தல்

அண்மைக் கிழக்கு கிராமமொன்றில் திருட்டுத்தனமாக கஞ்சா எடுத்துச் செல்லப்படுவதை படம் எடுக்கிறார் (மேலே). கீழே: கள்ளக்கடத்தல் பாதையில் போலீஸ் ரோந்து. சிலசமயம் கடத்தல்காரர்களுடைய காவலர்களுடன் கைகலப்பும் ஏற்படும்.



Photos © Holmes Lebel - Dante

# இந்த வியாபாரத்தில் தான் எத்தனை தந்திரங்கள்!




Photos © Holmes Lebel-Sid Latham



கடத்தல்காரர்களால் அனுப்பப்படும் மருந்துகளுக்கு தனியே ஒரு வியாபாரப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கும். கீழே இடமிருந்து வலது. 'பெண்ணின் சிலை'—மத்திய கிழக்கின் ஒரு வகை கஞ்சா. "கட்டை விரல் மேலே" அடையாளம் ஆசியாவிலிருந்து வரும் அபினைக் குறிக்கும். "999"—ஒரு வகை மார்பைன். சுங்க அதிகாரிகளுக்கு கப்பலில் திருட்டுச் சரக்கு செல்வதாக சந்தேகம் ஏற்பட்டால் ஒரு இடம் விடாமல் சோதனை செய்வார்கள் (மேலே) ஒரு அமெரிக்க சுங்க சோதனையாளர் (இடது) ஒரு மாலுமியின் டார்ச் விளக்கில் கஞ்சா இருப்பதைக் கண்டு பிடிக்கிறார். 1966ல் மட்டும் 50000 கிலோ அபினும் 320000 கிலோ கன்னாபிஸ்ஸும் கைப்பற்றப்பட்டன.









Photos © Paul Almasy, Paris

கீழே பிரசுரித்துள்ள இனம், இனத்துவேஷம் பற்றிய யுனெஸ்கோவின் புதிய அறிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களிடையே அமைதியான வாழ்வுக்கு அபாயம் நேர்ந்திருக்கும் இன்றைய உலகில் துவேஷமும் பாகுபாடும் பல வன்முறைச் செயல்களுக்கு அடிகோலியுள்ளது. உலகின் வருங்கால அமைதிக்கு இது பெருங்கேடாக இருக்கிறது என்பதும் தற்கால நிகழ்ச்சிகளை கவனித்து வருபவர்களுக்குப் புலனாகும். இந்த அறிக்கை உலகின் எல்லாப் பகுதியிலும் கவனமாகப் படித்து ஆராயப்பட்டு தனி நபர்களுக்கும் சர்க்கார்களுக்கும் வழிகாட்டியாகவும் ஆதரிசமாகவும் விளங்கும் என்று "யுனெஸ்கோ கூரியர்" மனப்பூர்வமாக நம்புகிறது.

# இனம் இனத்துவேஷம் பற்றிய அறிக்கை

**1** **"அந்தஸ்திலும் உரிமைகளிலும் எல்லாரும் சுதந்திரமாகவும் சமமாகவும்தான் பிறந்திருக்கிறார்கள்."** உலகறியப் பிரகடனம் செய்யப்பட்ட இந்த ஜனநாயகக் கொள்கை, அரசியல், பொருளாதார, சமூக, கலாசார ஏற்றத்தாழ்வுகள் மனித உறவைப் பாதிக்கும் இடங்களில் எல்லாம் ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது. எல்லாருக்கும் சம அந்தஸ்து அளிப்பதற்கு தடையாக இருப்பது இனவெறியாகும். இன்னும் அது உலகை அச்சுறுத்தி வருகிறது. இதனை மிகப் பெரிய சமூகப் பிரச்சினையாக கருதி அனைவரும் தீர்வு காணமுன் வரவேண்டும்.

**2** **இனவெறி இதனால் பாதிக்கப்பட்டவர்களுடைய வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது.** அதனைக் கையாளுபவர்களை மாற்றி விடுகிறது. நாடுகளைப் பிரிக்கிறது. சர்வதேச தகராறுகளைப் பெருக்கி உலகை அச்சுறுத்துகிறது.

**3** **1967 செப்டம்பரில் பாரிசில் கூடிய நிபுணர்கள் மாநாட்டில் இனவெறிக் கொள்கைக்கு எந்த விதமான விஞ்ஞான அடிப்படையும் கிடையாது என்பது ஏற்கப்பட்டது.** 1950லும் 51லும்வெளியிடப்பட்ட இன, இனத்துவேஷ அறிக்கைகளின் உயிரியல் ரீதியான அம்சங்களை மறுபரிசோதனை செய்ய 1964ல் மாஸ்கோவில் நடைபெற்ற சர்வதேசக் கூட்டத்தின் கருத்தை இது மீண்டும் உறுதிப் படுத்தியது. குறிப்பாக பின்வரும் அம்சங்களை அது கவனத்துக்குக் கொண்டுவருகிறது:

- இன்று உயிர் வாழும் எல்லா மனிதர்களும் ஒரே வகை உயிரிலிருந்து தோன்றியவர்கள்.
- மனிதர்களை இனங்களாகப் பிரிப்பது ஓரளவு மரபு வழியாகவும் ஓரளவு எவ்விதக் கட்டுப்பாடின்றியும் நேர்ந்தது. இதற்கு வமிசாவழி எதுவும் கிடையாது. மானிட இயல் அறிஞர்கள் மனித மாறுபாடுகளின் முக்கியத்துவத்தை வற்புறுத்துகிறார்கள். ஆனால் இனப் பிரிவினைகளுக்கு விஞ்ஞான அடிப்படை எதுவும் இல்லை என்று நம்புகிறார்கள்.
- நமது உயிரியல் அறிவு பாரம்பரிய ஆற்றல் வேறுபாட்டினால்தான் கலாசார சாதனைகள் அடையப்படுவதாக நம்ப அனுமதிப்பது இல்லை. வெவ்வேறு மக்களுடைய சாதனைகளுடைய வேறுபாட்டுக்குக் காரணம் அவர்களது கலாசார வரலாறுதான். இன்றுள்ள உலக மக்கள் எந்த அளவு நாகரிகத்தையுமடைய சம அளவு உயிரியல் ஆற்றல் பெற்றிருப்பதாகவே தோன்றுகிறது. உயிரியல் அறிவைப் பொய்ப்பிப்பதாக இனவெறி உள்ளது.

**4** **இன உறவுகள் எனப்படுவதிலிருந்து எழும்பும் பிரச்னைகளின் தோற்றுவாய் சமூகம் பற்றியது; உயிரியல் பற்றியதல்ல.** அடிப்படைப் பிரச்சினை இனவெறி. அதாவது சமூக விரோத நம்பிக்கைகளும் செயல்களும். உயிரியல் அடிப்படையில் மக்களிடையே பாகுபாடு இருப்பது நியாயமானது என்ற பொய்யை அடிப்படையாகக் கொண்டது இது.

**5** **கோஷ்டிகள் பொதுவாக தங்கள் குண இயல்புகளை மற்றவர்களுடன் ஒப்பிட்டு மதிப்பிடுகிறார்கள். வமிசவழியாக பிரிவுகளை ஏற்படுத்த விஞ்ஞான அடிப்படை இருப்பதாக இனவெறி தவறாக உரிமை பாராட்டுகிறது.** இவ்வழியில் இப்போதுள்ள வேறுபாடுகள் போக்க முடியாதவை என்று தோன்றுமாறு செய்ய முயல்கிறது.

**6** **உயரியல்ரீதியான கருத்து தவறென நிரூபிக்கப்பட்டுவிட்டதால் இனவெறி தனக்கு நியாயம் கற்பிக்க புதுப்புது காரணங்களை கண்டு பிடித்து வருகிறது.** கோஷ்டிகள் தமக்குள்ளே மணம் செய்து கொள்வது இல்லையென்பதை அது சுட்டிக் காட்டுகிறது. இனவெறி ஏற்படுத்திய பிரிவினைகளால் ஏற்பட்டதாகும் இது. உயிரியல் ரீதியான வேறுபாடுகள் இருப்பதால்தான் இவ்வாறு இருப்பதாக அது வாதம் செய்கிறது. இந்த வாதம் எடுபடாமல் போகும் போதெல்லாம் தெய்வீகம், கலாசார வேறுபாடு, கல்வித் தர ஏற்றத் தாழ்வு, போன்ற பல சாக்குகளைக் கூறுகிறது. இன்றைய உலகில் இன அடிப்படையில் வேறுபாட்டை காட்டுபவர்கள் நடத்தையால் ஏற்பட்டதேயாகும்.

**7** **இனவெறிக்கு வரலாற்று ஆதாரம் உள்ளது. உலகெங்கும் உள்ள ஒரு போக்கு அல்ல அது. தற்கால சமூகங்கள், கலாசாரங்கள் பலவற்றில் அதன் சாயல் கூட இல்லை. உலக வரலாற்றில் நீண்ட காலத்துக்கு அது இருக்கவில்லை.** இன வெறியின் பல தன்மைகள் இன்னொருவரை வெற்றி கொண்டதாலும், நீக்ரோ அடிமை நிலைக்கு நியாயம் கற்பிப்பதாலும், காலனி உறவுகளாலும் ஏற்பட்ட

தாகும். மற்றொன்று யூத எதிர்ப்புப்போக்கு. இது வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றுள்ளது. பல சமூகங்களை எதிர்நோக்கிய பிரச்னைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் யூதர்கள் பலியாகக்கப்பட்டுள்ளனர்.

**8** **இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட காலனி ஆதிக்க எதிர்ப்பு புரட்சி இனவெறிக் கொடுமையை அகற்ற புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.** முன்பு அடிமை நாடுகளாக இருந்தவற்றில் கீழ்த்தரமானவர்களாகக் கருதப்பட்ட மக்கள் முதன் முறையாகப் பூரண அரசியல் உரிமைகளைப் பெற்றுள்ளனர். மேலும் முன்பு அடிமையாக இருந்த நாடுகள் இப்போது சர்வதேச அமைப்புக்களில் சம உரிமையுடன் கலந்து கொள்வது இனவெறியைப் போக்க உதவியுள்ளது.

**9** **ஆயினும் இனவெறிக் கொடுமைக்குள்ளான சில குழுக்களே தங்கள் விடுதலைப் போராட்டத்தில் இன அடிப்படைக் கொள்கைகளைக் கையாண்டுள்ள சில நிகழ்ச்சிகளும் உண்டு.** இத்தகைய போக்கு இரண்டாந்தரமானதுதான். இனவெறி முன்பு அவர்களுக்கு மறுத்தவற்றைப்பெற முயல்வதற்கான எதிர்ச் செயலேயாகும் அது. இருந்த போதிலும் இந்தப் புதிய இனவெறிப் போக்குக்கும் உயிரியல் ரீதியான நியாயம் கிடையாது. அவை அரசியல் போராட்டத்தின் விளைவு. விஞ்ஞான ரீதியான அடிப்படை எதுவும் அதற்குக் கிடையாது.

**10** **இனவெறியை ஒழிக்க உயிரியல் நிபுணர்கள் அதன் தவறை எடுத்துக்காட்டினால் மட்டும் போதாது. மனவியல், சமூகவியல் அறிஞர்களும் அதன் காரணங்களை எடுத்துக்காட்டுவதும் அவசியமாகும்.** சமூக அமைப்பு எப்போதுமே முக்கியமான ஓரம்சமாகும். ஆயினும் ஒரே சமூக அமைப்பில் ஒவ்வொருவரிடமும் அவர்களுடைய தனித் தன்மையையும் சூழ்நிலையையும் பொறுத்து இன ரீதியாகநடந்து கொள்வதில் பெரும் மாறுதல்கள் இருக்கக்கூடும்.

**11** **இனத்துவேஷத்தின் சமூகக் காரணங்கள் பற்றி நிபுணர்கள் குழு பின்வரும் முடிவுகளை ஒப்புக் கொண்டது.**

- இனத்துவேஷத்துக்கான சமூக, பொருளாதார காரணங்கள் குறிப்பாக வந்து குடியேறிய சமுதாயங்களில் காணப்படுகின்றன. அங்கு அதிகாரம், சொத்துடைமையில் பெருத்த வேறுபாடுகள் உள்ளன. சில நகர்ப்புறங்களில் தனிநபர்களுக்கு சம வேலைவாய்ப்பும், வீட்டு வசதியும், அரசியலில் பங்கும், கல்வியும், நீதியும் மறுக்கப்படுகிறது. வேறுபல சமூகங்களில் அதன் உறுப்பினர்களின் அந்தஸ்துக்குத் தாழ்ந்தது எனக் கருதப்படும் சமூகப் பொருளாதாரக் கடமைகள் வேற்றாரிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இக்கடமைகளை மேற்கொண்டதற்காக அவர்கள் கண்டிக்கவும் தண்டிக்கவும் படுகிறார்கள்.

- சிலவகைக் குறைபாடுகள் உள்ள தனிப்பட்டவர்கள் இனத்துவேஷத்தைக் கொள்ளவும் புலப்படுத்தவும் கூடும். சில வகை குழுக்களும், சங்கங்களும், சமூக இயக்கங்களும் சில சமயங்களில் இனத்துவேஷத்தை ஊட்டுகின்றன. ஆயினும் துவேஷத்தின் அடிப்படை ஒரு சமுதாயத்தின் பொருளாதார சமூக அமைப்பில்தான் உள்ளது.

- இனவெறியின் விளைவுகள் வளரும்தன்மையதாகவுள்ளன. பாகுபாடு ஒரு கோஷ்டிக்கு சமமாக நடத்தப்படுவதை மறுக்கிறது. அது அக்கோஷ்டிக்கு ஒரு பிரச்னையாக உள்ளது. பிறகு அக்கோஷ்டி தன்நிலைக்கு தன்னையே நொந்து கொள்கிறது. இதன் விளைவு இனவெறிக் கொள்கை விரிவடைகிறது.

**12** **இனவெறியைச் சமாளிப்பதற்கான முக்கிய நடவடிக்கை துவேஷத்துக்கு இடமளிக்கும் சமூக நிலையை மாற்றுவதாகும்.** துவேஷம் கொண்டவர்கள் இஷ்டம் போல் நடப்பதைத் தடுத்து அவர்களது தவறான நம்பிக்கையைப் போக்க வேண்டும்.

**13** **இனத்துவேஷத்தை அகற்றக் கூடிய அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த சமூக அமைப்பு மாற்றங்கள் செய்ய அரசியல் தன்மையுள்ள முடிவு தேவைப்படலாம் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.** கல்வி, சமூகப் பொருளாதார மேம்பாடு, ரேடியோ, பத்திரிகை, சட்டம் ஆகியவற்றையும் உடனடியாகவும் பயனுள்ள முறையிலும் இனத்துவேஷத்தை அகற்றுவதற்கு பயன்படுத்த முடியும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**14** **பரந்த மனப்பான்மை ஏற்படுவதற்கு பள்ளியும் சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்கான இதர சாதனங்களும் மிகப் பயனுள்ள ஒன்றாக இருக்க முடியும்.** பாரபட்சமும் ஏற்றத்தாழ்வும் நீடிப்பதற்கும் இவை அதே அளவு பயன்பட முடியும். எனவே எல்லா நாடுகளுடையவும் கல்வி, சமூகப் பொருளாதார செயல் திட்டங்களுக்கான மூலாதாரங்களை இரு வழிகளில் பயன்படுத்துவது அத்தியாவசியமாகும்.

- இனம், மனிதகுல ஒற்றுமை பற்றிய விஞ்ஞான அறிவு பள்ளிப் பாடத் திட்டத்தில் இருக்க வேண்டும். பாடங்களிலும் வகுப்பறைகளிலும் பாகுபாடு காட்டக் கூடாது.

- தொழில்நுணுக்க வளர்ச்சி காரணமாக தொழிற்கல்வியில் திறன் பெறுவது நாளுக்கு நாள் முக்கியமடைந்து வருவதன் காரணமாக, பள்ளிகளின் மூலாதாரங்கள் எவ்விதமான கட்டுப்பாடும், பாகுபாடுமின்றி மக்கள் அனைவருக்கும் முழுவதுமாகக் கிடைக்க வேண்டும்.

- மேலும் சரித்திர ரீதியான காரணங்களினால் குறைவான கல்வியும், பொருளாதார நிலையும் நிலவும் இடங்களில் இதனைச் சீர்படுத்த நடவடிக்கை எடுப்பது சமுதாயத்தின் பொறுப்பாகும். பெற்றோர்கள் வறுமைச் சூழலில் வாழ்ந்தார்கள் என்பதற்காக அவர் தம் குழந்தைகளும் அவ்வாறே இருந்து விடாமல் முடிந்த வரை பார்த்துக் கொள்ளவேண்டும். கல்வித் திட்டம் எதிலும் ஆசிரியர்களுக்குள்ள முக்கியத்துவம் காரணமாக அவர்கள் பயிற்சியில் விசேஷக் கவனம் செலுத்த வேண்டும். ஆசிரியர்களிடம் இனத்துவேஷ உணர்வு இல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

**15** **இனவெறிக் கொடுமைக்குள்ளானவர்களுக்கு வீட்டு வசதியும் வேலை வாய்ப்பும் செய்து கொடுக்க சர்க்காரும் இதர அமைப்புகளும் விசேஷக் கவனம் செலுத்த வேண்டும்.** இது இனவெறியின் விளைவுக்கு எதிராக செயல்படுவதுடன் இனவெறிப் போக்கையும் நடத்தையையும் மாற்றிக் கொள்ள உருப்படியான வழியாகவும் இருக்க முடியும்.

**16** **அறிவையும், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் திறனையும் வளர்க்க மக்கள் தொடர்பு சாதனங்கள் மிகவும் முக்கியமானவை. ஆனால் அவற்றின் உண்மையான சக்தி இன்னும் முழுவதுமாக அறியப்படவில்லை.** மக்கள் தொடர்பு சாதனங்களை சமூகத்துக்குப் பயன்படுத்துவது பற்றி தொடர்ந்து ஆராய்ந்து இனப்பாகுபாடு, துவேஷம் ஆகிய துறைகளில் மனப்போக்கு உருவாவதில் அவற்றுக்குள்ள செல்வாக்கை மதிப்பிட வேண்டும். இவை வெவ்வேறு கல்வி மற்றும் சமூக தரத்திலுள்ள ஏராளமான மக்களை அடைவதால் இனத்துவேஷத்தை எதிர்க்க அல்லது வளர்க்க அவற்றுக்குள்ள பங்கு முக்கியமான ஒன்றாகும். சிலவற்றில் பணியாற்றுபவர்கள் மக்களிடையே நல்லுணர்வு வளர உருப்படியாக

பாடுபடவேண்டும். இனவெறியூட்டும் செய்திகளைத் தவிர்க்க வேண்டும்.

**17** **தனிநபர்களிடையே சமத்துவத்தை நிலைநாட்டவும், இனவெறியை எதிர்த்துப் போராடவும் மிகவும் முக்கியமான சாதனங்களில் சட்டம் ஒன்று.**

*1948* டிசம்பர் 10ந் தேதிய சர்வதேச மனித உரிமைகள் பிரகடனமும் அது சம்பந்தப்பட்ட சர்வதேச உடன்பாடு களும் இனவெறியை அடிப்படையாகக் கொண்ட எந்த அநீதியையும் எதிர்த்துப் போராட தேசிய, சர்வ தேசிய அளவில் பயனுள்ள முறையில் உதவமுடியும். தேசியச் சட்டம் இனவெறிப் பிரசாரத்தையும், நடவடிக்கைகளையும் சட்ட விரோதமானதாகச் செய்யப் பயனுள்ள வழியாகும். மேலும் அத்தகைய சட்டங்களில் கூறப்பட்டுள்ள கொள்கை கோர்ட்டுகளையும் நீதிபதிகளையும் மட்டுமின்றி எல்லா சர்க்கார் அமைப்புக்களையும் கட்டுப்படுத்துவதாகும்.

சட்டமியற்றுவது உடனடியாக இனத்துவேஷத்தைப் போக்கிவிடும் என்று கூறவில்லை. இருந்தபோதிலும் பாதிக்கப்படுபவர்களுக்கு அது பாதுகாப்பாக இருப்பதால் காலப்போக்கில் மனப்போக்கையே மாற்றவும் கூடும்.

**18** **ஏதோ ஒருவிதமான பாரபட்சத்துக்கு இலக்காகி யுள்ள இனங்கள் சில சமயங்களில் ஆதிக்கம் செலுத் தும் குழுவினல் ஏற்றுக்கொள்ளப்பட்டு சகித்துக் கொள்ளப்படுகிறது—அவர்கள் முற்றிலும் தங்கள் கலாசாரப் பண்பை விட்டுவிட முன்வந்தால்.** தங்கள் கலாசாரப் பண்பு களைப் பாதுகாக்க இந்த இனக்குழுக்கள் செய்யும் முயற்சியை ஆதரிக்க வேண்டும் என்பதை வற்புறுத்தியாக வேண்டும். மனிதகுலத்தின் மொத்த கலாசாரத்தை வளப்படுத்த அவர்கள் இதன்மூலம் மேலும் சிறந்த பங்கு ஆற்ற முடியும்.

**19** **இன்றைய உலகில் இனத்துவேஷமும் பாகுபாடும் வரலாறு மற்றும் சமூக நிகழ்வாகும். இதற்கு விஞ் ஞான ரீதியான ஆதாரவு தவருகப் பாராட்டப் படுகிறது.** எனவே எல்லா உயிரியல், சமூக விஞ்ஞானி களும், தத்துவவாதிகளும், இதுபோன்ற துறையில் உள்ளவர் களும் தங்கள் ஆராய்ச்சியின் முடிவுகள் இனத்துவேஷப் பிரசாரம் செய்பவர்களால் தவருகப் பயன்படுத்தப்படாமல் பார்த்துக் கொள்வது அவர்களது பொறுப்பாகும்.

*1967* செப்டம்பர் 18 முதல் 26ந் தேதி வரை பாரிசி லுள்ள யுனெஸ்கோ மனையில் கூடிய நிபுணர்கள் குழுவினல் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பின்வரும் நிபுணர்கள் பங்கு கொண்டனர்.

பேராசிரியர் முட்டத்திர் அப்துல் ரஹிம் (கார்ட்டும் பல்கலைக்கழகம், சூடான்) பேராசிரியர் ஜார்ஜஸ் பலாண்டியர் (பாரிஸ் பல்கலைக்கழகம்) பேராசிரியர் செலியோ டி ஒலிவிரா போர்ஜா (பிரேஜில் பல்கலைக்கழகம்) பேராசிரியர் லாயிட் பிரெய்த் வெயிட் (ஜமைக்கா பல்கலைக் கழகம்) பேராசிரியர் லெரெர்ட் புளூம் (டெக்ஸாஸ் பல்கலைக் கழகம், அமெரிக்கா) பேராசிரியர் ஜி. எப். டெபெட்ஸ் (மாஸ்கோ இன ஆய்வுக்கழகம்) பேராசிரியர் ஜோர்ட்ஜெவிக் (பெல்கிரேட் பல்கலைக்கழகம்) டீன் கிளாரன்ஸ் கிளைட் பெர்குஸன் (ஹோவர்ட் பல்கலைக்கழகம், அமெரிக்கா) டாக்டர் தரம் பி. காய் (கென்யா பல்கலைக்கழகக் கல்லூரி) பேராசிரியர் ஹூயி கட்மன் (ஹீப்ரு பல் கலைக்கழகம், இஸ்ரேல்) பேராசிரியர் ஜீன் ஹீர்ளுக்ஸ் (பிரஸ்ஸல்ஸ் பல்கலைக் கழகம், பெல்ஜியம்) பேராசிரியர் ஏ. க்ளோஸ் கோவ்ஸ்கா (போலந்து பல்கலைக் கழகம்) நீதிபதி கெபா எம்பாயே (செனிகல் சுப்ரீம் கோர்ட் அதிபர்) பேராசிரியர் ஜான் ரெக்ஸ் (டர்ஹாம் பல்கலைக்கழகம் இங்கிலாந்து) பேராசிரியர் மரியானே ஆர். சோல்விரா (ஹவான பல்கலைக் கழகம், கியூபா) பேராசிரியர் ஹிசாஷி சுஸுகி (டோக்யோ பல்கலைக்கழகம், ஜப்பான்) டாக்டர் ரோமிலா தப்பார் (டில்லி பல்கலைக்கழகம், இந்தியா) பேராசிரியர் சி. எச். வாடிங்டன் (எடின்பரோ பல்கலைக்கழகம், இங்கிலாந்து).

## சர்வ தேசப் போலிசும் மயக்க மருந்துகளும் (28ம் பக்கத் தொடர்ச்சி)

கள்ளக்கடத்தலில் ஈடுபட்டுள்ளவர் கள் பற்றிய விவரங்கள் இன்டர்போல் தலைமைக் காரியாலயத்தில் இருக் கின்றன. போதைப்பொருள் கடத்து வோர், உதவுவோர், அவர்களுடைய தோற்றம், கடத்தல் முறை முதலிய எல்லாச் செய்திகளையும் அது கொடுக் கிறது.

ஒருநாள் பெல்ஜியப் போலீசுக்கு ஒரு தகவல் வந்தது. துருக்கியிலிருந்து பிரான்சுக்கு போதைப் பொருள் களைக் கடத்துவதற்குத் தன்னுடைய மோட்டாரை சிலர் கேட்டதாக ஒருவன் தெரிவித்தான். அவர்களுடன் தொடர்ந்து உறவு வைத்துக் கொள் ளும்படி மோட்டார்காரருக்குக் கூறி விட்டு, போலீஸார் சுறுசுறுப்பாக வேலை செய்தனர்.

துருக்கி போலீசுக்குச் செய்தியனுப்பி கடத்தல்காரரை கையும் களவுமாகப் பிடிக்க முயன்றனர். கடத்தல்காரர் மிக கவனமாக இருந்தனர். டிரை வருக்குக்கூட அதிகம் தெரியவில்லை. காரிலுள்ள பெட்ரோல் டாங்கில் பொருளை ஒளிக்கப்போவது மட்டுமே தெரிந்தது. துருக்கிப் பவுன் நோட்டில் ஒரு பாதியை மட்டும் கிழித்து டிரை வரிடம் கொடுத்திருந்தனர். வண்டி புறப்படுமுன் மற்றொரு பாதியைக் கொடுப்பதாகப் பேச்சு. பிரான்சுக்குப் போய்வரும்போது, சுவிட்ஜர்லாந் துக்கு வந்து, அங்கிருந்து கைக்கடி யாரங்களை கடத்திக்கொண்டு வர வேண்டுமென்று திட்டம் போட்டிருந் தனர்.

புறப்படும் நாளன்று துருக்கி போலீஸ் அந்தக் காரை சோதனை போட்டபோது 40 கிலோ மார்பைன் கிடைத்தது. கடத்தல் கூட்டத் திலிருந்த பலரை அடையாளம் கண்டு கொண்டு, போலீஸார் அவர்களைக் கைது செய்தனர். பிரஞ்சுப் போலீ சுக்கு செய்தியனுப்பியதன் விளைவாக, அங்கு இந்த மார்பைனைப் பெற்றுக் கொண்டிருக்கவேண்டியவன் கைதானன்.

இதைவிட சிக்கலான பல முயற்சி கள் நடந்திருக்கின்றன. ஹாங்காங்கில் இயங்கும் சிலர், தாய்லாந்திலுள்ள பாங்காக் வரை தொடர்பு கொண் டிருக்கின்றனர். இவர்களுக்காக துப் பறியும் அதிகாரிகள் நாடுநாடாகச் சென்று வேட்டையாட வேண்டியிருக் கிறது. உலகில் போதைப்பொருள் உட்கொள்ளுபவர்கள் இன்னும் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள். இப் பழக்கத்தை எதிர்த்து நடவடிக்கைகள் எடுத்திராவிடில், மேற்கூறிய எண் ணிக்கை கோடிக்கணக்கில் இருக் கும்.

ஆயினும் கடத்தலை அடியோடு ஒழிக்க இன்னும் முடியவில்லை. எல்லா நாடுகளும் இப்பிரச்னைக்கு ஒரே மாதிரி முக்கியத்துவம் அளிக்கவில்லை. உல கத்தில் பெரும் பகுதிகளில் கட்டுப் பாடுகள் இல்லை, சில இடங்களில் போதவில்லை. இங்கெல்லாம் கடத்தல் காரர்களுக்கு நல்ல வேட்டைதான்.

எல்லைகளில் கட்டுப்பாடு மிகக் கஷ்டமாக இருக்கிறது. நாட்டின் அமைப்பினலும், பிரயாணிகளின் போக்குவரத்து இப்போது மிகவும் சுலபமாக இருப்பதாலும், கடத்தல் காரர்களை போலீஸார் எளிதில் கண்டு பிடிக்க முடிவதில்லை; அவர்கள் வெகு சுலபமாகத் தப்பிவிடுகிறார்கள்.

எல். எஸ். டி. போன்ற புதிய போதைப்பொருள்கள் தயாரிப்பினல் அதிகப் பிரச்னைகள் தோன்றியிருக் கின்றன.

இதையெல்லாம் போலீஸ் சமாளித் தாக வேண்டும். அவர்களுடைய வெற்றி, சில நாடுகளின் பொருளா தார, சமூக, கல்வி அபிவிருத்தியைப் பொறுத்திருக்கிறது. கடத்தல்கார ரைக் கைது செய்வது நல்லதே. அதைவிட, போதைப் பொருள் கிடைக்காமையாலும், வாங்க ஆளில் லாததாலும், கடத்தல்காரர்களுக்கு வேலையே இல்லாமல் போய்விடுவது இன்னும் நல்லதல்லவா?

தமிழில்: பி. வி. சுப்பிரமணியன்

# அபினிலிருந்து எல்எஸ்டி வரை (தொடர்ச்சி)

புதிய உலகத்தின் பழமையான தீமையாம் கொகாய்சத்திற்கு எதிராகச் செய்யப்படும் எந்தப் போராட்ட ஏற்பாடும் சமூக, பொருளாதார நிலைகளை முன்னேற்றுவதையும், சிறந்த பரவலான கல்வியைத் தருவதையும், உடல் நலத் தரத்தை உயர்த்துவதையும், ஊட்டச்சத்தினைப் பெருக்குவதையும், தொழில் நிலைமைகளில் சீர்திருத்தங்கள் செய்வதையும். தக்க வீட்டு வசதிகள் தருவதையும், மூடநம்பிக்கைகளையும் போலிக் கருத்துக்களையும் களைந்தெறிவதையும், கருத்திற்கொண்டு செய்யப்படுதல் வேண்டும். இறுதியாக, இந்தத் தீயபழக்கத்தைப் பூண்டோடு , ஒழிப்பதற்குத் தீவிரமான கல்விப் பிரசாரம் தேவைப்படுகிறது.

மெக்ஸிகோவுக்கு மேற்கிலுள்ள ''சையர்ராமாடரில்'' உள்ள ஹியூகால் இந்தியர்கள் பெயோட்ல் . கள்ளி செடியை (காக்டஸைச்) சேகரிப்பதற்காக ஒவ்வொர் ஆண்டும் புனித யாத்திரையை மேற்கொள்ளும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள். அவர்கள், பெயோட்ல் கள்ளியின் தலையை வெட்டி எறிந்துவிட்டுச் சாறுள்ள வளையங்களைச் சூரிய வெளிச்சத்தில் உலர்த்தினார்கள். ஒருமுறை உலர்ந்த பிறகு பெயோடிலினுடைய ''மெஸ்கல் மொட்டுகள்'' என்று அழைக்கப்படும் இந்தத் துண்டுகள் உபயோகத்திற்குத் தயாராகின்றன. அவை சமயச் சடங்குகளில் முக்கிய இடம் பெற்றன.

பெயோட்ல், மாயக் காட்சிகளைக் கொண்டு வந்தது. இதனால், இதை செவ்விந்தியர்கள் வரும் நிகழ்ச்சிகளை முன்கூட்டி அறியப் பயன்படுத்தினர். 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ப்ரே பெர்னார்டினோ டிசகாகுன் எழுதிய குறிப்பு வருமாறு: ''யார் இதை உண்ணுகின்றார்களோ அவர்கள், அச்சமூட்டத்தக்க அல்லது நகைப்பூட்டக் கூடிய காட்சிகளைக் காண்கின்றார்கள். இந்தச் செடி பசி, தாகம், அச்சம் ஆகியவைகளிலிருந்து அவர்களை விடுவித்துச் சண்டையிடுவதற்கான வலிமையையும் துணிவையும் அளிக்கிறது. மேலும் இது அவர்களை எல்லா வித ஆபத்துகளிலிருந்தும் காக்கிறது என்றும் நம்பப்படுகிறது.''

இத்தகைய மனமாருட்டத்திற்குக் காரணம் 'பியோட்லி'ல் அடங்கியுள்ள ''மெஸ்காலின்'' என்னும் சக்தி வாய்ந்த பொருளாகும்.

16ஆம் நூற்றாண்டிலிருந்து மெக்ஸிகோவிலுள்ள புனித பூஞ்சக் களான்களைப் பற்றியும் அவற்றால் உண்டாகும் போதை, மரமரப்பு ஆகிய தீய விளைவுகளைப் பற்றியும் பல எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். செவ்விந்தியர்கள் அவற்றை ''ட்யோனான்காட்ல்'' அதாவது உடல் சதை என்றே அழைத்தார்கள். புனித பூஞ்சக் காளானை அப்படியே பச்சையாகச் சாப்பிட்டால் விநோத மாயக்காட்சிகளும் கனவுகளும் உண்டாகின்றன. இவற்றைத் தொடர்ந்து குதூகலம், மனக்கிளர்ச்சி அல்லது மடிமையுணர்வு, வேடிக்கைத் தோற்றங்கள், விசித்திரக் காட்சிகள் அல்லது நலமாய் இருக்கின்றோம் என்ற ஓர் உணர்ச்சி ஆகியனவும் ஏற்படுகின்றன.

மாயக்காட்சிகளை விளைவிக்கும் மெக்ஸிகோ நாட்டுப் பூஞ்சக்காளான்களுள் பெரும்பாலானவை ''சைலோசிபி'' வகையைச் சேர்ந்தவையாகும். பாரிசின் இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சி சாலையில் பணியாற்றும் பேராசிரியர் ரோஜர்ஹெய்ம் என்பவர், பகுப்பாராய்வு செய்வதற்குத் தேவையான அளவு பூஞ்சக் காளான்களைச் சோதனைச் சாலையில் வளர்த்து வழங்கினார். இது, சுவிஸ் நாட்டு வேதியியல் வல்லுநரான ஆல்பர்ட்ஹாப்மென் என்பவர் செயற்கை முறையில் பூஞ்சக் காளானை உற்பத்தி செய்வதற்கும் குறிப்பாக சைலோசிபின் என்னும் மருந்தைத் தயாரிப்பதற்கும் துணை புரிந்தது. உளநோய் வகைகளுக்குச் சிகிச்சை அளிக்க இந்த சிலோசிபின் என்னும் மருந்துதான் இன்று பயன்படுத்தப்படுகிறது. வேறு பலநாடுகளில் வளரும் வேறொரு பூஞ்சக் காளான், இற்றை நாளில் புதிய புகழ்பெற்று வருகிறது. இதுதான், 'எர்காட்' என வழங்கப்படுவது. இது, பார்லியின் மீது வளரும் ஒருவகைக் காளான். பழங்காலத்தில் மகப்பேற்றைத் துரிதப்படுத்த மருத்துவச்சிகள் இதனைப் பயன்படுத்தினர். பெருவாரியான மக்கள் நஞ்சு அருந்தக் காரணமாகவும் அமைந்ததால் இதனை ''புனித அந்தோனி நெருப்பு'' என்றும் கூறினார்கள்.

எர்காட்டின் ஒரு கிளைப்பொருளின் உருகுநிலையை ஆராய்ந்து கொண்டிருந்த ஆல்பர்ட் ஹாப்மென் என்பவர் 1943ஆம் ஆண்டில், ஒரு விந்தைப் பொருளைக் கண்டுபிடித்தார். இதுவே எல்எஸ்டி—25 என்னும் புது மருந்தாகும். இம்மருந்து உலகிலேயே பெரும் பரபரப்புக்குக் காரணமாய் அமைந்தது.

இந்த அளவுக்கு எல்எஸ்டியைப் போல் பல விவாதங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் தப்பு எண்ணங்களுக்கும் உடனடிக் காரணமாக இன்று வேறு சில மருந்துகள் மட்டுமே இருந்து வருகின்றன. எல்எஸ்டி உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடியது என்பது உறுதியே தவிர, அது மருத்துவத்திற்கும் பயனுள்ளதாக இருக்கக் கூடும் என்பதற்கு சான்றில்லை.

எல்எஸ்டி என்னும் மருந்தைத் தனிக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கவேண்டும், அங்கீகாரம் பெற்ற அறிவியல் மருத்துவ ஆராய்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்தப் படவேண்டும் என ஐக்கிய நாட்டுப் பொருளாதார சமுதாய நலக்குழு பரிந்துரைத்திருக்கிறது. ஹலுசினோஜின்களைத் (சிறப்பாக எல்எஸ்டியைத்) தீய வழியில் பயன்படுத்துவதை வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வாழும் மக்கள், பன்னாட்டு மக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள்.

அனைத்து நாட்டுக் கட்டுப்பாட்டுக்கு உட்படாத பொருள்களின் பிரச்னை குறித்து ஆராய்ச்சி நிகழ்த்த ஐ.நா. கமிஷனால் நிறுவப்பட்ட ஒரு தனிக்குழு, எல்எஸ்டி எனும் பொருள் மிக நெருக்கடியான பிரச்னைக்குக் காரணமாக இருக்கிறதென்றும், உடனடியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய அளவுக்கு அதன் உபயோகமும் தீய விளைவுகளும் பரவி வருகின்றன என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

தமிழில்:
டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன்

# எல்எஸ்டி

(20ம் பக்கத் தொடர்ச்சி)

றனர். இந்நிலை குறுகிய காலமே காணப்படும் எனினும், சில வேளை அதிக நாட்களும் இருக்கக்கூடும். ஒரே சொட்டு எல். எஸ். டி மருந்து கலக்கப்பட்டிருந்த ஒரு சர்க்கரைக் கட்டியை உட்கொண்ட ஐந்து வயது சிறுமி தன் மனநிலையை முற்றிலும் இழந்தாள். அதன்பிறகு அவள் நல்ல உடல்-உளநிலையெய்த ஒன்பது திங்கள்கள் தேவைப்பட்டன.

இன்னும் விளக்கமாகக் கூறவேண்டுமெனில், நல்ல உடல்நிலையிலுள்ளவர்களும் கூட எல். எஸ். டி. மருந்து உட்கொண்டால், பொறுப்பற்றவர்களாகி, கொலை, தற்கொலை முதலியன செய்யத் துணிவு பெறும் ஆபத்தான நிலை ஏற்படுகிறது.

இருந்தும், இந்த எல். எஸ். டி.க்கு ஏன் இவ்வளவு விளம்பரமும், ஈடுபாடும் ஏற்பட்டதென்பதற்கு விடை மிகவும் எளிதானதொன்றுதான். மனிதனின் அறியும் ஆர்வத்திற்கும், நூதன புதிய அனுபவங்களைப் பெற விரும்பும் இச்சைகளுக்கும் எல்லையே இல்லை. சமூக கோட்பாடுகளினாலும், நம் முயற்சி இன்றியே நமக்குச் சமுதாயத்தில் கிடைத்துள்ள நிலையினாலும், சுவையற்ற மாறுபாடற்ற ஒரே தன்மையான அலுவலகப் பணிகளாலும், நாமே பல நேரங்களில் வெறுப்பும் சலிப்பும் அடைகிறோம்.

இத்தகைய நிலைகளிலிருந்து குறுகிய காலத்திற்கோ அல்லது நீண்ட காலத்திற்கோ விடுபடுவதற்கென வெறி உணர்வு ஊட்டும் பொருள்கள் இருந்து வந்தன என சரித்திர வாயிலாகவும் அறிகிறோம்.

எல். எஸ். டி.யும், இதைப்போன்ற சிலோசிபின், மீங்கலின், இந்திய ஹம்ப் முதலிய கற்பனைத் தோற்றங்களையும், எண்ணங்களையும் கொடுக்கும் மருந்து வகைகள், மனிதனின் உணர்ச்சி நரம்புகளைத் தூண்டி விடுவதன் மூலம், அவனைச் சகலவிதமான கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை அளிக்கவல்லன. ஒரு விநாடி நேரம் விடுதலை உணர்வும், புத்துயிர்பெற்ற உணர்வும், வாழ்வின் தளைகளிலிருந்து விடுபட்ட உணர்வும் ஏற்படலாம். ஆனால் சிறிது நேரத்திற்குள்ளாகவே இவ்வயனைத்தும் பொய் தோற்றம் என்பது தெளிவாகும். குடிப்பழக்கம் மனிதனை இருட்டறையில் சிறைபடுத்துகிறதே தவிர, அவனுக்குத் துன்பச் சூழலிலிருந்து நிரந்தர விடுதலை அளிப்பதில்லை.

எல். எஸ். டி. போன்ற உளநோய் மருந்துகளைக்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்துவதன்மூலம், மனித ஆத்மாவைப்பற்றிய புதிய முக்கிய உண்மைகளைக் கண்டறிய முடியும் என சிலர் கூறியிருக்கிறார்கள். எனினும், இது வரையிலும் அத்தகைய நிகழ்ச்சிகள் ஒன்றும் நடைபெறவில்லை. மனிதனின் அடி உணர்வுத்தளம் ஒரு எரிமலை போன்ற தென்றும், அதில் குறுக்கீடு செய்யத்துணியும் அறிவிலிகள், பெரும் ஆபத்துக்களைத் தாமாகவே தேடிக் கொள்பவராகின்றனர் என்ற உண்மை தான் இத்தகைய ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

தமிழில்:
டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன்

# மனதை மாற்றும் மயக்க மருந்துகள் (17ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவில் பயன்படுத்தப்படும் இம்மருந்துகள் திருட்டுத்தனமாக வினியோகம் செய்யப்படுகின்றன. இவற்றுக்குத்தக்க அளவு வைத்திய மேற்பார்வை இல்லை. இவற்றின் அளவைக் குறிப்பாகக் கணக்கிட இயலாது. மேலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இம்மருந்துகளின் உற்பத்தியும் உபயோகமும் ஆண்டிற்கு 10 சதவீதமாக அதிகரித்துக்கொண்டே போகின்றது.

பொதுவாக மக்கள்தொகையை ஆராயும்போது, பெரும்பாலான நகர மக்கள் இம்மருந்துகளை உபயோகிப்பது தெரியவருகிறது. வைத்தியர்களிடமிருந்து மருந்துக் குறிப்பின் மூலமாகவோ அல்லது வீட்டு மருந்தைப் போலவோ இம்மருந்துகள் அருந்தப்படுகின்றன. முக்கியமாக வாலிபர்களிடையே திருட்டுத்தனமாக இம்மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. அவர்களது எண்ணிக்கை மேலும் பெருகிவருகிறது. கெனபிஸ், ஆம்பிடாமின்ஸ், மற்றும் இதர ஹல்யூஸினோஜன்கள் அமெரிக்காவில் குறிப்பாக பிரபலமடைந்து வருகின்றன.

கல்லூரி மாணவர்களிடையே செய்யப்பட்ட ஆராய்ச்சி இத்தகைய போதைப் பொருள்கள் திருட்டுத்தனமாக அருந்தப்படுவதை வெளியிடுகிறது. ஆனால் அவை எப்போதேனும் பயன்படுத்தப்படுகின்றன; பெருமளவிலல்ல. ஆம்பிடாமின்ஸ் மருந்துகள் 25 சதவீத மாணவர்களிடையேயும், கனபிஸ் 21 சதவீதத்தினரிடையேயும், ஹால்யூஸினோஜன்ஸ் மருந்துகள் 5.6 சதவீதத்தினரிடையேயும் பயன்படுத்தப்படுகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உளவியக்க மருந்துகள் பரந்த அளவிலே பயன்பட்டு வருகின்றன. இவை தக்க மேற்பார்வை இல்லாமலும் திருட்டுத்தனமாகவும் நடைபெறுகின்றன. ஆதரவு நிலை அல்லது அபாயகரமான நடத்தை போன்ற சீர்கெட்ட விளைவுகள் அதிகமாகக் காணப்படுவது கவலைக்குரியதாகும். பெரும்பான்மையான மக்கள் இவற்றை அபாயமின்றிப் பயன்படுத்தி வருகின்றனர். இவற்றின் விளைவுகளுக்குட்படுபவர்கள் ஏற்கனவே தன்மயக்குறைகள், வறுமை, சமுதாய நிராதரவு போன்றவற்றுக்கு வசப்பட்டிருக்கக்கூடும்.

எனினும் சீர்ப்பட்ட சமுதாயச் சூழ்நிலையில் வாழும் ஆரோக்கிய மக்களும் கூட இம்மருந்துகளை உபயோகித்தவுடனேயோ அல்லது நீண்டகால உபயோகத்திற்குப் பின்னரோ கோளாறுகட்கு உட்படக்கூடும். எனவே வைத்திய மேற்பார்வையின் தேவையும் தனிப்பட்ட முறையில் முன்னெச்சரிக்கையும் அவற்றைப் பயன்படுத்துவதில் அவசியமாகின்றன.

இம்மருந்துகளைப் பிரயோகிக்கும் அளவும், அதனால் எழும் பிரச்னைகளும் நாட்டுக்கு நாடு மாறுபடுகிறது. தொழில்துறையில் முன்னேற்றம் கண்டுள்ள நாடுகளில் செயற்கை மருந்துகள் அதிகமாகவே பயன்படுத்தப்படுகின்றன. அவற்றை வாலிபர்கள் திருட்டுத்தனமாய் அருந்தி வருவதையும் காணலாம். ஜப்பான், ஸ்வீடன், இங்கிலாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளில் ஆம்பிடாமின் மருந்து தவறான முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதாய்ச் சொல்லப்படுகிறது.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் கனபிஸையும் ஹல்யூஸினோஜன் மருந்துகளையும் திருட்டுத்தனமாகப் பயன்படுத்துவோர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆப்பிரிக்க நகரங்களில் கனபிஸும் ஆம்பிடாமினும் வாலிபர்களிடையே பழக்கத்தில் உள்ளது. தொலைவிலிருக்கும் நேபாளம் ஆப்கானிஸ்தான் முதலிய நாடுகளிலும் 'ஹிப்பி' யாத்திரிகர்கள் அதிகரிப்பதால் இந்த மருந்து அருந்தும் பழக்கம் வாலிபர்களிடையே பரவிவிடக்கூடும் என்று அதிகாரிகள் கவலைப்படுகின்றனர். இதனால் சமூகத்துக்கு எந்தவிதப் பயனும் இல்லை; உளவியல்பைக் குறைத்து ஆரோக்கியத்திற்கே ஊறு நேரலாம் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

இவற்றின் போக்கைக் கணிப்பதில் பரந்த சீர்ப்பட்ட நோக்கு தேவையாகும். உளயியக்க மருந்துகள் மருத்துவத்தில் வெகுவாகப் பயன்படக்கூடியவை. எனவே இவைபோன்ற மருந்துகள் மேலும் மேலும் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்திற்கு வரக்கூடும். நகர வாழ்க்கையில் மருந்துகளைப் பயன்படுத்துவது அதிகமாகியே தீரும். மக்களது மனோதிடக் குறைவையும் நரம்புத்தளர்ச்சியையும் அகற்றுவதில் இவை ஓரளவு பயன்படக்கூடும். மருந்துகளைத் தம்மிலேயே பரிசீலனை செய்து கொள்ளும் பழக்கம் வாலிபர்களிடையே இயல்பாக இருந்துவரும். இம்மருந்துகள் எளிதில் கிடைக்கும் இடங்களில் இத்தகைய பரிசோதனைகள் அடிக்கடி நடத்தப்படுவதில் வியப்பில்லை. ஆனால் அதனைத் திருட்டுத்தனமாகப் பெருமளவில் அருந்துவதோடு இப்பரிசோதனைகளையும் இணைத்துவிடக்கூடாது. ஹிப்பிகளும் நீண்டகாலம் ஹஷீஷ் தின்னும் பழக்கம் உடையவர்களும் இவ்வாறு அருந்துவதை இயல்பான நிகழ்ச்சி என்று கூற இயலாது.

கிரமத்துக்குமேல் அருந்தும் இரண்டாவது வகை தொடர்ந்து நடைபெறக்கூடும். சுகாதார அதிகாரிகளுடைய குறிக்கோளும், ஒழுக்கத் திட்டங்களை வகுத்துத் தருபவர்களுடைய குறிக்கோளும், இம்மருந்துகளுடைய உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதிலும், மருந்துகளுடைய விரயத்தைக் கட்டுப்படுத்துவதிலும், மருந்துகளுடைய உபயோகத்தை வைத்திய மேற்பார்வையுடைய சிகிச்சைக்கு மட்டும் அனுமதிப்பதிலும் இருக்கவேண்டும். மேலும் இம்மருந்துகளால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான வைத்திய வசதி இவற்றைப் பற்றிய ஆராய்ச்சிக்கு ஆதரவு, மற்றும் கல்விப் பயிற்சி மூலமாய் வைத்தியர்கட்கும், பொது மக்களுக்கும் வளரும் வாலிபர்கட்கும் இவ்விஷயத்தைப் பற்றிய அறிவைப் பெருக்குதல் ஆகியவை அவர்களது குறிக்கோளாக விளங்கவேண்டும். வலுப்பெற்ற உளயியக்க மருந்துகள் மேலும் தோற்றுவிக்கக்கூடிய விளைவுகளைப் பற்றியும் இவர்கட்குத் தெரிவிக்கவேண்டும்.

தமிழில்:

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

## யுனெஸ்கோ செய்தியறையிலிருந்து

- 1967ல் 80000 பேருக்கு பெரியம்மை கண்டது. (1963ல் 123000) என்று உலக சுகாதார ஸ்தாபன அறிக்கை கூறுகிறது. 1977க்குள் பெரியம்மையை முழுவதுமாக அகற்றிவிட இந்த ஸ்தாபனம் உறுதி கொண்டுள்ளது.
- சேமித்து வைக்கப்படும் தானியங்களுக்கு பூச்சிகளால் ஏற்படும் சேதத்தை தடுக்க இந்திய சர்க்காரும் உலக விவசாய அமைப்பும் ஒரு ஐந்தாண்டு முயற்சியை மேற்கொண்டுள்ளன. இதற்கு ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் 11 லட்சம் டாலர் நிதி உதவியுள்ளது.
- ஆப்ரிக்காவில் புத்தகத் தயாரிப்பை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் அண்மையில் 23 ஆப்பிரிக்கா நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கானா நாட்டிலுள்ள அக்ராவில் நடைபெற்ற யுனெஸ்கோ கூட்டத்தில் இவ்வாறு செய்யப்பட்டது.
- யுனெஸ்கோ தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற 60 நாடுகளைச் சேர்ந்த பொறியியல் நிபுணர்கள் கூட்டத்தில் பொறியியல் ஸ்தாபனங்களின் உலக கூட்டமைப்பு ஏற்படுத்தப் பட்டது.

### மொழி பெயர்ப்பில் முதலிடம்

அதிக அளவு நூல்களை மொழி பெயர்ப்பதில் உலகில் சோவியத் யூனியன் முதலிடம் வகிக்கிறது. ஆண்டுக்கு 3968 நூல்கள் அங்கு மொழி பெயர்க்கப்படுகின்றன. இது குறித்து . யுனெஸ்கோ வெளியிட்டுள்ள புத்தகத்தில் 1966ல் 70 நாடுகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள 39 367 நூல்களின் பெயர் இடம் பெற்றுள்ளது. சோவியத் யூனியனுக்கு அடுத்த படியாக யூகோஸ்லாவியா 3452 நூல்களை மொழி பெயர்த்துள்ளது இந்நாட்டில் 1964க்குப் பிறகு புத்தக வெளியீடு இரு மடங்காகியுள்ளது. அமெரிக்காவில் 2069 நூல்களும் ஸ்பெயினில் 2429 நூல்களும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. அதிக அளவு மொழி பெயர்க்கப்படுபவை லெனினுடைய நூல்கள் தான். ஜார்ஜ் சிமியோனும் டால்ஸ்டாயும் அடுத்த இடம் வகிக்கிறார்கள். 1966ல் பைபிளின் 197 மொழி பெயர்ப்புகள் வந்துள்ளன.

### வரலாற்று நகருக்கு விமான நிலையம்

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட புகழ் பெற்ற நகரான மொகன்ஜோதாடோவில் அண்மையில் விமான நிலையம் அமைக்கப் பட்டுள்ளது. சிந்து வெளி நாகரிக சிறப்பைக் கூறும் இந்நகரம் கராச்சியிலிருந்து 300 மைலில் உள்ளது. 4000 ஆண்டுக் காலத்துக்கு முற்பட்ட இந்நகரின் அகழ்வாராய்ச்சி 1920ல் தொடங்கியது. ஆயினும் ஆராய்ச்சி உண்மைகள் அண்மைக் காலம் வரை நிபுணர்களையன்றி மற்றவர்களால் அறியப்படவில்லை.

### கூடன்பர்க் நினைவுக்கு அஞ்சலி

15ம் நூற்றாண்டின் அரிய புத்தகங்களும் கையெழுத்துப் பிரதிகளும் மான்செண்டரிலுள்ள ஜான் ரைலண்ட்ஸ் நூலகத்தில், ஐரோப்பாவில் அச்சுக் கலையின் தந்தையான ஜான் கூடன்பர்க் 500வது ஆண்டு விழாவையொட்டி காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. 1460ல் ஹாம்பெர்க்கில் அச்சிடப்பட்ட 36 வரி பைபிளும் இதில் உள்ளது. இந்நூலின் 11 பிரதிகளே உலகில் இருப்பதாகக் கருதப்படுகிறது.


Edited and published by S. Govindarajulu for the Southern Languages Book Trust, 441, Poonamallee High Road, Madras-10 and printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-26.

## அண்ட வெளி யுகத்தில் செய்திப் போக்குவரத்து

**பொது தொடர்புக்கு செயற்கை கோள்களை பயன்படுத்துதல்**

"அண்டவெளி செய்தித் தொடர்பு ஓர் அற்புதமான சாதனையாகும். நமது அன்றாட வாழ்வைப்பெரிதும் பாதிக்கப்போகும் ஒன்றாகும் அது." இந்நூலில் அறிஞர்கள் அண்ட வெளி யுகம் பற்றியும், செய்தி அனுப்புவது பற்றியும் கல்வி, கலாசாரப் பரிவர்த்தனைக்கு அதனைப் பயன்படுத்துவது பற்றியும் ஆராய்கிறார்கள்.

*(1968 பிப்ரவரி யுனெஸ்கோ கூரியர் இதழ் காண்க)*

**200 பக்கங்கள் $ 4.00. 20 stg.**

## கல்வியின் பொருளாதாரம்

பொருளாதார வளர்ச்சியில் கல்வியின் பங்கு குறித்து அறிஞர்கள் எழுதியுள்ள விரிவான ஆய்வுக் கட்டுரைகள். கல்விமான்கள், பொருளாதார வாதிகள், சமூக இயல் வாதிகளுக்குப் பெரிதும் பயனுள்ளவை.

மேரி ஜான் போபன் (சிகாகோ பல்கலைக் கழகம்) மைக்கேல் டெபவாய்ஸ் (பாரிஸ் பல்கலைக் கழகம்) வி. ஈ கொமராவ் (மாஸ்கோ உலகப் பொருளாதாரக் கழகம்) ஜான் வெய்ஸி (ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம்) ஆகியவர்கள் தேர்ந்தெடுத்துள்ள கட்டுரைகள் உள்ளன.

945 பக்கங்கள் $ 3.50. 21 stg.

கிடைக்குமிடம்: யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் கமிஷன் புது டில்லி.

# வாசகர்களுக்கு

யுனெஸ்கோ கூரியரின் தமிழ்ப்பதிப்பு இதுவரை பதினோரு இதழ்கள் வெளி வந்துள்ளன. ஒவ்வோர் இதழும் தனி சிறப்புடன் திகழ்ந்து வாசகர்களின் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஜூலை இதழில் தென்னாப்பிரிக்கா அரசாங்கம் கடைப் பிடித்து வரும் இன ஒதுக்கல் கொள்கையின் கேடுகள் நன்கு விளக்கப்பட்டிருந்தது. எழுதும் கலை தோன்றி வளர்ந்த வரலாற்றை முழுவதுமாக ஆராயும் அரிய கட்டுரைகளையும் படங்களையும் கொண்டதாக ஆகஸ்ட் இதழ் அமைந்தது. பண்டை வரலாற்றுச் சிறப்பைக் காட்டும் கட்டுரைகள் செப்டம்பர் இதழில் இடம் பெற்றன. அக்டோபர்-நவம்பருக்கான விசேஷ இரட்டை இதழ் போரினால் ஏற்படக்கூடிய கேடுகளை விளக்கி உலகில் அமைதி நிலவ வேண்டியதன் அத்தியாவசியத் தேவையை உள்ளத்தைத் தொடும் விதத்தில் எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

சோவியத் யூனியன் அக்டோபர் புரட்சியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியதையொட்டி கல்வி, விஞ்ஞானம், கலாசாரத் துறைகளில் அந்நாடு அடைந்துள்ள சாதனைகளை விளக்குவதாக டிசம்பர் இதழ் வெளி வந்தது.

பாரத நாட்டின் மாபெரும் இதிகாசங்களான 'ராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டைப் பற்றியும் ஆய்வுக் கட்டுரைகளையும் அழகான படங்களையும் கொண்டதாக ஜனவரி இதழ் வெளிவந்தது. 12 பக்க வண்ணப் படங்கள் இதன் சிறப்பு அம்சமாகும்.

பிப்ரவரி இதழில் மனித உரிமைகளைப் பற்றிய அரிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. விஞ்ஞானம் ஒரு பண்பாடு என்பதை மார்ச் இதழ் விளக்கியது. 'நமது வருங்கால ஆரோக்கியம்' பற்றிய கட்டுரைகளைக் கொண்டதாக ஏப்ரல் இதழ் வெளிவந்தது. மே இதழில் எழுத்தறிவு பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன.

பல துறைகளிலும் அக்கறையுள்ளவர்களுக்கு அரிய கருத்துக்களை வழங்கும், சர்வதேச உணர்வை வளர்க்கப் பாடுபடும் 'யுனெஸ்கோ கூரியர்' எல்லோர்க்கும் ஏற்றதொரு வெளியீடாகும். உலகைக் காண விரும்பும் அறிவுத் தாகம் கொண்டோர்க் கும் கல்வி நிலையங்களுக்கும் பெரிதும் பயன்படும் பத்திரிகை. சர்வ தேசத் தரத்துக்கு சற்றும் குறையாத விதத்தில் கண்கவர் அமைப்புடன் சிறப்பாக வெளியிடப்படுகிறது.

சந்தா செலுத்தி மாதந்தோறும் வீடு தேடி வர ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.

ஆண்டுச் சந்தா ரூ. 10.50 கல்வி நிலையங்களுக்கு 9-50.

**யுனெஸ்கோ கூரியர்**
441, பூந்தமல்லி நெடுஞ்சாலை
எழும்பாக்கம் சென்னை-10.

July 67 to Jun 1968
140 | 5 | 2   9-2-69

REGD. NO. M. 8276

# சர்வதேச போலிசும் மருந்துகள் கள்ளக் கடத்தலும்

Photo © Lynn Pelham - Holmès Lebel

மயக்க மருந்துகளுக்கு அடிமையாகி விடுவது வெகுகாலமாகவே பொது நல அதிகாரிகள் சமாளிக்க வேண்டிய பிரச்னையாக இருந்து வருகிறது. அண்மைக் காலத்தில் தொழில் வளமிக்க நாடுகளில் இப்பழக்கத்தில் ஒரு முக்கிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அமைதிப்படுத்தும், கிளர்ச்சியூட்டும், நோவகற்றும் மருந்துகள் இப்போது பெருமளவில் உற்பத்தியாகின்றன. ஏராளமான பேர் 'போதை' யூட்டிக்கொள்ள இவற்றைப்பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அபின், கொக்கெய்ன், கஞ்சா போன்று இப் பொருள்கள் இன்னும் சர்வதேசக் கட்டுப்பாட்டின் கீழ் வரவில்லை. ஆயினும் எல்லா நாடுகளிலும் வைத்தியர்கள் எழுதித் தந்தாலன்றி இவற்றை விற்பனை செய்யக் கூடாது என்ற தடை உள்ளது. இந்த மருந்துகளில் பெருமளவில் திருட்டு வியாபாரம் இப்போது நடைபெறுகிறது. படத்தில் காண்பது கள்ளகடத்தல் காரனை போலிசார் விசாரிக்கும் காட்சி (இன்டர்போல் செக்ரடரி ஜெனரல் கட்டுரை இந்த இதழில் உள்ளது.)

